
இந்த இதழில்:
ஜாங்கோ ஜக்கு
சித்திரத் தொடர் ஆரம்பம்
கல்கி
KALKI
8-10-1972
45 காசு
ராஜு



Dig the new Century X-citement

Join the new X-citement ! Like wear up a Century Saree with new flair. Like turn a saree into a kaftan; a kurta; a lungi. Try the Century range from Anuradha, Vinodini, two x two Monica... **You'd never believe they're cotton !**

Century—for 100% cotton textiles

THE CENTURY SPG. & MFG. CO. LTD., WORLI, BOMBAY-25 DD.

Adroit/CM/272B

வாழ்க்கையே ஒரு சதுரங்கம். ஒவ்வொரு கட்டமும் சோதனை. சோதனைகளை விலக்கி வெற்றி வாகை சூட தேவை தன்னம்பிக்கை. மேலும் அதனை ஊக்குவிக்க...லவ்லின் ஷர்ட்டிங்குங்கள், எலகன்ஸா சூட்டிங்குகள் அணியுங்கள் தன்னம்பிக்கை—லவ்லின் எலகன்ஸா.

இதர தயாரிப்புகள்:
நியூ மிர்ராபோ புடவைகள் ●
ஸ்டேலாங்கர், ஸ்ட்ரேஞ்சர் ஷர்ட்டிங்குகள் ●
சில்வர்லைன், சில்வர் கிங் வேஷ்டிகள் ●
மல் ● காடா

வெற்றிக் கட்டத்தில் அடியெடுத்து வையுங்கள்!



உங்கள் குடும்ப நண்பன்... CCM

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

மார்க்கெட் செய்பவர்கள்:
வெங்கடேஷ் வஸ்திராலயா

ஹென்னுல்

மீண்டும் கிடைக்கிறது

வெகுகாலமாகவே அமோகமாக விற்பனையாகி வரும் கேசத்தை கருமையாக்கும் சாதனம். உங்கள் கேசத்தை இயற்கையான மற்றும் நிரந்தரமான கருமையுடனும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

உடல்நலக் குறைவினால் ஏற்படும் இளமை நரையைப்பற்றியோ, அல்லது வயோதிகத்தில் ஏற்படும் நரையைப்பற்றியோ கவலையடைய வேண்டாம். **ஹென்னுல்** தற்போது உங்களுக்கு மீண்டும் கிடைக்கிறது. அது உங்களது கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிப்பதுடன், பூரண ஆரோக்யத்துடன் இளமையான தோற்றத்தை அளிக்கிறது.

கேசத்தின் அடி வேர்களுக்கு போஷாக்கு அளித்து, செழிப்பாக வளரவும், காலக்கிரமத்தில் கேசம் இயற்கையான கருமையுடன் கூடியதாக இருக்க உதவுமாறும், அனேக பொருட்கள் சேர்ந்து தயாரிக்கப்படுவது **ஹென்னுல்.**

சாதாரணமாக கடைகளில் கிடைக்கும், கேசத்தை கருமையாக்கும் இதர சரக்குகளை போல அல்ல, **ஹென்னுல்.** இது தனித்தன்மை வாய்ந்தது.

1. நிரந்தரமாக நரையை தடுப்பதுடன்; உங்களைப் பல வருடங்கள் இளமையான தோற்றத்துடன் விளங்கச் செய்கிறது.

2. இயற்கையான கருமையுடன் செழிப்பாக புது கேசம் வளர உதவுவதோடு, அதை வலுவடையவும் செய்கிறது.

ஹென்னுல் உபயோகிக்கும் முறை

ஹென்னுலில் உள்ள, கேசத்துக்கு போஷாக்கு அளிக்கும் சத்துக்கள் கேசத்தின் வேர்க்கால்களில் நன்கு ஊறி, கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிக்க வேண்டி, போதிய கால அவகாசம் அளிக்க வேண்டும். மூன்று மாத காலம் போதுமானது. இந்தக் கால கெடுவில் கேசம் இயற்கையான கருமை நிறத்தை அடைகிறது. **ஹென்னுல்,** கேசத்தை கருமையடையச் செய்வது மட்டுமல்ல, அது கேசத்திற்கு போஷாக்கும் அளிக்கிறது; கேசத்தை அழகுறச் செய்ய மிகவும் முக்கியமான சாதனம்.

ஹென்னுலை உபயோகிக்க ஆரம்பித்த ஒரு சில வாரங்களிலே ஒரு புதிய மாறுதலைக் காண்பீர்கள். இதற்கு முன்பு காணப்படாத ஒரு பளபளப்புடன் உங்களது கேசம் பிரகாசிக்கும். உங்களது நண்பர்கள் உங்களைக் கண்டு பிரமித்துப் போவார்கள். உங்கள் தன்னம்பிக்கையின் சக்தி வளர்ந்து பல மனிதர்களையும், விஷயங்களையும் நிர்வகிக்கும் திறமையைப் பெறுவீர்கள். எவ்வளவு வயது அடைந்தவராக இருப்பினும், **ஹென்னுல்** கைவசமிருந்தால் கவலை வேண்டாம். உங்களது தொழிலில் மற்றும் சமூகத்தில் வெற்றி வாய்ப்பு நிச்சயம்.

உங்களது கேசம் தொடர்ந்து கருமையாக இருக்க **ஹென்னுலை** வழக்கமாக உபயோகியுங்கள். நீங்கள் தேர்ந்து எடுக்க மூன்று ரக **ஹென்னுல்** உள்ளன. **ஹென்னுல்** (எண்ணெய்) **ஹென்னுல்** (பசையற்றது) **ஹென்னுல் பொமேட்** இந்த மூன்று ரகங்களும், யாவருக்கும் ஏற்றவாறு, வாசனை சேர்க்கப்பட்டுள்ளது. **ஹென்னுல்** (எண்ணெய்) வறட்சியான, மற்றும் சுருண்ட கேசத்திற்கு விசேஷமாக ஏற்றது. நீண்டகால நரைக்கு நல்ல பலனளிக்கக் கூடியது **ஹென்னுல் பொமேட்.**

நல்ல பயனை அடைய தலையை சுத்தமாகக் கழுவ வேண்டும். வாரம் இருமுறை பியர்லைன் பாரிஸின் விசேஷ தயாரிப்பான **சில்கோ ஹேர் ஷாம்பு** போட்டுத் தலையை சுத்தம் செய்யுங்கள்.

இன்றே **ஹென்னுல்** வாங்குங்கள். வருங்காலத்தில் இளமையுடன் விளங்குவீர்கள்.

தயவுசெய்து கடுதப் போக்குவரத்தை ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளவும்

ஹென்னுல் தயாரித்து வெளியிடுபவர்கள்:


பியர்லைன் - பாரிஸ் பிரைவேட் லிமிடெட், தபால் பெட்டி எண். 493, பம்பாய்-1

Pearline - Paris Private Limited, P. O. Box 493, Bombay -1

ஸ்ரீராமனிடமும், அர்ஜுனனிடமும் நான் எடுக்க எடுக்கத் தானே நிரப்பிக்கொள்ளும் அம்புக்கூடுகள் இருந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா?



இந்துப் புராணத்தின்படி, ஸ்ரீராமனும், அர்ஜுனனும் தீராத அம்புகளைத் தாக்கூடிய அம்புக்கூட்டை வரமாகக் கிடைக்கப் பெற்றிருந்தார்கள். அம்புகள் தீர்ந்ததும் கூடு தானாகவே நிரம்பிவிடும். அதுபோல, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறைந்த தற்காலத்தில், சமமாக பம்பை ஓட்டவோ, நிறுத்தவோ அவசியமின்றி பிரெஷரின் மூலம் குளிர்ந்த, சுத்தமான நீர் உங்களுக்குக் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது. வாஸ்ப் அல்லது மையர்ஸ் எஜெக்டோ பம்ப்பை ப்ரெஷர் டாங்குடன் நில மட்டத்தில் பொருத்தவும். ப்ரெஷர் டாங்கிலுள்ள தண்ணீர் தீர்ந்தவுடன் குளிர்ந்த, சுத்தமான நீர் தானாகவே நிரப்பிக் கொண்டு விடும். ஓவர்ஹெட் டாங்கிற்கு அவசியமே இல்லை. பணத்தையும், இடத்தையும் மிச்சப்படுத்துங்கள். ஆட்டோமேடிக் ஸிஸ்டம் இணைந்த எஜெக்டோ பம்ப்பை தண்ணீர் உள்ள எந்த இடத்திலும் பொருத்தலாம்—அதாவது பூமிக்கடியில் உள்ள டாங்க், திறந்த கிணறு குழாய்க்கிணறு, ஆறு, ஏரி முதலிய இடங்களில். வாஸ்ப் அல்லது மையர்ஸ் எந்தவித உபயோகத்திற்கும் சிறந்த பம்புகள்.



வாஸ்ப் அல்லது **மையர்ஸ்**

எந்த நோக்கத்திற்கும் ஏற்ற பம்புகள்

விபரங்களுக்கு தொடர்பு
கொள்ளவேண்டிய முகவரி:
வாட்டர் சப்ளை
ஸ்பெஷலிஸ்ட்ஸ் பிரை. லிட்.
330, தம்பு செட்டித் தெரு
சென்னை-1

WS-1418 TM

உறுதியான கட்டடங்கள் : கிராமங்களில் - 2

கல்கி
பொருளடக்கம்



பரிதாபி, புரட்டாசி 22 ○ அக்டோபர் 8, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 32

இதழ் 10

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

ராமாநுஜம் என்ன சொன்னார்?

தொழிலாளர் யூனியன்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றியும், அவற்றின் சமீப காலப் போக்குகள் குறித்தும், இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ஜி. ராமாநுஜம் சென்னை ரோட்டரி சங்கத்தில் பேசிய போது வெளியிட்ட கருத்துக்கள் கவனத்துக்கு உரியவை.

தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இப்போதெல்லாம் கோரிக்கைகளை மேன்மேலும் அடுக்கிக்கொண்டே செல்வதிலும், அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முனைவதிலுமேதான் நாட்டம் கொண்டுள்ளது.

தொழில் உற்பத்திக்கும், உற்பத்திப் பெருக்குக்கும் தாங்கள் ஆற்ற வேண்டிய பெரும் பங்கு ஒன்று உண்டு என்பதையும், கட்டுப்பாடு, ஒழுங்கு முறை, ஒத்துழைப்பு போன்ற அம்சங்களிலும் தங்களுக்குப் பங்கு உண்டு என்பதையும் சில தொழிலாளர் சங்கங்கள் மறந்தே விட்டாற் போலிருக்கிறது.

செல்லாக் காசு நல்ல காசுகளையும் புழக்கத்திலிருந்து விரட்டிவிடுவது போல் சில தரக்குறைவான தொழிற் சங்கங்கள் பல நல்ல சங்கங்களையும் செயல்படவொட்டாமல் செய்கின்றன. இது தனியார் துறைத் தொழில்களில் மட்டும் காணப்படும் நிலைமை அல்ல; சர்க்கார் துறைத் தொழில்களிலும் இதே லட்சணம்தான்!

''வாங்கும் சம்பளம் ஆஜராவதற்கு; வேலை செய்வதற்கு ஓவர்டைம் என்ற ரீதியில் தொழிலாளர் இயக்கம் நடைபெறுகிறது'' என்று ஹாஸ்ய உணர்ச்சியுடன் திரு ராமாநுஜம் சொன்னார்.


தமிழ் நாட்டுத் தொழிற்சாலைகளில் நிலவும் அமைதியின்மையைக் கருத்தில் கொண்டு, இதற்குப் பரிகாரமாக தி.மு.க. ஆதரவுடன் செயல்படும் தொழிலாளர் சங்கங்களையும் யூனியன்களையும் அடியோடு கலைத்துவிட்டால்கூட நல்லதென்று ஆலோசனையும் தெரிவித்தார்.


மற்ற அரசியல் கட்சிகளான கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்டு, காங்கிரஸ், சோஷலிஸ்டு போன்ற கட்சிகள் தங்களுக்கென்று தொழிலாளர் யூனியன்கள் அமைத்துக் கொண்டு செயல்பட்டு வருகையில், அவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு, தி.மு.க. தொழிலாளர் யூனியன்களை மட்டும் கலைத்து விடலாம் என்று தாம் கூறிய ஆலோசனைக்கு தி.மு.க. மேலிடத்திலிருந்து ஆட்சேபம் வரும் என்று அவர் எதிர்பார்த்தே அதற்கு விளக்கமும் கொடுத்திருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சி யூனியன்கள் மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் நாடு சுதந்திரம் பெற்ற பின், உற்பத்தியைப் பெருக்கவும் போரினால் ஏற்பட்ட தொழில் சேதங்களைச் செப்பனிடவும் ஒரு தொழிலாளர் இயக்கம் தேவைப்பட்டது. அப்போது தோன்றியதுதான் இந்திய தேசியத் தொழிற்சங்க காங்கிரஸ். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது இந்தத் தொழிற்சங்கம். இதற்கும் மிகச் சமீபகாலத்தில் தோன்றிய தி.மு.க. யூனியன்களுக்கும் வித்தியாசம் உண்டு என்று தமது கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார் திரு ராமாநுஜம்.

யார் சொன்னார்கள் என்பதைத் தள்ளி விட்டு, என்ன சொல்லப்பட்டது என்று மட்டும் கவனித்தால், தொழிலாளர்களின் நலனைப் பேணிக்காக்க இதுவரை செயல்பட்டுக் கொண்டு வரும் யூனியன்களை விட, புதிதாகச் செயல்படத் தொடங்கியிருக்கும் யூனியன்கள் எந்த விதத்தில் அதிகமாகப் பணியாற்றுகின்றன என்பது புரியாத விஷயமாகத்தான் இருக்கிறது.

ஒரே துறையில் தொழிலாளர் யூனியன்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதில் போட்டி மனப்பான்மை வளர்வதற்குப் பதில் யூனியன்களுக்கிடையில் போட்டி வளர்வதில்தான் முடிகிறது. அதுவும் போதாமல் தொழிலாளர் நலன்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுக் கட்சி வளர்ச்சியில் கவனம் திரும்பி விடுவதையும் காண்கிறோம்.


இவற்றையெல்லாம், அரசினரும், அரசியல் கட்சியினரும் நிர்வாகத்தினரும், முக்கியமாகத் தொழிலாளரும் ஊன்றிப் பார்த்துச் சிந்தித்துச் செயல்படுவது நலம்.





வ. உ. சி. இழுத்த செக்கு சென்னையில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. —செய்தி


அதான் தெரியுமே... வெளியே ஜரிகைத் துப்பட்டா
பலமா இருந்தால்.... உள்ளே சட்டை கிழிசலா இருக்கும்!
பொது மக்கள்
தொண்டர்
மாநில சுயாட்சி கோரிக்கை
ஆட்சியில் குறை பாடுகள்


மந்திரிசபை விஸ்தரிப்பு இப்போதும் இல்லை; எப்போதும் இல்லை!
இரட்டைத் தாழ்ப்பாள்!
?
?
மதியழகன்
ம.பொ.சி

கே. ஆர். விஜயாவின் நான்கு எழில்மிகு ரகசியங்கள்:



நம் நாட்டிற்கு விஜயம் செய்த ஒரு ஒய்யாரக் கப்பலில் நடந்த விருந்தின்போது
கே. ஆர். விஜயா சில சொந்த உண்மைகளைக் கூற இசைந்தார்.
இந்தியாவைத் தவிர உலகில் மற்ற எந்த இடத்தில் நீங்கள் வாசம் செய்ய விரும்புகிறீர்கள்?
'உண்மையில் எனக்கே அது தெரியாது. ஏன், ஸ்விட்ஸர்லாந்து என்று வைத்துக் கொள்வோமே? நான் அதைப் பற்றி எண்ணியதே இல்லை. நம் தென்னிந்தியாவே அழகு மிகுந்த இடம் தானே!'
உங்கள் பிறந்த நாளன்று நீங்கள் மிகவும் விரும்பும் பரிசு?
'தென்னிந்தியப் பட்டுப்புடவைதான். அதன் பளபளப்பை நான் மிகவும் விரும்புகிறேன்'
நீங்கள் விரும்பும் ஆபரணங்கள்?
'வைரங்கள் பதித்த ஜெய்ப்பூர் மீனா வேலைப்பாடுகள்'.
விஜயா, உங்கள் எழிலின் ரகசியம் ?
'லக்ஸ்தான். இது உலகறிந்த உண்மையாயிற்றே!'

'என் மேனி பொலிவுடன் இருப்பதற்குக் காரணம் நான் உபயோகிக்கும் லக்ஸ்தான். அது சுத்தமானது, மிருதுவானது'



HDL 4019

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் ஒரு தரமான தயாரிப்பு

தமிழ் நாட்டிலே


கீரன்

ஆட்சிக்கும் அது பொருந்துமே!

தமிழ் நாட்டு முதல்வர் சென்ற மாத இறுதியில் ஐதராபாத் சென்றிருந்த காலை அங்குள்ள பத்திரிகையாளர்களிடம் பேசும் போது. ''அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், எந்தக் கட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டிருந்தாலும், பொது நோக்குடன், நாடும் சமுதாயமும் பண்பாடும் வளர வேண்டியதில் எல்லாப் பத்திரிகையாளர்களும் செயல்பட வேண்டும்'' என்று பத்திரிகையாளர்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறார். இதே அறிவுரை ஆட்சிகளுக்கும் பொருந்துமே! 'தி. மு. க. ஆட்சி பொது நோக்குடன் அரசியல் வேறுபாடுகளை மறந்து எந்தக் கட்சி மக்களாயிருந்தாலும் அவர்களுக்கு நன்மை செய்து — நாடும் சமுதாயமும் பண்பாடும் வளரப் பாடுபட வேண்டும்' — என்று இதே அறிவுரையை தி. மு. க.வுக்கும் திருப்பிக் கூறலாம். 'பத்திரிகையாளர்கள் அரசுக்குப் புத்திமதி சொல்வதில் முக்கியமானவர்கள்' — என்றும் முதல்வர் ஐதராபாத்தில் பேசியிருக்கிறார். முதல்வரின் சொந்த மாநிலத்தில் அரசுக்குப் புத்திமதி சொல்ல முயலும் பத்திரிகையாளர்களை அரசினர் எப்படி மதிக்கிறார்கள் என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வது?

இந்த விலை ஏறலாம்; அந்த விலை ஏறக்கூடாது!

ஓட்டல் அதிபர்கள் சங்க ஆண்டு விழாவில் தமிழ் நாட்டு உணவு அமைச்சர் பேசியிருக்கிறார்: ''ஓட்டல்காரர்கள் சுகாதார நிலையுடன் பரிமாறப் பயன்படும் பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் உணவுப் பண்டங்களின் விலைகளை உயர விடாதீர்கள்.



நான் பொறுப்பேற்றிருக்கும் உணவுத் துறையைத் திறம்பட நடத்துவதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பும் தரவேண்டும். ஓட்டல் நடத்துபவர்கள் தர்ம உள்ளத்துடன் இரக்க சிந்தையுடன் தமது தொழிலை நடத்த வேண்டும்.'' இந்த விழாவில் பேசிய ஓட்டல் சங்கத் தலைவர் ''விலைவாசிகள் இப்போது உயர்ந்துள்ளன. இதனால் தாயில்லாப் பிள்ளை போல் நடுத்தர ஓட்டல்கள் சிரமப்படுகின்றன'' என்று கூறியுள்ளார். அதற்குத் தெளிவான பரிகாரம் எதையும் கூறாமல் 'விலையை உயர்த்தி விடாதீர்கள். தர்ம சிந்தையோடு செயல்படுங்கள்' என்று மட்டும் அமைச்சர் சொற்பொழிவு செய்வது வேடிக்கை. உளுந்து, அரிசி, எண்ணெய் விலை அநியாயமாக ஏறி விட்டால் இட்டிலி, வடை, போண்டா விலையும் ஏறும். இல்லாவிட்டால் அவை பழைய விலைக்கு விற்கப்பட்டு, பிளேட்டில் அவை இருப்பதை லென்ஸ் வைத்துப் பார்க்கும் அளவு சிறுத்துப் போனாலும் போய்விடலாம்.

தவறான பாடப் புத்தகங்கள்

தமிழ் நாடு அரசாங்கம் வெளியிட்டுள்ள பூகோள பாடப் புத்தகங்களையெல்லாம் கவனமாகப் பரிசீலனை செய்து ஆராய்ந்து பார்த்த பின், பூகோள ஆசிரியர்கள் சங்கச் செயலாளர் எம். பி. ராஜகோபால் அவற்றில் பிழைகளும் முரணான தகவல்களும் நிறைந்திருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார். பூகோள பாடங்களை எழுதுவதற்குத் தேர்ச்சி பெற்ற தரமான ஆசிரியர்களை நம்பிப் பொறுப்பை ஒப்படைக்காமல் அரசியல் செல்வாக்கில் ஆட்களைத் தேடுவதும், பாடங்களை எழுதியவர்களின் பெயர்களை வெளியிட மறுப்பதும் கண்டிக்கத் தக்கவை என்றும் அவரே மேலும் கூறியிருக்கிறார். புத்தகங்களில் ஆசிரியர்கள், எழுதியவர்கள் பெயர்களை வெளியிடாததால் யாரால் அப்படித் தவறுகள் நேர்ந்தன என்று கண்டுபிடிக்க முடியாமல் போகிறது.

ஐந்தாம் படிவ பூகோள நூலில் உள்ள தமிழ்நாடு 'மேப்'பில் 'ஆனைமுடி' என்கிற சிகரம் — தமிழக எல்லையில் உள்ள பிரதேசமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அந்தச் சிகரம் கேரளத்தைச் சேர்ந்ததாகும். 2695 மீட்டர்கள் உயரமுள்ள அந்தச் சிகரத்தை 2720 மீட்டர் என்றும் தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பழைய புள்ளி விவரங்களின்படி நிலக்கரி உற்பத்தியில் சோவியத் நாடு உலகில் நான்காவது இடம் வகிக்கிறது எனப் பூகோள நூலில் கூறியிருக்கிறார்கள். ஆனால் அது உண்மையில்லை. இப்போதுள்ள கணக்கின்படி சோவியத் நாடு நிலக்கரி உற்பத்தியில் இரண்டாவது இடம் பெறுகிறது.

'ஐரோப்பா'வை ஆசியாவின் தீபகற்பம் என்கிறது பத்தாம் படிவப் பூகோள நூல். உண்மையில் ஐரோப்பா 'யூரேஷியா'வின் தீபகற்பமாகும். எட்டாம் படிவ நூலில் நியூயார்க் நகரின் இப்போதைய ஜனத்தொகை என்று நினைக்கும்படி பழைய 1958ன் ஜனத்தொகைக் கணக்கைப் போட்டிருக்கிறார்கள். ஒன்பதாம் வகுப்பு நூலில் மத்திய அட்சரேகைக் கணக்குத் தவறாகப் போடப்பட்டுள்ளது. இப்படி இன்னும் பல பிழைகள் உள்ளன.

அரசு நிர்வாகத்தில் செய்கிற பிழைகளே போதாதா? பாட புத்தகத்தில் வேறு பிழைகளை அனுமதிக்கலாமா?

இங்கும் அங்கும்

'மாயூரம் நகராட்சி பஸ் நிலையத்தில் ஒரு வேப்பமரத்தடியில் அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் சில நாள் தூளாக உடைக்கப்பட்டு விட்டது' என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்து முடித்த அதே சமயத்தில், 'நியூயார்க்கில் பிள்ளையார் கோயில் கட்டத் தீவிர ஏற்பாடு. 'பரோ ஆஃப் குயின்ஸ்' என்னும் இடத்தில் நியூயார்க்வாழ் இந்தியர்கள் 50 ஆயிரம் டாலர் (ரூ. 3.65 லட்சத்துக்குச் சமம்) செலவில் இடம் வாங்கி அந்த இடத்தில் தென்னிந்திய சிற்பக் கலை அடிப்படையில் ஒரு பிள்ளையார் கோயிலைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். இதற்காக வாங்கப்பட்டுள்ள 929 சதுர மீட்டர் இடத்தில் பிள்ளையாரைத் தவிர மற்ற இந்துக் கடவுள்களின் சிலைகளும் அமைக்கப்படுவதோடு ஆலயத்தை ஒட்டி இந்து கலாசாரக் கட்டிடமும் ஒரு நூல் நிலையமும் அமைக்கப்படும். வட பகுதி அமெரிக்காவின் இந்து ஆலயக் கழகம் இந்தக் கோவில் பணிக்கு ஏற்பாடு செய்து வருகிறது. இந்தக் கோவிலின் தலைவராக ஐ. நா. பொதுக் காரியதரிசியின் பிரதம ஆலோசகரான திரு சி. வி. நரசிம்மன் பொறுப்பு மேற்கொண்டுள்ளார்' என்ற செய்தியையும் படித்தபோது இரண்டையும் ஒப்பிட்டுச் சிந்திக்க முடிந்தது.

சிறுதொழில் கடனுதவி

சமீபத்தில் பல்வேறு மாவட்டங்களில் சிறு தொழில்களுக்குக் கடனுதவி வழங்கவும், அவைகளை வளர்க்கவும் நியமித்திருக்கும் குழுக்களில் அந்தந்த மாவட்டக் கலெக்டரும், சட்ட மன்ற உறுப்பினரும் இடம் பெற்றிருக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று அறிகிறோம். இந்தக் குழு மனம் வைத்தால் சிறு கைத்தொழில்களுக்கு இருபத்தையாயிரம் ரூபாய்வரை அரசாங்கம் கடன் உதவி செய்வதற்குப் பரிந்துரை செய்ய முடியுமாம். இந்தக் குழுவுக்குக் கலெக்டர் தலைவராக இருப்பதோடு, மாற்றுக் கட்சிகளின் எம்.எல்.ஏ.க்களை நியமிக்க வாய்ப்புக்கள் உள்ள இடங்களிலும் அவர்களைத் தவிர்த்து ஆளும் கட்சி எம். எல். ஏ.க்களையே நியமித்திருப்பதால் அரசியல் செல்வாக்கால் கட்சிச் சார்புள்ளவர்கள் மட்டுமே பயனடைய நேர்ந்து விடுமோ என்று ஓர் அச்சமும் சந்தேகமும் நிலவுகிறது. இதனால் ஆட்சியில் உள்ளவர்கள் பெருமைப்படுவதற்கு எதுவும் இல்லை.

கிண்டல் ஏன்?

ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்கும் சிறப்பைப் பற்றி வேலூரிலோ எங்கோ பேசுகையில் தமிழக முதல்வர் சூரிய நமஸ்காரத்தைப் பற்றிக் கிண்டல் செய்வது போல் பேசியிருக்கிறார். இது அநாவசியமான காரியம். ஒரு நற்பணியைப் பற்றிப் புகழும்போது கண்களின் நன்மைக்கான மற்றொரு பழைய நற்பழக்கத்தைக் கிண்டல் செய்வதோ, கேலியாகப் பேசுவதோ நாகரிகம் அன்று. சூரிய வழிபாடு பழைய தமிழ் நூல்களில் எல்லாம் கொண்டாடப்பட்டுப் புகழப் பட்டிருக்கிறது. சூரிய ஒளி கண்களில் படுவதை விடக் கண்களுக்கு ஆரோக்கியம் தரக் கூடிய காரியம் வேறெதுவும் இருக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் சூரிய நமஸ்காரம் அமைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான ரீதியாகக் கூட அதைப் புரிந்துகொள்ளாமல் இகழ்ந்து பேசியிருப்பது கலைஞரின் மனமுதிர்ச்சியையோ, பக்குவத்தையோ காட்டவில்லை. உண்மைச் சூரியனை வணங்கும் மரபைக் கிண்டல் செய்யும் முதல்வருக்கு உதய சூரியன் சின்னத்துக்குத் தினமும் துதி பாடுபவர்கள் மட்டும் வேண்டியிருக்கிறது போலும்!

உடனே அகற்று!

சென்னை நகரின் நெருக்கடியான பகுதிகளில் கோவில்கள், பள்ளிக்கூடங்கள், குடியிருப்பு வீடுகளை யொட்டிச் சில இடங்களில் கள்-சாராயக் கடைகள் இருப்பதாகவும் அதை எதிர்த்துப் போரிட அங்கங்கே போராட்டக் குழுக்கள் அமைக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. மனுக்கள் போட்டும், மகஜர் அனுப்பியும், மேற்படி கடைகளைப் பொது இடங்களிலிருந்து மாற்றாத காரணத்தால் அந்தந்தப் பகுதி மக்கள் போராட்டக் குழுக்கள் அமைக்க முற்பட்டுள்ளனர். . கல்விக்கூடங்களும், கோவில்களும், குடியிருப்புப் பகுதிகளும் அமைதி கெடாமல், பொது வாழ்வின் ஒழுக்கம் பாதிக்கப்படாமல் விளங்க வேண்டுமானால் அவைகளை ஒட்டிய இடங்களில் உள்ள மதுபானக் கடைகளை உடன் அகற்றியாக வேண்டும். யாரும் எச்சரிக்காமல், யாரும் போராடாமல் இயல்பாகவே அரசாங்கம் இந்தக் காரியத்தில் மக்களுக்கு உறுதுணையாக வந்து நிற்க வேண்டும்.

விலைகள் கிடுகிடு உயர்வு!

முன்பு எல்லாம் பட்ஜெட் வெளிவந்தவுடனே, அல்லது வெளிவரு முன் அத்தியாவசிய உபயோகப் பொருள்களின் விலைகள் ஏறுவது உண்டு. ஆனால் இப்போது சமீப கால அநுபவம் வேறு விதமாக இருக்கிறது. பருப்பு, எண்ணெய், அரிசி, சீனி, மண்ணெண்ணெய், காப்பிக்கொட்டை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் வாரா வாரம் மாதா மாதம் விலை ஏறிக் கொண்டே போகின்றன. எல்லாமே இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று விலை ஏறிவிட்டன. விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்கள் எல்லாம் ஆட்சியாளர்கள் ஆகி இப்போது திருமணங்களில் வாழ்த்துக் கூறுவதிலும், கட்சிப் பூசல்களிலும், பொன்னாடை, கிரீடங்கள் சூட்டும் விழாக்களிலும் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ரூபாய்க்கு மூன்று படி அரிசி கனவாகி, ரூபாய்க்கு ஒரு பிடி அரிசி தரும் காலம் வந்துவிடும் போலிருக்கிறது. அமைச்சர்கள் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் உருப்படியான முயற்சிகளைக் காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

என்றார் மகாதேவன். அந்த அம்மாளுக்கு அவர் ஒரு கட்டு அப்பளத்தைக் கொடுக்க அவளுக்கு ஒரே ஆனந்தம்.

“ஒலிம்பிக் நகரத்துக்குக் காலை எட்டு மணிக்குச் சாப்பிட்டுவிட்டுப் போனால் இரவு இரண்டரை மணிக்குத்தான் திரும்புவேன். கூடைப் பந்தாட்ட மாட்சுகள் எழுபத்திரண்டையும் பார்த்து நான் ஒரு ரிகார்டு கண்டிருக்கிறேன்!'' என்றார் திரு மகாதேவன்.

ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் மஞ்சள் உடை அணிந்த ஜெர்மானியர் ஒருவர் குப்பை அள்ளிக் கொண்டு ஆட்டங்களையும் பார்வையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த ஜெர்மானியரைக் குசலம் விசாரித்த போது அவர் கூறியது தூக்கிவாரிப் போடச் செய்தது.

''நான் இன்ஜினியர். ஒலிம்பிக் ஆட்டங்களைக் காண ஆசை. ஆகவே, இந்தக் குப்பை எடுக்கும் பணியை ஏற்றுக் கொண்டுவிட்டேன். எனக்கு இலவச உணவு, இருப்பிடம் தவிர மூன்று டாலர் சம்பளமும் கிடைக்கிறது. ஒலிம்பிக் போட்டிகளை 'ஓசி'யில் பார்க்க முடிகிறது!'' என்றார் அந்த எமகாதக என்ஜினியர்.

குப்பை கூட்டுவதை அவர் கௌரவக் குறைவாக நினைக்கவில்லை.

ஒலிம்பிக் நகரத்துக்கு விஜயம் செய்யும் விருந்தினர்களைக் கவனித்துக் கொள்ள முப்பதினாயிரம் பணியாளர்கள் இருந்தனர். தகவல் இலாகாவில் பன்னிரண்டு போன்கள் இடைவிடாது ஒலித்தன. பத்து மொழிகளில் விற்பன்னர்கள் விவரங்களைப் பொழிந்து கொண்டிருந்தார்கள். தூணில்லாத ராட்சதக் கூடாரங்களில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து கொண்டிருந்தன. 'டிராக்' எல்லாம் 'ஸின்தடிக்' முறையில் உருவாக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு போட்டியையும் கணிக்க கம்ப்யூட்டர், நவீன சாதனங்கள் இருந்தன.

''அத்தனை போட்டிகளையும் ஒருவர் பார்ப்பது இயலாத காரியம். ஒலிம்பிக் போட்டிகளில் நீங்கள் பார்த்தவை பற்றிக் கூற முடியுமா?''

''நான் முக்கால்வாசி நேரத்தைக் கூடைப் பந்தாட்ட மைதானத்தில் ஆட்ட நுணுக்கங்களைப் பதிவு செய்வதில் கழித்தேன். உலக ரிகார்டு கண்ட உகாண்டா ஓட்டப் பந்தய வீரர் ஜான் அகிபுவா ஓடிய நானூறு மீட்டர் பந்தயத்தைப் பார்த்தேன். ரஷ்ய பதினெட்டு வயது மாணவி லுடிமிலா டுரிஷ்சேவா ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் ரப்பராக வளைந்து, ஒரு டியூனுக்கு ஏற்பப் பயிற்சிகளைச் செய்து காட்டியது அனைவரையும் வியக்க வைத்தது. ஜப்பானியப் பெண்மணிகள் முதலிலேயே தங்கள் முழுத் திறமையையும் காட்டிவிடவே கடைசியில் திரும்பத் திரும்ப ஒன்றையே பார்ப்பது போலாகி விட்டது. ஆனால் ரஷ்யப் பெண்மணி முதலிலேயே தன் திறமையைக் காட்டிவிடவில்லை. கடைசிப் போட்டியில் தன் திறமைகள் அனைத்தும் வெளிக் காட்டித் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டு விட்டாள். திரைப் படக் கதாநாயகன்போல் ஏழு தங்கப் பதக்கங்களை மாட்டிக்கொண்டு மார்க் ஸ்பிட்ஸ் பவனி வந்தபோது அவரைக் கைகுலுக்கி மகிழ்ந்தேன். கால்பந்தாட்டத்தில் ஜெர்மனிக்கும் ஹங்கேரிக்கும் நடந்த பந்தயத்தைப் பார்த்தேன். இரு கோஷ்டிகளுமே புதிய நுணுக்கங்களில் சிறந்து விளங்கின. கோல்களை ஒன்பது, பத்து என்று அவர்கள் குவிக்கும் அழகைக் கண்டு திகைத்தேன். டெலிவிஷன் ஒரு வரப் பிரசாதம். ஆட்டக்காரர்களின் நுணுக்கங்களையெல்லாம் அதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.''

''நீங்கள் பார்த்த போட்டிகளில் மனத்தை உலுக்கும் நிகழ்ச்சி உண்டா ?''

'' ஓ ! அமெரிக்க ஓட்டப் பந்தய வீரர்கள் நூறு மீட்டர் பந்தயத்தில் உலக ரிகார்டு கண்டவர்கள். கோச்சிடம் பந்தயம் ஆரம்பிக்கும் நேரத்தைக் கேட்டுக் கொண்டு போனார்கள். அவர்கள் கோச் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்தபோது நூறு மீட்டர் பந்தயம் முடிந்து ரஷ்ய ஓட்டப் பந்தய வீரர் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டுவிட்டார். அமெரிக்க ஓட்டப் பந்தய வீரர்கள் கோச்சின் தவறான நேரக் கணக்கினால் தங்கப் பதக்கத்தைக் கோட்டைவிட நேர்ந்ததைக் கண்டு கண்ணீர் விட்டார்கள். எல்லோருக்குமே இந்தக் காட்சி கஷ்டமாக இருந்தது!''

மகாதேவன் தாம் தங்கியிருந்த இல்லத்தில் காலையில் பல யோகாசனங்களைச் செய்து கொண்டிருந்தார்.

''யோகாசனத்தில் இவ்வளவு கெட்டிக்காரராயிருக்கிறீர்களே!'' என்று வியந்தாள் ஜெர்மன் மூதாட்டி.

'' எங்கள் நாட்டில் இதைவிடப் பிரமாதமாகப் பல யோகாசனங்களைச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள் !'' என்றார் மகாதேவன் பெருமையாக.

''இத்தனை யோகாசன நிபுணர்கள் இருக்கிறார்கள் என்கிறீர்கள், உங்கள் நாடு ஒரு தங்கப் பதக்கம்கூடப் பெற முடியவில்லையே?'' என்ற அவளுக்கு என்ன சமாதானம் சொல்ல?

“அரபுக்காரர்கள் இஸ்ரேல் ஒலிம்பிக் ஆட்டக்காரர்களை 'ஹைஜாக்' செய்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள் ?''

''நான் பாஸ்கெட்பால் மாட்சுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தங்குமிடம் திரும்பி நான்கு மணி நேரம் கழித்து டெலிவிஷனில் அந்தக் கோரச் சம்பவங்களைப் பார்வையிட்டேன். மேற்கு ஜெர்மானியர்கள் சமாளித்து எப்படியோ பாக்கியிருந்த போட்டிகளையும் நடத்திவிட்டார்கள். அவர்கள் உள்ளத்தை இந்தச் சம்பவம் ரொம்பவும் பாதித்துவிட்டது. இத்தனை சிறப்பாக நடத்திய ஒலிம்பிக் நிகழ்ச்சியில் இப்படி துடைக்க முடியாத கறை படிந்து விட்டதே என்று அவர்களுக்குப் பெரும் துயரம் !'' என்று உருக்கமாகக் கூறிக் கொண்டுபோனார் மகாதேவன். ''மேற்கு ஜெர்மனிக்கு ஓர் ஆறுதல், அவர்கள் உலக ஹாக்கி சாம்பியன் ஆனது!'' என்றார்.

இத்தனை சிரமப்பட்ட தேசத்துக்கு இந்தப் பெருமையாவது இருக்க வேண்டாமா?

பேட்டி : **குண்டுமணி**

மியூனிக் கண்டவர்

மதுரைக் கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் டி. மகாதேவன் மியூனிக் ஒலிம்பிக்குக்குப் பறந்து சென்றார். மதுரைக் கல்லூரி அவரது செலவில் ஐம்பது சதவிகிதத்தை ஏற்று அவருக்கு மியூனிக் ஒலிம்பிக் காண வசதி செய்து கொடுத்தது. மதுரையில் உள்ள பல சங்கங்களும் ரோட்டரி கிளப்பும் அவரது பிரயாணத்துக்கு உதவ முன்வந்தன. ஆசிய கூடைப் பந்தாட்டக் கழகம் அவருக்குக் கூடைப் பந்தாட்டத்திலுள்ள தேர்ச்சி காரணமாக அவரைக் 'கூடைப் பந்தாட்டப் பார்வையாள'ராக அனுப்பி வைக்கவும் முன் வந்தது.

சுயமுயற்சியால் ஒய்.எம்.ஸி.ஏ. கல்லூரியிலும் அழகப்பா கல்லூரியிலும் உடற்பயிற்சிக் கலையில் பட்டம் பெற்றவர் இவர்.

24ந் தேதி விமானம் மியூனிக் போய்ச் சேர்ந்தது. ஒலிம்பிக் நிர்வாகம் அவரவரது தகுதிக்கேற்ப கெஸ்ட் ஹவுஸ்களைப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தது.

'' நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் ?''

'' இந்தியா !''

''சைவமா ? அசைவமா ?''

'' சைவம் !''

'' உங்களால் எவ்வளவு வாடகை கொடுக்க முடியும்?''

'' பதினைந்து மார்க் !''

திரு மகாதேவன்





மியூனிக் ஒலிம்பிக் ஸ்டேடியம்.



தங்கப்பதக்கம் பெற்ற ருஷ்ய மாணவி.

ஒலிம்பிக் நிர்வாகிகளில் ஒருவர் உடனே மகாதேவனுக்காக ஜெர்மன் மூதாட்டி ஒருவரின் இல்லத்துக்கு 'போன்' செய்தார். அந்த இல்லத்தின் மூதாட்டி காரில் வந்து தம் இல்லத்துக்கு மகாதேவனை அழைத்துச் சென்றார்.


'' உங்களுக்கு டெலிவிஷன் இலவசம். போனும் இலவசம்!'' என்றார் அந்த ஜெர்மன் மூதாட்டி.

'' எனக்குத் தினம் குளிக்க வேண்டுமே!''

'' அப்படியா ? அதற்கு நீங்கள் ஒரு மார்க் தந்து விடுங்கள்! சாப்பாடு ?''

''நானே சமைத்துக் கொள்வேன். இந்தியாவிலிருந்தே சாம்பார் பொடி, அப்பளாம் சகிதம் வந்திருக்கிறேன்!''

ஒலிம்பிக் பந்தயங்களையொட்டி வெளியான ஜெர்மன் தபால் தலைகள்



ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்

திருமுல்லைவாயில் - சென்னை - 62

தொலை பேசி எண் : 68377


நவராத்திரி உத்ஸவம் -1972

ஸ்ரீ வைஷ்ணவி தேவியின் நவராத்திரி உத்ஸவம் 1972ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் 16-ம் தேதி திங்கட்கிழமை முடிய நடைபெறும். பக்தர்கள் விழாவில் கலந்து கொண்டு இயன்ற உதவியும் கைங்கர்யமும் செய்து ஸ்ரீதேவியின் திருவருளைப் பெறுவார்களாக.

காணிக்கைகளைப் பணமாகவோ, பண்டமாகவோ ஆலயத்தில் செலுத்தலாம். அல்லது கீழ்க்கண்ட பெயருக்கும் அனுப்பலாம்.

தினசரி மாலை 4 மணிக்கு பஜனை அல்லது இன்னிசைக் கச்சேரி நடைபெறும். உத்ஸவ மூர்த்திக்கு தினசரி அலங்காரம் செய்து ஊர்வலமும் நடைபெறும்.

ஸ்ரீ வைஷ்ணவி சேவார்த்திகளுக்காக
ஸாது பார்த்தஸாரதி



மெட்ராஸ் அட்வர்டைஸிங் கம்பெனியின் ஜெனரல் மானேஜரான **ஸ்ரீ கே. ஜெயராமன்** அவர்களின் **சஷ்டியப்த பூர்த்தி** செப்டம்பர் 9-ந் தேதி யன்று காஞ்சிபுரத்தில் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமியின் திருச்சந்நிதானத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. உறவினர்களும் நண்பர்களும் நேரில் கலந்து கொண்டும் வாழ்த்துக்கள் அனுப்பி வைத்தும் விழாவைச் சிறப்பித்தனர். வாழ்க மணிவிழா மணமக்கள்!

எக்ஸ்போ - 70

ஜப்பானில் நடந்த உலகக் கண்காட்சியை லட்சோப லட்சம் மக்கள் பார்த்தார்கள். பார்க்காத கோடிக் கணக்கான மக்கள் கண்டு களிப்பதற்காக அந்தக் கண்காட்சியைத் திரைப்படம் எடுத்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தைப் பார்த்த பிறகு எக்ஸ்போவுக்கு நேரில் சென்று பார்க்காத நாம் அதிர்ஷ்டக்காரர்கள் என்றே தோன்றுகிறது!

எக்ஸ்போவுக்குப் போவதென்றால் செலவு கொஞ்சமாகவா ஆகும்? அப்படியே ஜப்பான் சென்றாலும் கண்காட்சியை முழுமையாக ஒன்றிரண்டு நாட்களில் பார்த்துவிடவா முடியும்? பார்க்கிற நேரத்தைவிட க்யூவில் நிற்கிற நேரம்தான் அதிகமாய் இருக்கும்! சிறிது காலம் தங்கியிருந்து பார்த்தால்கூடப் பல்வேறு நாடுகளின் விசேஷ தினங்கள் பரவலாகப் பல நாட்களில் கொண்டாடப்படும் போது அந்த விழாக்கள் அனைத்தையும் கண்டு களித்துவிட முடியாது!

ஆனால் நாமோ மழையில் நனையாமல், வெய்யிலில் காயாமல், கால்கடுக்க நிற்காமல், கூட்டத்தில் மிதிபடாமல், 'குழந்தையைக் காணோம்' என்று பரிதவிக்காமல், ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட சூழலில் ஆற அமர இருந்து, இரண்டு அல்லது மூன்று ரூபாய் செலவில் மேற்சொன்ன எல்லாவற்றையும் ஒன்றே முக்கால் மணி நேரத்தில் பார்த்து முடித்து விடுகிறோம்!

''என்னதான் இருந்தாலும் நேரில் பார்ப்பதுபோல் ஆகுமா ஸார்?'' என்று கேட்கும் சந்தேகப் பேர்வழிகளுக்கு 'நேரில் பார்ப்பதை விட நன்றாக இருக்கிறது' என்று அடித்துச் சொல்லலாம். நேரில் பார்க்கும்போது நாம் உணர்ந்தறிய முடியாத காமிராக்கோணங்கள் கண்காட்சியைக் கண் கொள்ளாக் காட்சியாக்குகின்றன; கேட்டறிய முடியாத பின்னணி இசைகள் மனம் கொள்ளாக் காட்சியாக மாறுகின்றன.

எத்தனை விதமான நூதனக் கட்டிடங்களைப் பல்வேறு நாடுகளும் எழுப்பியுள்ளன! உலகத்தின் கலைப் பொக்கிஷங்களெல்லாம் ஒரே இடத்தில் திரண்டு வந்திருந்து நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன; விஞ்ஞான முன்னேற்றங்கள் வியக்கச் செய்கின்றன! பலதரப்பட்ட கலாசாரங்களை உணர்த்தும் நடனங்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

''உலக நாடுகளின் மன ஒற்றுமையுடன் கூடிய முன்னேற்றம்'' என்பது இந்தக் கண்காட்சியின் கருப்பொருளாக விளங்கியது. இப்படத்தைப் பார்க்கும்போது மனித குலத்தின் முன்னேற்றத்தைக் கண்டு பெருமிதம் கொள்வதோடு முன்னேற்றத்தின் விளைவான சில கஷ்ட நஷ்டங்களைக் குறித்தும் சிந்திக்கிறோம். பலதரப்பட்ட மனித இதயங்கள் நெருங்கிவர இந்தக் கண்காட்சி எவ்வளவு உதவியிருக்கிறதென உணர்ந்து மனம் நெகிழ்கிறோம்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக மேலோங்கி நிற்கும் எண்ணம், 'அடடா, சின்னஞ் சிறிய நாடு ஜப்பான், உலகையே விருந்துக்கு அழைத்து உபசரித்து எவ்வளவு வெற்றிகரமாகக் கண்காட்சியை நடத்தி நற்பெயர் வாங்கிவிட்டது!' என்பதுதான்.

ஜப்பானியரின் தேசபக்தியோடு கூடிய சலிப்பற்ற உழைப்பு, அறிவாற்றல், நிர்வாகத் திறன், உயர் பண்புகள் எல்லாம் நம்மைத் தலைவணங்கச் செய்கின்றன. திரைப்படக் கலை நுணுக்கங்களில் அவர்கள் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள் என்பதையும் உணர்கிறோம்.

எக்ஸ் — போ : எக்ஸலண்ட் — போ!

* * *

இந்தப் படத்தில் சினிமா நட்சத்திரங்கள் யாரும் இல்லையே என்ற குறையைத் தீர்க்கத் தானோ என்னவோ ஃபிலிம் ஃபேர் பரிசு வழங்கும் விழாவையும் ஆனந்த் தியேட்டரில் ஆரம்பத்தில் காட்டுகிறார்கள் — ஒரே ஜொலிப்பு!

செக்கோஸ்லாவாகியாவிலிருந்து குழந்தைகளுக்கென்று தயாரிக்கப்பட்டு வந்துள்ள இரு குட்டித் திரைப் படங்களில் பொம்மைகள் நடிக்கின்றன. அற்புதம்! இவையும் எக்ஸ்போ — 70 திரைப் படம் ஆரம்பமாவதற்கு முன்னால் திரையிடப்படுகின்றன.



துக்க பரிகாரம்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஒருவனுக்கு வியாதி வந்தால் அதற்குப் பலர் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். தாது வித்தியாசத்தால் நோய் வந்தது என்பார் ஆயுர்வேத வைத்தியர். இங்கிலீஷ் டாக்டர் வேறு காரணம் சொல்வார். இதற்கும் மாறாக இன்னொரு 'ஸைகலாஜிகல்' காரணத்தை இந்நாட்களில் பிரபலமாகி வரும் மனோதத்துவ நிபுணர் கூறுவார். மந்திர சாஸ்திரக்காரர் குறிப்பிட்ட தெய்வக் கோளாறால் இந்த வியாதி உண்டாயிற்று என்பார். ஜோதிஷர் இன்ன கிரகம் இன்ன இடத்தில் இருப்பதே நோய்க்குக் காரணம் என்பார். தர்ம சாஸ்திரம் அறிந்தவர்களோ பூர்வ கர்ம பலனுகத்தான் வியாதி ஏற்பட்டிருக்கிறது என்பார்கள்.

வியாதிக்கு மட்டுமின்றி நம் வாழ்வின் எல்லா விதமான சுக துக்கங்களுக்கும் இவ்வாறு பலவித காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒரே விஷயத்துக்கு இப்படிப் பல காரணங்கள் சொன்னால் நமக்குக் குழப்பமாயிருக்கிறது. நம் சுக துக்கங்களுக்குக் கிரகங்களின் போக்குத்தான் காரணமா? ஜோதிஷர் சொல்கிறபடி கிரகப் பிரீதி செய்வதா? அல்லது மாந்திரிகர் சொல்கிறபடி குலதெய்வத்துக்கோ அல்லது வேறு தெய்வத்துக்கோ கிராம தேவதைக்கோ செய்த அபசாரம் காரணமா? அந்தத் தெய்வத்துக்கு சாந்தி பரிகாரம் செய்வதா? இதோடு நோய் நொடி என்றால் வைத்தியமும் செய்யத்தானே வேண்டும்? கடைசியில் எல்லாம் கர்ம பலன் என்றால், அது தீருகிறபோதுதான் தீரும் என்று வெறுமே இருந்துவிட வேண்டியதுதானா? இப்படியாகக் குழப்பம் ஏற்படுகிறது.

பல காரணங்களில் எது சத்தியம் என்று யோசித்தால் எல்லாமே சத்தியமாக இருக்கும். ஆதி காரணம் நம் கர்மம்தான் என்பது நிச்சயம். ஸயன்ஸ்படி விளைவு (Effect) இருந்தால் காரணம் (Cause) இருந்தேயாக வேண்டும். ஜகத் முழுதும் காரணம்—விளைவு, செயல்—பிரதிச் செயல் (Action and Reaction) என்ற துவந்தத்துக்குள்தான் கட்டுண்டிருக்கிறது. எனவே மனித வாழ்விலும் நம் செயலுக்கெல்லாம் நிச்சயமாகப் பிரதி உண்டு. இன்று நாம் அநுபவிக்கிற கஷ்ட, சுகங்களுக்குக் காரணம் நாம் இந்த ஜன்மாவிலோ, பூர்வ ஜன்மாவிலோ முன்னமே செய்த நல்லது கெட்டதுகள்தான். சில சமயங்களில் நம் சொந்த பாப புண்ணிய வினையோடு குறிப்பிட்ட வேறு சிலரது பாப புண்ணிய பலனும் நம்மைச் சேருவதாகச் சொல்வதுண்டு. உதாரணமாக, குழந்தைக்கு வியாதி வந்தால், மாதா பிதாவின் பாப பலன் என்பார்கள். அவர்கள் குழந்தைக்குச் சதா சுசுருஷை செய்வதையும், மனத்தால் அந்தக் குழந்தைக்காக அவர்கள் வேதனைப்படுவதையும் பார்க்கும்போது இதுவும் நியாயம் என்றே தெரியும். எனக்கு இன்னொன்றுகூடத் தோன்றுகிறது. அதாவது, நமக்கு ஒரு கெடுதல் வந்தால் அது நம் சத்துருவின் புண்ணிய பலன் என்று சொல்லலாம்.

பிரபஞ்சத்தின் சகல ஆட்டத்துக்கும் காரணம் ஒரே ஒரு பராசக்திதான். ஒருவனுடைய ஆக்ஞைப்படிதான் உலக இயக்கம் முழுதும் நடக்கிறது. அவன் பல விஷயங்களைச் சம்பந்தப்படுத்தி விடுகிறான். இந்த உலகத்தில் எதுவுமே தொடர்பில்லாமல் நடக்கவில்லை. நமக்குச் சம்பந்தமில்லாதவையாகத் தோன்றுவதை எல்லாம் உள்ளூறச் சம்பந்தப்படுத்தி வேடிக்கை பார்க்கிறான் ஸர்வேசுவரன்.

ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுக துக்கங்களுக்கு முழு முதற் காரணம். இதற்கே துணைக் காரணமாக — அல்லது அடையாளமாக — கிரகசாரம், தெய்வ குற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன.

ஜாதக ரீதியில், வைத்திய ரீதியில், மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். நம் கர்மா தீருகிறபோது அவை பலன் தரும். பகவான் விட்ட வழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டுப் பேசாமல் கிடக்கிற பக்குவம் இருந்தால் அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம்; உண்மையான பரிகாரம்.

பூர்வ கர்ம சமாசாரம் எப்படிப் போயினும் இனி கர்ம பாரம் ஏறாமல் பார்த்துக்கொள்வதே முக்கியம். பழையதற்குப் பரிகாரம் தேடுவதைவிட, புதிய சுமை சேராமல், பாவம் பண்ணாமல் வாழ்வதற்கு ஈசுவரனைத் துணைக்கொள்வதே முக்கியம். பூர்வ கர்மத்தால் இப்போது ஏற்பட்டுள்ள துக்கத்துக்கு உண்மைப் பரிகாரம் ஈசுவர தியானம்தான்; இனிமேல் துக்கத்துக்கு விதை போட்டுக் கொள்ளாமல் இருக்கிற உபாயமும் ஈசுவர தியானம்தான்.




பட்டாடைகளைப் பத்திரமாக சலவை செய்திட

ஜென்டீல்

பட்டுகள் மற்றும் 'டெரீன்', நைலான், ரேயான் போன்ற செயற்கை இழைத் துணிகள் மென்மையானவை. அவற்றைப் பத்திரமாக சலவை செய்ய விசேஷ கவனம் தேவை. அதை ஜென்டீல் மட்டுமே செய்ய வல்லது. உங்களுடைய விலை-யுயர்ந்த மென்மையான புடவைகள், பெண்களின் உள்ளாடைகள், சட்டைகள், கழுத்துக் குட்டைகள், நெக்டைகள் ஆகியவற்றின் நெசவையும் பளபளப்பையும் பாழாக்காதீர்கள். அவற்றை வீட்டிலேயே கெடாமல் சலவை செய்கிறது ஜென்டீல்.

உங்கள் மென்மையான துணிகளை சலவை செய்யவே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது ஜென்டீல். அதாவது பட்டாடைகள், செயற்கை இழைத் துணிகள், கம்பளித் துணிகள், எதுவாயினும் சரி. ஜென்டீல் மிகவும் சுத்தமாக சலவை செய்து... அழுக்கை அகற்றி--துணிகளைப் பட்டுப்போல், புதுமையுடன், பளபளப்பாக விளங்கச் செய்கிறது.



ஜென்டீல்—மென்மையான துணிகளை
மனையிலேயே பத்திரமாக சலவை செய்யும் சாதனம்

Shilpi HPMA 54A Tam



4. பால சந்நியாசி

இரவு மணி பத்து அடித்தது. வானத்தைக் கருமேகங்கள் மூடிக் கொண்டிருந்தன. பொச பொசவென்று மழைத் தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. சிலுசிலுவென்று குளிர்ந்த காற்று அடித்துக்கொண்டிருந்தது.

ஆத்மநாதய்யர் வீட்டுக்குள் சந்தடி இன்னும் அடங்கவில்லை. ஆனால் தாமோதரம் பிள்ளையின் வீட்டில் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு விட்டன. வீட்டில் இருளோடு நிசப்தம் குடிகொண்டிருந்தது.

வீட்டுக்குப் பக்கத்துச் சந்திலிருந்து ஒரு மோட்டார் வண்டி வந்து தாமோதரம் பிள்ளை வீட்டு வாசலில் நின்றது. அடுத்த நிமிஷம் வீட்டுக் கதவு திறந்தது. இருள் அடைந்திருந்த வீட்டின் உட்புறத்திலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு வந்தது. அந்த உருவத்தின் மீது மங்கலான வீதி விளக்கின் ஒளி விழுந்த போது, இடுப்பில் காஷாயம் தரித்துக் கையில் கமண்டலம் ஏந்திய பால சந்நியாசியின் உருவம் என்று தெரிய வந்தது. அந்தப் பாலசந்நியாசி திண்ணையின் ஓரத்தில் நின்று வீதியின் இருபுறமும் எதிர்ப் பக்கமும் கவனித்துப் பார்த்தார். ஒருவரும் இல்லை யென்று அறிந்ததும் மோட்டார் வண்டிக்குள் திறந்திருந்த கதவின் வழியாகப் பாய்ந்து ஏறினார். மறு கணம் வண்டி சத்தம் செய்யாமல் புறப்பட்டது.

சிறிது நேரம் வரையில் வண்டிக்குள்ளேயும் நிசப்தம் நிலவியது. தேவபட்டணத்துத் தெருக்களைத் தாண்டி, அப்பாலிருந்த சாலையில் வண்டி பிரவேசித்ததும், வண்டி ஓட்டிய அமரநாத், ''அப்பா! பிழைத்தோம்! இனி பயமில்லை!'' என்றான்.

''எனக்கு என்னமோ இன்னமும் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. இந்த மோட்டாரில் இருக்கிறவரையில் எனக்குப் பயம்தான். இறங்கி விட்டால் கவலையில்லை. எனக்காக நீ இவ்வளவு பெரிய அபாயத்துக்கு உட்பட எண்ணியதை நினைத்தால்...?''

''இந்தத் தேசத்திலேயே நீ ஒருவன் தான் எதற்கும் துணிந்த வீராதி வீரன் என்று எண்ணம் போலிருக்கிறது!''

''அப்படியில்லை அமரநாத்! எந்த நிமிஷத்திலும் கைதியாவதற்குத் தயாராகவே நான் இருந்து வருகிறேன். என்றைக்காவது ஒரு நாள் கைதியாகியே தீரவேண்டும். உன் விஷயம் அப்படியல்ல. எனக்காக நீ கஷ்டப்பட வேண்டி நேர்ந்தால்...''

''உனக்காக நான் ஒன்றும் கஷ்டப் படவில்லை. உனக்காகக் கஷ்டப்பட்டவர்கள் உன் தகப்பனார், தமையன், உன் தங்கையின் மாமனார் முதலியவர்கள். எல்லாரும் இன்றைக்குச் செம்மையாக அடி வாங்கினார்கள். உன் தங்கையும் அம்மாவும் பட்ட வேதனை கொஞ்சமல்ல. அவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்குள்ளே எனக்குப் பிராணன் போய் விட்டது.''

''அதை நினைத்தால் எனக்கு அவமானமாக இருக்கிறது. என்றைக்கா

வது ஒரு நாள் அவர்களுடைய முகத்தில் விழிக்க வேண்டி நேர்ந்தால் என்ன சமாதானம் சொல்வேன்? அவர்களை அடிபடும்படி விட்டுவிட்டு நான் தப்பித்துக் கொண்டதைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்....?''

''ஒன்றும் நினைக்க மாட்டார்கள். எப்படியோ நீ தப்பித்துக் கொண்டாயே என்று சந்தோஷப்படுவார்கள். இப்போதுகூட உன் கதி என்ன ஆயிற்றோ என்றுதான் அவர்களுக்குக் கவலை. நீ நிச்சயமாய்த் தப்பித்துக் கொண்டாய் என்று தெரிந்தால் அவர்களுடைய கவலை நீங்கிவிடும்.''

''என்னதான் இருந்தாலும் நான் இன்று செய்தது ரொம்ப அவமானமான காரியம்தான். உன்னுடைய வற்புறுத்தலைக்கூட நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். அவர்களை அடிபட விட்டு நான் ஒளிந்துகொண்டிருக்க என் மனம் இடம் கொடுத்திராது. டில்லியிலிருந்து என் அத்தங்கா சீதாவைப் பற்றிக் கடிதம் வரவில்லை என்ருல் நானே போலீஸ் அதிகாரிகளிடம் சென்று என்னை ஒப்புக் கொடுத்திருப்பேன்.''



''அதனுல் யாருக்கும் எந்த விதச் சந்தோஷமும் ஏற்பட்டிருக்காது. உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மனவேதனைப் பட்டிருப்பார்கள் — என் தகப்பனுர் உட்படத்தான்.''

''தாமோதரம் பிள்ளை என் விஷயத்தில் காட்டிய அனுதாபத்தை நினைத்தால்தான் எனக்குப் பரம ஆச்சரியமாயிருக்கிறது.''

''அதற்குக் காரணம் என்னவென்று உனக்குத் தோன்றுகிறது? ஊகித்துச் சொல், பார்க்கலாம்!''

''காரணம் வேறு என்ன இருக்க முடியும்? நான் உன்னுடைய சிநேகிதன் என்ற காரணம்தான்.''

''அதெல்லாம் இல்லை. இங்கிலீஷ்காரன் சிங்கப்பூரில் அடிபட்டதிலிருந்து நம்மவர்கள் எல்லாருடைய மனமும் மாறிப் போயிருக்கிறது. இந்த இங்கிலீஷ் ராஜாங்கம் எப்படியும் இந்தியாவை விட்டுப் போய்விடப் போகிறது என்று சிறு பிள்ளைகள் முதல் வயது முதிர்ந்த கிழவர்கள் வரையில் எல்லோரும் நம்புகிருர்கள்..''

''அதற்கும் உன்னுடைய தகப்பனுர் எனக்குச் செய்த உதவிக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்கிறது. நாளைக்கு இங்கிலீஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விட்டால், அடுத்தாற்போல் அதிகாரத்துக்கு யார் வருவார்கள்? உன்னைப் போன்ற காங்கிரஸ் புரட்சிக்காரர்கள் ஒருவேளை வந்தாலும் வருவீர்கள். எல்லாவற்றிற்கும் 'கப்பலில் பாதிப் பாக்குப் போட்டு வைக்கலாம்' என்ற கருத்தில்தான் அப்பா உன்னைத் தப்புவிக்க முன்வந்தார்.''

''அது உண்மையானுல், உன் தகப்பனுரின் பாதிப் பாக்கு நஷ்டம்தான். என்னைப் போன்ற ஓட்டைக் கப்பலில் பாக்குப் போட்டு என்ன பிரயோசனம்? ஆனுல் நீ சொல்லும் காரணத்தை நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். உன்னுடைய சிநேகிதன் என்ற காரணத்துக்காகவும்என் பேரில் உள்ள பிரியத்தினுலும்தான் இந்தக் காரியம் செய்திருக்கவேண்டும்.''

''போனுல்போகட்டும். நீ சொல்கிறபடியே வைத்துக் கொள்ளலாம். உன் அத்தங்காளின் விஷயம் என்னவோ சொன்னுயே?''

''என் தங்கை லலிதாவைப் பார்க்க வந்த மாப்பிள்ளை தனக்குச் சீதாவைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்லி அவளைக் கல்யாணம் செய்து கொண்டானல்லவா? அந்தக் காதல் கல்யாணம் பற்றி அப்போது நாமெல்லோரும் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தது நினைவிருக்கிறதா? உண்மையில் அந்தக் கல்யாணம் பெரிய துரதிர்ஷ்டமாய் முடிந்திருக்கிறது. அவர்களுளுடைய இல்வாழ்க்கையில் சந்தோஷமே கிடையாது, அமரநாத்! ஓயாமல் சண்டைதான்.''

''நீ வீணுக மிகைப்படுத்திக் கூறுகிருய், சூரியா! நம்முடைய தேசத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது தம்பதிகள் ஓயாமல் சண்டை போட்டுக் கொண்டுதான் இருக்கிருர்கள். அதனுல் அவர்கள் சந்தோஷமாக இல்லை என்று அர்த்தமா? நானும் சித்ராவும் தினம்


அரை டஜன் தடவை சண்டை போட்டுக்கொள்கிறோம்...''

''உங்களுடைய விஷயம் வேறு அமரநாத்! உங்களைப் போன்ற தம்பதிகள் உலகத்தில் வெகு அபூர்வம். உங்களுடைய சண்டையெல்லாம் காதலர்களின் சண்டை; வேடிக்கைச் சண்டை. சீதா — சௌந்தரராகவனுடைய விஷயம் அப்படியல்ல. பூனையும் எலியும் போல அவர்களுடைய வாழ்க்கை நடந்து வருகிறது.''

''சௌந்தர ராகவன் சீமைக்குப் போய் வந்தவன்; பெரிய சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவன். ஆகையால் தன் மனைவி ஆங்கில தோரணையில் நவநாகரிகமாக வாழ வேண்டும் என்று நினைக்கலாம். உன் அத்தங்காள் அதற்குச் சம்மதியாமல் இருக்கலாம்; எனக்குத் தெரியும், எத்தனையோ ஐ.ஸி.எஸ். காரர்கள் இந்தக் காரணத்துக்காகவே மனைவியைத் தள்ளி வைத்திருக்கிறார்கள்.''

''சீதா விஷயத்தில் அந்தக் காரணம் சொல்ல முடியாது, அமரநாத்! முதலிலே ஒருவேளை கொஞ்சம் தயங்கியிருக்கலாம். பிற்பாடு சௌந்தரராகவன் நாகரிக ஏணியில் ஒரு படி ஏறினால் சீதா இரண்டு படி ஏறினாள். எனக்குக்கூட 'ஐயோ! அத்தங்கா இப்படி மாறிப் போய் விட்டாளே' என்று வருத்தமாயிருந்தது. அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. சௌந்தர ராகவனுடைய மூர்க்கத்தனம் மேலும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.''

''இப்போது தெரிகிறது, எனக்குக் காரணம். நம்மில் இங்கிலீஷ் படித்த இளைஞர்கள் கல்யாணமான புதிதில் தங்களுடைய மனைவிமார் நவநாகரிகமடைந்து எல்லோருடனும் கூச்சமின்றிப் பழக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்புறம் அவர்களுக்கு இது பிடிக்காமல் போய்விடுகிறது. ஹிந்து தர்மத்தின்படி பெண்கள் அடக்கமாக இருந்தால்தான் நல்லது



என்று நினைக்கிறார்கள். அப்படி ஆண் பிள்ளைகள் நினைக்கும்போது பெண் பிள்ளைகளுக்குப் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப் போகப் பிடிப்பதில்லை... நான் சொல்கிறதைக் கேள், சூரியா! அந்தத் தம்பதிகள் விஷயத்தில் நீ ஒன்றும் தலையிடாமல் இருந்துவிடு. கொஞ்ச நாட்களில் எல்லாம் சரியாகப் போய்விடும்!''

''அப்படி என்றால் இருக்க முடியவில்லை அமரநாத்! வாழ்நாள் முழுதும் கஷ்டப்பட்ட என் அத்தை இறப்பதற்கு முன்னால் தன்னுடைய அநாதைப் பெண்ணைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டாள். அதை என்னால் மறக்க முடியவில்லை!'' என்றான் சூரியா.

சாலையின் இருபுறத்திலும் கழனிகளில் தண்ணீர் ததும்பி அலைமோதிக் கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் காவேரி நதியின் பிரவாகம். மோட்டார் வண்டி சவலை வளைவில் திரும்பும் போது நெடுந்தூரத்துக்கு மோட்டார் விளக்கின் வெளிச்சம் அடித்து நாலா புறமும் பரவியிருந்த நீர்வளத்தைக் காட்டியது. கழனிகளிலும் காவேரியிலும் இலேசான மழைத் தூற்றல் விழுந்தபோது உண்டான சலசலசல சத்தம் மந்தர ஸ்தாயி சங்கீதத்தைப்போல் மனத்துக்கு அமைதியை உண்டாக்கியது. நல்ல சங்கீதக் கச்சேரியின் நடுவில் அரசியல் சம்பாஷணை தொடங்கும் ரசிகர்களைப் போல் திடீர் திடீரென்று தவளைகள் உற்சாகமடைந்து வறட்டுக் கூச்சல் போட்டன.

மோட்டார் வண்டியின் முன் கண்ணாடியில் விழும் மழைத் துளிகளைத் துடைக்கும் கருவிகள் 'டக் டக்' என்ற சத்தத்தோடு தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தன.

''அடடா! நீர்வளம் என்றால் இது வல்லவா நீர்வளம்? வடநாட்டின் பல பகுதிகளை நான் பார்த்திருக்கிறேன். எல்லாம் வறண்ட பிரதேசங்கள். இந்த மாதிரி நீர்வளம் எங்கேயும் கிடையாது'' என்றான் சூரியா.

''நீ வங்காளத்துக்கு வந்ததில்லை, சூரியா! தமிழ் நாட்டைக் காட்டிலும் நீர் வளம் நிறைந்தது வங்காளம். அதிலும் கீழ் வங்காளம் அதிக வளம் பொருந்தியது. மழை காலத்தில் எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயம்தான்'' என்று அமரநாத் கூறினான்.

''அப்படிப்பட்ட நீர் வளம் நிறைந்த தேசத்தில் இப்போது பஞ்சம் என்று சொல்கிறாயே?'' என்றான் சூரியா.

''அதுதானே வேடிக்கை! நான் சொல்லுவது மட்டும் என்ன? பத்திரிகைகளில் நீ பார்க்கவில்லையா? வெளி ஜில்லாக்களி லிருந்து கல்கத்தாவுக்கு வரும் ஜனங்கள் சாலை ஓரங்களில் விழுந்து சாகிறார்கள்.''

''கல்கத்தா நிலைமை அப்படி இருக்கும்போது நீ மறுபடியும் அங்கே போகப் போவதாகச் சொல்கிறாயே?''

''போகாமல் என்ன செய்வது? உத்தியோகம் இருக்கிறதல்லவா? வங்காளத்தில் பஞ்சம் என்றால் கல்கத்தாவில் உள்ள நாற்பது லட்சம் பேரும் சாப்பாடு இல்லாமல் செத்துப் போய்விடுவார்கள் என்பதில்லை.''

''தெரியும், தெரியும். உண்மையில் அரிசிப் பஞ்சமே இல்லை; பணப் பஞ்சம்தான். பணம் இருந்தால் அரிசிக்குப் பஞ்சமில்லை. இருக்கிற அரிசியைச் சில சண்டாளர்கள் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கொள்ளை லாபத்துக்காக ஏழை எளியவர்களின் உயிர் பலி கொடுக்கப்படுகிறது. அப்படித்தானே, அமரநாத்!''

''ஆம்; அப்படித்தான். இத்தகைய பேராசை பிடித்த கிராதகர்கள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள். இந்த நாட்டுக்குத்தான் நீ பூரண சுதந்திரம் வேண்டும் என்கிறாய்.''

''இங்கிலீஷ்காரன் எப்போது இந்த நாட்டைவிட்டு வெளியேறுகிறானோ, அப்போது இப்படிப்பட்ட தீமைகள் ஒழிந்து போய்விடும். பிரிட்டிஷ் ஆட்சியினால் வந்தகேடுகள்தானே இவையெல்லாம்!''

''ஆனால் இங்கிலீஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விடுவான் என்று நீ நம்புகிறாயா? உண்மையாகச் சொல்!'' என்றான் அமரநாத்.

''கட்டாயம் ஒருநாள் இங்கிலீஷ்காரன் இந்த நாட்டை விட்டுப் போகத்தான் போகிறான். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் நான் பிரயாணம் செய்திருக்கிறேன், அமரநாத். வங்காளத்துக்கு மட்டும்தான் வரவில்லை. நான் போன இடத்திலெயெல்லாம் ஜனங்களுடைய மனசு கொதித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டேன். இந்தியா தேசம் ஒரு பெரிய எரிமலையாகி யிருக்கிறது. எந்தச் சமயத்தில் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்குமோ தெரியாது. ஏதாவது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட வேண்டியதுதான்; நாற்பது கோடி ஜனங்களும் சீறி எழுந்து புரட்சி செய்யப் போகிறார்கள். அந்தப் புரட்சி நெருப்பிலே பிரிட்டிஷ் ஆட்சி எரிந்து பஸ்மமாகப் போகிறது. அது மட்டுமா? நாட்டைப் பிடித்த எல்லாப் பீடைகளும் எரிந்து பொசுங்கிச் சாம்பராகப் போகின்றன.''





DC.G.49 TH

கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் வியக்கத்தக்க பெப்பர்மின்ட் சுவையேதனி—கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

பூரண பல் பராமரிப்பிற்கு
காலகேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைப்பு—15 ரகங்கள்.


டாடா டெக்ஸ்டைல்ஸ் வெளியீடு!
பேட்டிஸ்ட்
இலட்சோப லட்சம் ரசிக
பெருமக்களின் இதயங்களை
கொள்ளை கொள்ளும்
வரலாறு காணாத படைப்பு.
'டெரீன்'/ காட்டன் ஷர்ட்டிங்.
குறுக்கிடும் சுருக்கங்களை வென்று வீழ்த்தி,
இஸ்திரி பெட்டிகளை எட்டி உதைத்து
எத்தனை பழசானாலும் என்றும் வெண்மை
பளிச்சிட, ஏறுநடை போடும் எழுச்சிமிக்கத்
தயாரிப்பு இப்படியொன்று இதுவரை
துணியுலகில் கடைவிட்டதில்லை என
பார்த்தவர் பாராட்டுகிறார்கள்! கோடல்
ஷர்ட்டுகள் பேட்டிஸ்ட்டின் கைவண்ணமே
தயாரிப்பாளர்கள்:
டாடா டெக்ஸ்டைல்ஸ்
ULKA.TT 134 TH
கண்டு களியுங்கள் - பேட்டிஸ்ட் இப்போது உங்கள் அருகமைந்த கடைகளில் கிடைக்கின்றன

''போதும், சூரியா! போதும். நம்மைச் சுற்றிலும் ஒரே குளிர்ச்சியாயிருக்கிறது. இருந்தாலும் உன்னுடைய பேச்சு இந்த மோட்டாருக்குள் டெம்பரேச்சரையே அதிகமாக்கி விட்டது. எரிமலை வெடிக்கிறபோது வெடிக்கட்டும், பார்த்துக் கொள்ளலாம்.... அதோ மயிலம்பட்டி ஸ்டேஷன் வந்து விட்டது. இப்போது நாம் பிரிய வேண்டும்!'' என்றான் அமரநாத்.

சற்றுத் தூரத்தில் விளக்குகள் மினுக்கின. ஒரு சின்னக் கட்டிடம், கைகாட்டி முதலிய ரயில்வே ஸ்டேஷன் சின்னங்கள் மங்கலாகத் தெரிந்தன. தேவபட்டணம் ஸ்டேஷனில் ரயில் ஏறுவது அபாயம் என்று அமரநாத் இந்தப் பட்டிக்காட்டு ஸ்டேஷனுக்குச் சூரியாவைக் கொண்டு வந்து விட்டான்.

வண்டி ஒரு மரத்தடியில் நின்றது. நல்ல வேளையாகத் தூற்றல் குறைந்திருந்தது. சூரியா கதவைத் திறந்து கொண்டு வண்டியிலிருந்து கீழே இறங்கினான்.

''சூரியா! உன்னை இப்போது பார்த்தால் சாக்ஷாத் விவேகானந்த சுவாமியைப் போல் இருக்கிறது. பார்க்கிறவர்கள், 'யாரோ மகான்; பாலசந்நியாசி' என்று நினைத்துக்கொள்வார்கள்'' என்றான் அமரநாத்.

''உண்மையில் நான் 'பால சந்நியாசி' அல்ல; போலி சந்நியாசி. இந்தப் புனிதமான வேஷத்தைப் பொய்யாகப் போட வேண்டி யிருப்பது பற்றி எனக்கு மிக்க வருத்தமா யிருக்கிறது.''

''ஆனால் இந்த வேஷம் போதும் என்று நினைக்கிறாயா? சி. ஐ. டி. புலிகள் இதற்கு ஏமாந்து போய்விடுவார்களா?'' என்று அமரநாத் கேட்டுக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கினான்.

''சொல்லுவதற்கில்லை. தென்னிந்தியர்கள் எல்லாக் காரியங்களிலும் கெட்டிக்காரர்களா யிருப்பது போலவே சி. ஐ. டி. வேலையிலும் கெட்டிக்காரர்களா யிருக்கிறார்கள். வட இந்தியாவில் சி. ஐ. டி. சுத்த மோசம். சம்பந்தமில்லாதவர்களைத்தான் பிடிப்பார்கள். இத்தனை தூரம் நான் பிரயாணம் செய்திருக்கிறேன்; தேவபட்டணத்தில் எப்படியோ கண்டு கொண்டு விட்டார்கள், பார்! எல்லாம் கடவுள் சித்தம் போல் நடக்கும். டில்லிக்கு ஒரு தடவை போய் விட்டேனானால் அப்புறம் என்ன ஆனாலும் பாதகமில்லை! நான் போய் வரவா?'' என்றான் சூரியா.

அமரநாத் சூரியாவின் கையைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம், ''உன்னை இப்படி விட்டுப் போவது எனக்கு எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. ஆனாலும் வேறு வழியில்லை, சூரியா! இந்தியா தேசமெங்கும் பிரயாணம் செய்த நீ வங்காளத்துக்கு மட்டும் ஏன் வராதிருக்க வேண்டும்? டில்லியில் உன் காரியம் முடிந்ததும் கல்கத்தாவுக்கு வந்துவிடு. கல்கத்தா புரட்...

பரதக் கலை தூது செல்கிறது



இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் கலாசார பரிவர்த்தனைத் திட்டத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கிறது ஓர் இந்திய கலைக் குழு. பரத நாட்டியக் கலையின் சிறப்புக்களை ஆடிக் காட்டச் செல்கிறார் திருமதி கிருஷ்ணவேணி லக்ஷ்மணன். கலாக்ஷேத்திரத்தில் மாணவியாக இருந்து சிறந்தவர். கலாசாரத் தூதுவராகச் செல்ல முற்றும் தகுதியுடையவர். வாழ்த்துகிறோம்.

சிக்காரர்களின் சொர்க்கம். போலீஸ்காரர்கள் மீது முட்டிக்கொண்டால் கூட உன்னைப் பிடிக்க மாட்டார்கள். வேறு யாரையாவது தேடிக்கொண்டு போவார்கள். கல்கத்தாவுக்கு வந்து, என் வீட்டில் சில காலம் தங்கியிரு. என் கல்கத்தா விலாசம் ஞாபகம் இருக்கிறதல்லவா?'' என்றான்.

''டில்லிக்குப் போய் என் காரியம் முடிகிறவரையில் நான் பிடிபடாதிருந்தால், கட்டாயம் கல்கத்தா வருகிறேன், அமரநாத்! விலாசம் ஞாபகம் இருக்கிறது'' என்று சூரியா கூறினான். அப்போது அடித்த மின்னல் ஒளியில் அவனுடைய கண்களில் துளித்திருந்த கண்ணீர்த் துளிகள் முத்துப் போல் பிரகாசித்தன.

அமரநாத் மேலே ஒன்றும் சொல்லாமல் மௌனமாக வண்டியைத் திருப்பிக் கொண்டு போனான்.

இருட்டில் தன்னந் தனியே நடந்து சென்று சூரியா ரயில்வே ஸ்டேஷனை அடைந்தான். அங்கே யிருந்த இரவு ஸ்டேஷன் மாஸ்டரும் குமாஸ்தாவும் இரண்டு போர்ட்டர்களும் அந்தப் பால சந்நியாசியின் முக தேஜஸைப் பார்த்துப் பிரமித்தார்கள். ''சுவாமி எங்கேயிருந்து வருகிறது? எங்கே போகிறது?'' என்று அவர்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எல்லாக் கேள்விகளுக்கும் ஸ்வாமிகளிடமிருந்து, ''ஹர ஹர மகாதேவா'' என்ற ஒரே பதில்தான் வந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் தெற்கே போகும் ரயில் வரவே சந்நியாசி பிளாட்பாரத்துக்குள்ளே சென்றார். கேட்டில் நின்ற போர்ட்டர் அவரை நிறுத்தலாமா என்று பார்த்தான். அதற்குள் இரவு ஸ்டேஷன் மாஸ்டர், ''வேண்டாம், அப்பா, சாமியாரை நிறுத்தாதே!'' என்று சொன்னார்.

பிளாட்பாரத்தில் வந்து நின்ற ரயில் ஓரமாகப் பால சந்நியாசி விடுவிடுஎன்று நடந்து சென்றார். தேவபட்டணம் ஸ்டேஷனில் அமரநாத் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த இரண்டாம் வகுப்பு டிக்கட் சந்நியாசியிடம் இருந்தது. ஆனாலும் அவர் மூன்றாம் வகுப்பு வண்டிகளைப் பார்த்துக்கொண்டே போனார். மழையை முன்னிட்டு அநேக வண்டிகளில் ஜன்னல் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. ஒரு வண்டியில் சில ஜன்னல்கள் திறந்திருந்தன. சாமியார் அந்த வண்டியில் ஏறினார். ஒவ்வொரு அரை பெஞ்சியிலும் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள்; அல்லது ஒருவர் காலை மடக்கிக் கொண்டு படுத்திருந்தார். ஒரே ஒரு அரைப் பெஞ்சியில் மட்டும் ஒரு மனிதன் சப்பணம் போட்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு டைரியும் பென்சிலும் இருந்தன.

பால சந்நியாசி நேரே அந்தப் பெஞ்சியண்டை போய் நின்று, ''ஹர ஹர மகாதேவ'' என்றார். அந்த மனிதன் நிமிர்ந்து பார்த்து விட்டு, ''உட்காருங்கோ, சாமி!'' என்றான்.

சாமியார் உட்கார்ந்து மடியில் செருகியிருந்த சிறு பட்டுப் பையை எடுத்து அதிலிருந்து கொஞ்சம் விபூதி எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டு, ''திருச்செந்தூர் முருகா!'' என்றார்.

''சாமி எவ்விடத்துக்குப் பிரயாணமோ?'' என்று அந்த மனிதன் கேட்டான்.

''இந்தக் கட்டை காசிக்குப் போய்த் திரும்பி வருகிறது. இராமேசுவரம் போக ஆசை! முருகன் அருள் எப்படியோ?'' என்றார் பாலசந்நியாசி.

''சாமியிடம் டிக்கட்டு இருக்கிறதா?' என்று அந்த மனிதன் கேட்டான்.


''மதுரை வரையில் இருக்கிறது. ஒரு பக்தர் வாங்கிக் கொடுத்தார். அதற்கப்பால் முருகனுடைய சித்தம்!'' என்று சொல்லிக் கொண்டே சந்நியாசி இடுப்பில் செருகியிருந்த டிக்கெட்டை எடுத்துக் காட்டினார்.

''இது இரண்டாம் வகுப்பு டிக்கட் அல்லவா? சாமி தவறி மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏறிவிட்டதே!''


Lakmé
லக்மே அய் மேக்-அப்
மென்மையானது இளமைத் தோற்றம் தருவது
கண்களுக்குப் புத்தழகு ஊட்டுவது.
Lakmé
4
2
5
3
1
1 அகலமான மிருதுவான கண்களுக்கு—விரைவில் உலரும் லக்மே அய்-லைனர். இது ப்ளாக் வெல்வெட், காபி பிரவுன், டவ் க்ரே வண்ணங்களில் வருகிறது. அய்-லைனர் பிரஷ் உபயோகியுங்கள்.
2 லக்மே அய்-ஷாடோ. மென்மையான மனங் கவரும் சாயல்கள். ஃப்ளேம் ப்ளூ, ஜேட் க்ரீன், லாவெண்டர்.
3 லக்மே ஃபோர்-இன்-ஒன் அய்-ஷாடோ. நான்கு வண்ணங்கள் —நிலூ லீட், பேட்னிங் பர்ல் லீட், உள்பட ஓர் அழகான மிக்ஸ் —அன்—மாட்ச் கேஸில்.
4 நீண்ட, தடித்த, படபடக்கும் கண்ணிமைகளுக்கு லக்மே மஸ்காரா. கறுப்பு, பழுப்பு—இரு வண்ணங்கள்.
5 மெல்லிய உருவுள்ள கண்களுக்கு— மிருதுவான இறகு போன்ற புருவங்களுக்கு லக்மே அய்-பென்சில் உபயோகியுங்கள். கறுப்பு வண்ணத்தில் இரு சைஸ்களில் கிடைக்கிறது.
ASP/L-103

சுட்ட புண்கள்! வெட்டுக் காயங்கள்!
விரைவில் இட்டுப் பாருங்கள் பர்னால்

குளுமையுடன் இதமளிக்கும் நிவாரணி







பர்னால் பட்டவுடனே சட்டென ஆற்றும்



ஆற்றும் போதே இதம்



'கட்டு தண்டனை' இன்றியே சட்டெனக் காயமாற்றும்

வீடு என்றால் விபத்துகள் நேர்ந்தான் செய்யும். ஆடிக் களிக்கும் குழந்தைக்கு அடிக் கடி அடிபடுவது சகஜம். சமையலறையிலோ சூடேறித் திளும் கொதி எண்ணெய் தெறிக்கலாம்; காய்கறி நறுக் கும்போது விரலிலே பட்டு விடலாம். எனவே எப்போதும் கைவசம் இருக்கட்டும் பர்னால்! குளுமையுடன் இதமளிக்கும் பர்னால். தீப்புண், வெட்டு, சிராய்ப்பு, கட்டி மற்றும் காயங்களை ஆற்றும் பல்பயன் நிவாரணி. இட்ட வுடன் இதமளித்து ஆற்றுவது பர்னால்.

பர்னால் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கற்ற இல்லங்களில் காயமாற்றிவரும் நம்பகமான நிவாரணி

ASP/B/B-15 TM

''இல்லே, இல்லே. தெரிந்துதான் ஏறினேன். பக்தன் வாங்கிக் கொடுத்தாலும் இந்தக் கட்டைக்கு இரண்டாம் வகுப்பில் போக விருப்பமில்லே. ஆகையால் ரயில் இங்கே நின்றதும் இரண்டாம் வகுப்பி லிருந்து இறங்கி மூன்றும் வகுப்பில் ஏறலாயிற்று!''

அந்த மனிதனுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

''சாமியார் என்ருல் இப்படியல்லவா இருக்க வேண்டும்? இந்தக் காலத்தில் எங்கே பார்த்தாலும் போலிச் சாமியார்கள்தான் அதிகமாகப் போயிருக்கிருர்கள்!'' என்ருன்.

''முருகன் செயல்!'' என்ருர் பால சந்நியாசி.

* * *

ரயில் போய்க் கொண்டிருந்தது. வெளியே மழைத் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. உள்ளே பிரயாணிகள் தூங்கி வழிந்தார்கள்.

சாமியாருக்கும் அவருடைய புதிய பரமானந்த சிடனுக்கும் மட்டும் தூக்கம் வரவில்லே.

''அப்பனே! உன் மனத்தில் கவலே குடிகொண்டிருக்கிறது!'' என்ருர் சந்நியாசி.

''ஆமாம் சாமி! வீட்டிலே சம்சாரத்துக்கு உடம்பு சரியில்லே. ஒரு மாதமாய் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் வருகிறேன். ஒன்றும் குணம் தெரியவில்லே. அதற்குள் இந்த 'டியூடி' வந்து விட்டது.''

சாமியார் விபூதிப் பையை எடுத்து, ''இந்தா! காசி விசுவநாதர் கோயில் விபூதி. இதைக் கொண்டு போய்ப் பக்தியுடன் உன் சம்சாரத்தின் நெற்றியில் இடு. குணமாகி விடும்!'' என்ருர்.

பயபக்தியுடன் அந்த மனிதன் விபூதியை வாங்கிக் கொண்டு, டைரியிலிருந்து ஓர் ஏட்டைக் கிழித்து அதில் பொட்டணம் கட்டினுன்.

''அந்த ஒரு கவலேதானு? இன்னும் ஏதாவது உண்டா?''

''வேறு ஒன்றும் பெரிய கவலே இல்லே. இன்றைக்குப் போகிற காரியம் ஜயமானுல் நல்லது. 'பிரமோஷன்' கிடைக்கும். இல்லாவிட்டால் 'பினாக் மார்க்' கிடைக்கும்.''

ஔவையாருக்குக் கோயில்!

நாஞ்சில் வளநாடு இன்று குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. இப் பகுதியில் குறிப்பாகத் தோவாளை வட்டத்தில் நெல்லைப் புலவரான ஔவை மூதாட்டியை நோன்பிருந்து வணங்குகின்ற வழக்கம் தொன்றுதொட்டு இன்றும் இருந்து வருகிறது. இதனை ''ஔவை விரதம்'' எனக் குறிப்பிடுகின்றனர். எல்லாச் செவ்வாய்க் கிழமைகளிலும் சிறப்பாக ஆடி மாதச் செவ்வாய்க் கிழமைகளில் இவ்விரதம் பெண்களால் பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்நாட்களில் ஔவையாரம்மனுக்குக் கூழும் கொழுக்கட்டையும் படைத்து வணங்குகின்றனர்.

தோவாளை வட்டத்தின் வட பகுதியில் இருப்பது அழகிய பாண்டிபுரம் என்னும் பேரூர். இதனை அடுத்து அமைந்துள்ள குறத்தியறை என்னும் சிற்றூரில் ஔவையாரம்மன் கோவில் ஒன்றிருக்கிறது. இக் கோவிலில் மூலவராக விஷ்ணுவின் திருவுருவம் அமைந்திருந்தாலும் அதனை யொட்டி அமர்ந்த நிலையில் உள்ள திருவுருவம் ஔவை மூதாட்டியினுடையதே என நம்பப்படுகிறது. இங்கு அமைந்திருக்கும் கோவில் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மன்னன் நாஞ்சில் வள்ளுவனாலேயே நிறுவப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுவர்.

குமரி மாவட்டத்தில் ஔவைக்கு மேலும் இரு கோவில்களும் உள்ளன.

தமிழகத்தின் பிற பகுதிகளைவிட ஔவையார் என்ற பெயர் தோவாளை வட்டத்திலேதான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதிகமாகச் சூட்டப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். ஆண்களுக்கு ஔவையார் என்றும் பெண்களுக்கு ஔவையாரம்மை என்றும் பெயர் சூட்டுகிறார்கள். - எஸ். பத்மநாபன்.





''உன் அப்பாவுக்கு நான் வாக்களித்தபடி உன்னை ரேடியோ பாடகனாக்கணும்னு. இது தவிர வேறு வழி இல்லை!''



''வேலை மாற்றலாகிப் போகும் எங்கள் மானேஜருக்குப் பிரமாதமான வழி அனுப்பு விழா நடத்தறோம்.''

''எந்த ஊருக்கு மாற்றலாகிறாராம்?''

''எழும்பூரிலிருந்து மயிலாப்பூர் பிராஞ்சுக்கு!''



''சென்னையிலிருந்து திண்டிவனத்துக்கு தெற்கே இருபது மைலில் உள்ள கோந்தநூர் கிராமத்துக்கு அர்ஜெண்ட்டாக போகணும் வருகிறாயா?''

''என்ன விசேஷம் சார்! அங்கே?''

''அந்த ஊர் டூரிங் டாக்கீஸ் மானேஜர் எனக்கு ஒரு ஓசி பாஸ் அனுப்பி யிருக்கிறார்!''

''யாரோ ஓர் ஆளைத் தேடிக் கொண்டு நீ போகிறாய். இல்லையா, அப்பனே?''

''உண்மை! உண்மை! சாமிக்கு ஞானதிருஷ்டி கூட உண்டு போலிருக்கிறது.''

''திருச்செந்தூர் முருகன் செயல்!'' என்றார் சாமியார்.

''நான் தேடிப் போகிற ஆசாமி அகப்படுவானா சாமி?''

''இந்தக் கட்டைக்கு என்ன தெரியும் அப்பா? அந்த ஆசாமி இந்த ரயிலிலே தான் இருக்கிறதாக இவ்விடத்திலே உதயமாகிறது!'' என்று சாமியார் தம் நெற்றியில் விரல்களால் தட்டிக்கொண்டார்.

''இந்த ரயிலிலே ஐந்நூறு பேர் இருக்கிறார்கள். அங்க, அடையாளம் ஒன்றும் இல்லாமல் ஆளைக் கண்டுபிடி என்று சொன்னால் என்னத்தைச் செய்வது சாமி! சர்க்கார் வேலையைப்போல், அதிலும் இந்த சி.ஐ.டி. உத்தியோகத்தைப் போல் தொல்லை பிடித்த வேலை வேறொன்றுமில்லை!'' என்றான் சீடன்.

''உண்மை, அப்பனே, உண்மை! இந்தத் தரித்திரம் பிடித்த வேலையை நீ விட்டுவிடு! திருச்செந்தூர் முருகன் அருளால் வேறு நல்ல வேலை கிடைக்கும்!'' என்றார் சாமியார்.

* * *


ரயில் திண்டுக்கல் ஜங்ஷனை அடைந்தது. சி. ஐ. டி. சேவகன் பால சந்நியாசியைப் பார்த்து, ''சாமி! நான் இவ்விடத்தில் இறங்கி இன்னும் இரண்டு வண்டிகளைத் தேடிப் பார்த்துவிட்டு வருகிறேன். தாங்கள் இங்கேயே இருந்து என் இடத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். மதுரையிலிருந்து ராமேசுவரத்துக்கு டிக்கட்டைப் பற்றிச் சாமி கவலைப்பட வேண்டாம். மதுரையில் நான் டிக்கட் வாங்கித் தருகிறேன்'' என்றான்.

''இந்தக் கட்டைக்கு டிக்கட் இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதான். முருகன் ரயிலில் ஏறச் சொன்னால் ஏறும்; இறங்கச் சொன்னால் இறங்கும்'' என்றார் பால சந்நியாசி.


* * *

பத்து நிமிஷத்துக்கெல்லாம் அந்த சி. ஐ. டி. சேவகன் ஒரு ரயில்வே போலீஸ் உத்தியோகஸ்தரை அழைத்துக்கொண்டு திரும்பி வந்தான். தான் உட்கார்ந்திருந்த பெஞ்சு காலியாயிருந்ததைப் பார்த்துத் திகைத்தான். ஒருவேளை வேறு வண்டியாயிருக்கும் என்று அங்குமிங்கும் ஓடிப்போய் பார்த்தான்; பயனில்லை. பிறகு அதே வண்டிக்கு வந்து உள்ளே தூங்கி வழிந்த பிரயாணிகள் சிலரைப் பார்த்து, ''இங்கே யிருந்த சாமியார் எங்கே?'' என்று கேட்டான். யாரைக் கேட்டாலும் ''தெரியாது; நாங்கள் பார்க்கவில்லை!'' என்றார்கள். இதற்குள் வண்டி புறப்படும் நேரமாகி, விசில் ஊதிவிட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர் அவனை இரண்டு திட்டுத் திட்டிவிட்டுத் திரும்பிப் போனார். சி.ஐ.டி. சேவகன் ரயிலில் ஏறிப் பழைய இடத்திலேயே போய் உட்கார்ந்து கொண்டான். ''எல்லாம் முருகன் செயல்!'' என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பையிலிருந்து விபூதிப்பொட்டணத்தை எடுத்துப் பிரித்துக் காசி விசுவநாதர் விபூதியை நெற்றியில் இட்டுக்கொண்டான்.

(தொடரும்)


"பந்து பிரெட் அல்வா பார்சல் கேட்டீங்களே எதற்கு?"
"கை, கால், தலை உடைந்த கொலுப்பொம்மைகளை ஒட்ட வைக்க வேண்டியிருக்கு."
பொம்மைக் கண்காட்சி பார்க்க ஆசைப்படுகிறான் குழந்தை! எதிர்வீட்டுக்கு அழைத்துப்போய்க் கொலுவைக் காட்டிவிட்டு வாங்களேன்!
முதல் நாலு படிக்கட்டுகள் கதவடைப்புக் காலமாம். அடுத்த ஐந்து படிக்கட்டுகள் ஸ்ட்ரைக் காலமாம்!
"மூன்று நாட்களுக்கு முன் இங்கு இருந்த மந்திரிப்பொம்மையை இரண்டு நாட்களுக்கு முன் காணோம்; நேற்று மீண்டும் இதே இடத்தில் இருந்த அதே மந்திரிப்பொம்மையை இன்று காணோமே! என்ன அதிசயம்?"
"அதிசய பொம்மை அல்ல அது! அரசியல் பொம்மை!"
இதென்னடியம்மா! எல்லா பொம்மைகளையும் குடை, பானை, இரும்புச்சட்டியால் மூடி மறைத்து வச்சிட்டே?
"நானே தயாரித்த ஊசிப்பொம்மைகளை எலி கடித்து விடாமல் பாதுகாப்புக் கவசம் அணிவித்திருக்கிறேன்!"
"சுதர்ஸன்"





புனிதநதி பெண்ணுருவில்..

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

ஒரு மாறுதலுக்குப் பத்து நாளாவது பெங்களூருக்குப் போய்விட்டு வரத்தான் வேண்டும்; அங்கே இவ்வளவு வெய்யில் இராது. வாட வைக்கும் புழுக்கம் இராது. சித்ரா கல்யாணமாகிப் போனவள்தான். இன்னும் பிறந்தகத்துக்கு வரவில்லை. கங்காவுக்கு அது ஒரு மனப் புழுக்கம்.

அதுவும் ஒரு வேடிக்கைதான். மகளுக்குக் கலியாணம் ஆகும் வரையில் அவளிடம் தென்படும் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தாள் கங்கா. இப்போது அவளுடைய நல்ல பண்புகள் மட்டும்தான் பேச்சில் வருகிறது. பேசும்போதே சொல் ருசியில், நினைவின் தித்திப்பில் அவள் கண்கள் மின்னுகின்றன. புன்சிரிப்பு மலர்கிறது.

வாசல் கதவு மூடியிருந்தது. செருப்பை வெளியிலேயே கழற்றிவிட்டுச் சத்தம் போடாமல் உள்ளே நுழைந்தான் ராகவன்.

''பெங்களூருக்குப் போகலாமென்று பார்க்கிறேன் கங்கா. நீயும் வருகிறாயா?'' என்றான் ராகவன்.

''எதற்கு?''

''ஒரு மாறுதலுக்குத்தான். சித்ராவையும் பார்த்துவிட்டு வரலாம். மெர்க்காராவில் தேயிலைத் தோட்டங்களில் ஒரு 'சர்வே'யும் செய்ய வேண்டியிருக்கிறது. வேலை நிமித்தமாகவே போய்விட்டு வரலாம்.''

கங்கா சட்டென்று பதில் சொல்லவில்லை. அவனுடைய யோசனையை ஏற்றுப் பாராட்டவும் இல்லை. இதைப்போல ஒரு யோசனையை அந்த நாளில் அவள் கைகொட்டி வரவேற்றிருப்பாள். மகிழ்ச்சியில் கண்கள் சுடர்விட்டிருக்கும். அவன் கழுத்தின் மீது கைகளை மாலையாகப் போட்டு ஒரு கணம் தொங்கியிருப்பாள்....

நெஞ்சை ஒரு ஏக்கம் தொட்டுவிட்டுப் போயிற்று.

கங்கா இப்போதெல்லாம் மிகவும் அமைதியாக ஆகி விட்டாள். அவளுடைய தோற்றத்தில் அல்ல — சுபாவத்திலேயே முதுமையின் அடக்கம் தோன்ற ஆரம்பித்து விட்டது.

அவனுக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டே கேட்டாள்.

''மெர்க்காராவுக்குப் பக்கத்தில் தலைக்காவேரி இருக்கிறது இல்லையா? காவிரி உதயமாகிற ஸ்தலம்தானே அது? அங்கே போய் நீராட வேணும் என்று எனக்கு வெகு நாட்களாக ஆசை.''

''போகலாம் வாயேன்.''

மோரை அள்ளிக் குடித்த வாய். சட்டென்று பேச்சு நின்று விட்டது. முகம் நிமிரவில்லை. இளமையின் முறுக்குத் தளர்ந்த பேச்சு அவளுடையது. கண்களில் கருணையும் குரலில் கனிவுமாக அந்தப் பேச்சில் குளிர்ச்சி இருக்கலாம். ஆனால் ஒரு விறுவிறுப்பையும் கவர்ச்சியையும் தேடிய அவனுக்கு அலுப்புத்தான் தட்டிற்று.

அறையின் கட்டிலில் படுத்துக் கொண்டான். கொஞ்சம் கண்ணயர்ந்துவிட்டு, பிற்பகல் அலுவலகத்துக்குப் போக வேண்டும். வெற்றிலை பாக்குத் தட்டைத் தலைக்கு அருகே சிறு மேஜையில் வைத்துவிட்டு கங்கா போய் விட்டாள்.

சித்ரா வளர்ந்து மணமாகி வெளியே போய் விட்டது காரணம் என்று இல்லை. சோழிப் பல் தெரியச் சிரித்துக் கையில் எடுத்துக்கொண்டதும் தோளில் ஏற முயலும் ராஜி, பூந்தட்டாகப் பாவாடை சுற்றி அடங்க வந்து நிற்கும் அளவுக்கு வளர்ந்து விட்டதும் கூட இல்லை; கருங்கூந்தலலைகளுக்கு நடுவே விளிம்பு



கட்டி மலர்ச்சி மாறாமல் நிற்கும் கங்காவின் முகத்தில் இரண்டொரு சுருக்கங்கள் தெரிய ஆரம்பித்து விட்டதும் கூட இல்லை.

அவனுடைய பேச்சில், பார்வையில், பாவனையில், பழகுதலில், ஓர் அயர்ச்சியும் தொய்வும் கண்டு விட்டன. அவன் அறிந்து, பகிர்ந்து அனுபவித்த இளமையின் துடிப்பும் விறுவிறுப்பும் அடங்கி விட்டன. வயதுவாக்கில் வந்து நேர்ந்து விட்ட தளர்ச்சி இல்லை. மனம் சலித்துப் போய்விட்ட நிலைதான். இளமை என்பது வயதில் வரும் பருவம் இல்லை; மனத்தின் நிலையில் மங்காமல் நிற்கும் பசுமைதான்.

அந்த நாளைய நினைவுகள். நினைவின் அடிவாரத்தில் புரண்டு அலையெழுப்பும் வடிவங்கள். இதழ்களின் நடுவில் செருக்குடன் எழும் பூநாக்கைப் போல நிமிரும் கங்காவின் முகம். மாநிலக் கல்லூரியின் பச்சைப் புல்வெளியில் ஜிலுஜிலுவென்று மயில் ஒளி தெறிக்கும் புடவையைக் கம்பீரமாக அணிந்து கொண்டு, புன்சிரிப்புத் தவழ நடந்து வருவாள் கங்கா. பார்க்கும்போதே அவன் இதயம் சிலிர்க்கும்.



தாவர இயல் படிப்பில் மேல் வகுப்புகளில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான் ராகவன். கங்கா கல்லூரிப் படிப்பில் புதிதாக அடியெடுத்து வைத்திருந்தாள். தகதகவென்று வாழைக் குருத்தாகப் பொலிந்த மேனி. கண்ணில் எப்போதும் ஒரு குறும்புச் சிரிப்பு. குழைவும் கெஞ்சலுமாகப் பாடத்தில் சந்தேகம் கேட்கவும் தெரியும். வகுப்பில் அவனை மடக்கிச் சிரிப்பு அலைகளை எழுப்பி விடுகிற மாதிரி கேள்விகள் போடவும் தெரியும்.

வெங்காயத்தின் சிறு நெடியைப் போல அந்த இளமையின் நறுக்கே அவனைக் கவர்ந்தது. பார்வையிலேயே, பேச்சின் குறும்பிலேயே, ஒருவரை யொருவர் ஆழங்காணத் துடிக்கும் வேகம். அவளைப் பிரமிக்க வைப்பது போல ஒரு நாள் திடீரென்று அவள் தந்தையைப் பார்த்துவிட்டு வரப் போனான். அவனுக்குத்தான் பிரமிப்பு காத்திருந்தது. அங்கே. அவர் அவனுடைய தந்தையின் அந்த நாளைய சிநேகிதர்.

அப்பாவைப் பற்றிய பேச்சுக்கள், பழைய ஞாபகங்களின் வருணனைகள் காதில் விழவில்லை. கண்கள் ரொம்ப சாதுவைப் போலத் குனிந்ததலை நிமிராமல் காப்பி கொண்டு வந்து வைத்தவளைத்தான் வட்ட மிட்டுக்கொண்டிருந்தன. உயரத்தை இன்னும் எடுத்துக் காட்டுவதைப் போல, கால் விரலைக்கூட மறைத்து அலையும் பட்டுப் பாவாடை. காலைத் தூக்கி வைக்கும் துடிப்பில், மின்னி மின்னி மறையும் பாதங்களின் செழுமையில் அவன் கண்ணைக் கட்டி நிறுத்தும் இளமையின் பசுமை.

பெண்ணைக் கேட்க வந்த ராகவனின் தந்தையிடம், அவர் சிரித்தபடி தோளில் கையைப் போட்டுக் கொண்டு பேசினார். ''எனக்கு ஆட்சேபனை இல்லை ராமு! ஆனால் உன் பையன் பார்த்தால் ரொம்ப சாதுவாக இருக்கிறானே? கங்காவின் வேகத்துக்கும் குறும்புக்கும் ஈடுகொடுக்க முடியுமோ அவனால்?''

சிற்பக் கதவின் மணி அசைவாய் உள்ளிருந்து சிரிப்புக் கேட்டது. அது கங்காவின் சிரிப்பு. அவனுக்குத் தெரியும்.

கல்யாணத்தின்போதுங்கூட பயமற்று நிமிரும் நேர் பார்வைதான். கைத்தலம் பற்ற நீட்டியபோதும் கைவிரல்களைக் கிள்ளும் குறும்புதான்.

இருளின் கறுப்பிலும் அவள் உடலின் விறுவிறுப்புப் புரியும். விரலோடு விரல் பின்னி இழுத்து மார்பில் வைத்துக் கொள்ளும் போது இளமையின் துடிதுடிப்புத் தெரியும். அவன் அன்பின் சக்தியை ஆழம் காண முயலுவதைப் போல எத்தனையோ குறும்புகள்; வேண்டுமென்றே தோற்றுவித்துக் கொண்ட ஊடலகள்.

சித்ரா பிறந்த பிறகும் அவள் இளமை பழகப் பழக எல்லையே அற்றது போலத்தான் இருந்தது. அவனுடைய ஸ்கூட்டரை எடுத்து அவளே ஓட்டுவாள். அவன் பின்னால் அமர்ந்து கொண்டு போவான். திருப்பங்களின் வளைவில் அவள்

தோள் மீது அவன் விரல்கள் ஆசையாய்ப் பதியும். மழை நாளில் குழந்தைகள் கப்பல் விடுவதைப் போல, அந்த இளமைச் சுழல் அடித்துக் கொண்டு போவதை உணருவது இருவருக்குமே மகிழ்ச்சிதான்.

வேண்டுமென்றே இரண்டாவது இரவுக் காட்சிக்குத்தான் திரைப் படம் பார்க்கப் போவாள் பிடிவாதமாக. சொட்டச் சொட்ட நனைந்தபடி கொட்டும் மழையில் மேலாடை பின்புறம் விசிறி விரிந்து காற்றில் தோகை போலப் படபடக்க, மூன்று மைல் தூரம், ஒரு நாள் ஸ்கூட்டரில் வந்தது நினைவிருக்கிறது.

வீட்டுக்கு வந்து கூந்தலைத் துவட்டிக் கொண்டு, தோள்களில் இன்னும் நீர்த் துளிகள் முத்தாக மின்ன ஊஞ்சலில் மேன கையாக அமர்ந்து கொண்டாள்.

''ஈரம் போயிருக்கிறதா, பாருங்கள்.''

ஈரத்தை உறிஞ்சும் துவாலையை அவ னிடம் நீட்டினாள். அவன் அருகே வந்ததும் அதையே மாலையாக வீசி அவனை அருகே இழுத்துக் கொண்டாள்.

இரவு பத்து மணிக்கு மேல், அவன் கையை தலையணையாக வைத்துக் கொண்டு புதிதாக வந்த துப்பறியும் நாவல் ஒன்றைக் கண்ணகலப் படித்துக் கொண்டிருந்தாள், ஒரு நாள்.

''தூங்க மாட்டாய்? கனவில் எதையாவது கண்டு பயப்படப் போகிறாய்?''

''உங்கள் கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு தூங்கும்போதா?''

அதற்கு அவன் என்ன பதில் சொல்ல?

தங்கமாய் ஒளிர்ந்த நாட்கள். வெல்வெட் டின் நீலத்தில் உருளும் வைர நகையாக மினிர்ந்த பொழுதுகள். பொடி இருளின் தூவலில் மௌனமாய் இன்பக் கதை பேசிய இரவுகள். மேகமே இல்லாத நிர்மலமான வான மாக அவர்கள் வாழ்க்கை. அதில் சலிப்போ, சோர்வோ இருந்ததே கிடையாது.

வறண்ட இந்த இடைவெளிக்கு நடுவே, அந்த நாட்களை நினைத்தாலும் நெஞ்சில் நிழற் காற்று குளிர்ந்து வீசுகிறது.

சித்ரா வளர்ந்த பெண்ணாகிக் கல்லூரிப் படிப்பில் காலடி எடுத்து வைத்து விட்டாள். அவளைப் பார்க்கும்போது அந்த நாளில் கல் லூரியின் புல்வெளியில் அமர்ந்திருந்த கங்கா வின் உருவம் நினைவுக்கு வருகிறது. உருவம் மட்டும் அல்ல; சிரிக்கும்போது கன்னத்தின் குழிவு — விரலை அங்கே வைக்க வேண்டும் என்று ஆசைப்படுவது போல — குறும்பாக ஏதேனும் பேசும்போது கண்ணிமைகளின் சிமிட்டல், எல்லாமே கங்காவின் அழகைத் தான் ஞாபகப்படுத்துகின்றன.

அவனுக்கு இன்னும் இளமை மாறவில்லை. கை இறுக டென்னிஸ் பனியன் அணிந்து கொண்டு வந்தால் வாலிபனைப் போலத்தான் இருக்கிறான். இன்னும் ஒரு மயிர் நரைக்க வில்லை. உதிரவில்லை. மோதிரப் பவுனில்-பதித்த நீலக் கல்லைப் போல அவன் வடிவம் இன்னும் தளராமல், சரிவு காணமல்தான் இருக்கிறது.

ஆனால் கங்கா?

அவளுடைய இளமையையும் செழுமையை யும் ஏன் காண முடியவில்லை? அவளுடைய மங்கிய ஒளி போன்ற வனப்பை, ஒட்டிய கன்னக் கதுப்பை, தளர்ந்துபோன உடற் கட்டை, பார்க்கும்போது காலைக் கனவின் நினைவு போல அவனுக்குப் பழைய நினைவுகள் வேதனையுடன் மனத்தில் புரண்டன. உடல் தோற்றம் மட்டுமல்ல. அவள் நெஞ்சின் உணர்ச்சிகள் கூட வடிந்து விட்டது போன்ற நிலைதான். அங்கே இருந்தும், அவன் கூடவே இருந்தும், அவன் பிடிப்புக்கு எட்டாமல், தொலை தூரம் நழுவிப் போய் விட்டது போலத்தான்.

இருளில் புன்னகை புரிவதைப் பார்க்க முடியாதது போன்ற ஏக்கம். தொட வேண் டும் என்ற ஆசை நெருங்கிய வேளையில் ஒதுங்கி எட்ட உட்கார்ந்தது போன்ற தாபம்.

அது அவனுடைய இரண்டாவது இளமை. சட்டை உரிய உரியப் பாம்பின் மெருகு ஏறு வது போல வயது வாக்கில் கனிந்து வரும் ஒரு உடல் பக்குவம். குறையாத அந்த உத் வேகத்துக்கு அவள் ஈடு கொடுக்க முடியத் தான் இல்லை.

அவனுடைய கங்கா எங்கே? விரல் அழுத் தலில் அவன் நெஞ்சில் ஒளியேற்றும் அவ ளுடைய உற்சாகமான உணர்ச்சிகள் எங்கே? உடற் சூட்டில் வாடிய பூப்போல அவள் குறு குறுத்த முகக் களை ஏன் அடங்கிவிட்டது?


விழித்து எழுந்து கொண்டான். கொஞ்சம் தூங்கியிருந்தால் தெளிவாக, அயர்வு நீங்கி, அலுவலகத்துக்குப் போயிருக்கலாம். ஆனால் நினைவுகளின் குவியலுக்கு நடுவே, தூங்க நிம்மதியான இடைவெளி கிடைக்கவில்லை. வாசலில் ஜீப் வந்து நின்று உறுமி அடங்கும் சப்தம். உள்ளே கங்கா காப்பியைக் கலந்து ஆற்றுகிறாள். நடையில் ராஜி கயிற்றைச் சுழற்றித் துள்ளி ஆடும் அரவம் கேட்கிறது.

முகத்தைக் கழுவிக் கொள்ளப் போனான்.

பெங்களூர் இதமான குளிர்ச்சியுடன் காத் துக்கொண்டிருந்தது. திருச்சியின் புழுக்கத் தில் பனியனை உதறித் தள்ள வேணும் போலத் தோன்றிற்று. பெங்களூரின் தன் மையில் 'ஸ்வெட்டரை'த் தேடி எடுக்க வேண்டியிருந்தது. சித்ராவைப் பார்த்து, அவள் குடித்தனம் செய்யும் நயத்தைக் கண்டு வியந்தது. அவனுக்குப் பிடித்தவை என்று நினைவில் வைத்துக் கொண்டு அவள் செய்து போட்ட சமையலின் சுவையில் திளைத்தது எல்லாமே மனத்தைக் குளிர வைத்தன.

கங்காவின் நெற்றியில்கூட அந்த உழுத வரிகள் இல்லை. பேச்சு சலிப்பில் உதிருவது போல இல்லை. குடும்பப் பொறுப்பையும், கவலைகளின் கனத்தையும் கொஞ்சம் துறந்து விட்ட நினைப்பிலோ என்னவோ, அவள் நடையும் பேச்சும் கூட லேசாகி யிருந்தது.

மெர்க்காராவில் ஒரு நண்பர் வீட்டில் தங்குகிறார்கள். படிப்படியாக இறங்கும் தேயிலைத் தோட்டங்களின் பசுமை. ஜிலுஜிலு வென்ற காற்று. உடலிலேயே ஒரு குளிர்ச்சி. மார்பின் குறுக்கே புடைவையை இழுத்துக் கட்டி அணிந்தபடி, நிமிர்ந்த பார்வையும், எடுப்பான தோற்றமுமாக, நடந்த குடகுப் பெண்கள். அந்தச் சூழலின் கலகலப்புக்கு, நீலமும் சிவப்பும் அரக்குமாகத் தென்றலில் பூ அசைவாய் அவர்கள் நடந்து செல்லும் காட்சியே ஒரு ரம்மியமாகத்தான் இருந்தது.


இரண்டுமே
இயக்கத்தில்
உன்னதமானவை.
CAMY
GENEVA
Ratan Batra/CWITAM 14-A


தலைவலி • ஃப்ளூ • பல்வலி
• உடல்வலி முதலியவற்றை
உடனடியாகக் குணப்படுத்த
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு
ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள்
டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ
முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.
ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!
SALOFEN
'68 TM


பவுடரினால் துலக்கிய பாத்திரத்தின்மீது
துலக்கிய பின்னும் பிசுக்கு
ஒட்டியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது விம்.
பிசுக்கு இல்லை!
கசடு இல்லை!
கீறல் இல்லை!
Vim

விடியற்காலையிலேயே தலைக் காவேரிக்குக் கிளம்பி விட்டார்கள். வழி நெடுக இயற்கை பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. பாக மண்டலாவில் குறுகி நெளிந்து மின்னிக் கொண்டிருந்தது ஒரு சிற்றாறு.

''இதுதான் காவிரி. முதன் முதலாக மலையிலிருந்து இறங்கித் தரையில் அடி யெடுத்து வைத்து நடக்கிறாள்.''

அந்தப் பேச்சை அவனால் நம்ப முடியவில்லை திருச்சியில் அவன் பார்வையின் வீச்சுக்கே எட்டாமல் விரியும் காவிரியா இது? அங்கே சம்பிரத்தில் அவனைப் பிரமிக்க வைக்கும் நதி எங்கே? இரகசிய ஒலியுடன் சிறு பாறை களை மாலையிட்டு அணைத்துப் பெருகும் இந்தச் சிற்றாறு எங்கே?

''தலைக்காவேரியில் இதுகூட இல்லை. படிக் கட்டுக்களுக்கு நடுவே அடங்கும் குளம்தான் குமிழியாகப் பொங்கி வரும் ஊற்றுத்தான் அங்கே. குளத்தின் ஆழம்கூட இடுப்பு மட் டத்துக்குத்தான்.''

மலைப்பாதை வளைந்து வளைந்து செல்கிறது: சுந்தரச் சோலைகளின் சூழல் தெரிகிறது. பாறைகளின் பெரிய கரிய உருவம் தெரிகி றது. ஆனால் அது அருவியாகத் துள்ளி வரும் தோற்றம் எங்குமே கண்ணில் படவில்லை. தலைக் காவேரியில் பொங்கும் – புண்ணிய நதி பிறக்கும் அந்த ஊற்று – அதற்குப் பின் எங்கே மறைந்து விடுகிறது?

தலைக்காவேரியில் அமிழ்ந்து நீராடி நிமிர் கிறாள். படிக்கு மேல் அமர்ந்து பூஜை செய் பவரின் குரல் காதில் விழுகிறது.

''கமண்டலத்தின் அருகில் கவிழ்ந்த செம் பிலிருந்து பெருகிய நதி என்பது புராணம். காவிரி இங்கே கண்ணுக்குத் தெரியாமல் தோன்றி ஓடுகிறாள். மலைக்கு அடியில் பார் வைக்குப் படாமல் நடந்து செல்கிறாள். ஐப்பசி மாதம் துலா ஸ்நானத்தின்போது இந்தக் குளத்தில் ஊற்று குமிழி குமிழியாகப் பொங்கும். நீராட மக்கள் திரள் திரளாக வருவார்கள்....''

நீரில் அமிழ்ந்து விட்டது போல அவர் பேச்சு அவன் காதில் கேளாமல் சத்தமும் உருவமும் இழந்து அடங்கி விட்டது. வழி நடக்கும் காவிரியுடன் கூடவே செல்லும் அவன் நினைவு. படிப்படியாக இறங்கி பாக மண்டலத்தில் மெல்லடி வைக்கும் சிற்றாறு. கொங்கு நாட்டில் பாறைகளில் மோதிச் செல்லும் துடிப்பு நிறைந்த நதி. சோழ நாட்டில் கம்பீரமாகப் பரந்து விரியும் தோற் றம். கடலை நோக்கிச் செல்லச் செல்லச் சுருங்கும் அதன் தோற்றம். ஐப்பசி மாதம் துலா ஸ்நானத்துக்கு அவன் மாயூரத் துக்குப் போயிருக்கிறான். அங்கே குழந்தை கூடக் குளிக்கலாம். அவ்வளவு அடக்கம். சுருக்கம், காவிரியின் ஓட்டத்தில்.

இவை எல்லாமே ஒரே காவிரியின் வெவ் வேறு தோற்றங்களா? அனைத்திலும் மணி யைக் கோத்து ஓடும் நூலைப் போல, மறைந்து நிற்கும் அதன் புனிதம்? மண்ணுக்கு உயி ரூட்டும் செழுமை? உடலுக்கு வளம் தரும் சத்து?

காவிரி மாறவில்லை. உருவமும் தோற்றமும் மாறினாலும் வேகமும் துடிப்பும் வேறுபட்டா லும், காவிரியின் புனிதமும் தண்மையும்

சுருங்கவில்லை. உலோகச் சத்தும் வண்டலு மாகப் பொழியும் செழுமை குறையவில்லை. அள்ளிக் குடிக்கும் நீரின் இனிமை பிரியவில்லை.

ஆனாலும் காவிரியின் உணர்ச்சிகள் தலைக் காவேரியைப் போல திருச்சியில் இல்லை. திருச்சியைப் போல மாயூரத்தில் இல்லை.

ஒரு பெண்ணின் வாழ்க்கையும் அப்படித் தானோ? கள்ளமில்லாத குழந்தையாய், துடிப்பு நிறைந்த பருவப் பெண்ணாய், கவர்ச்சி யில் நிமிரும் மணமகளாய், நெஞ்சில் மணக் கும் மனைவியாய், குழந்தையை அணைக்கும் தாயாய், குடும்பப் பொறுப்பில் குறுகி அழுந் தும் குடும்பத் தலைவியாய் – கங்கா!

அந்த நினைவின் ஈடுபாட்டில் அவனுள் நேர்ந்து கொண்டிருந்தது ஒரு ரஸாயனம். புதிரவிழ்ந்து விடுபடும் உணர்வு.

''தலையைத் துவட்டிக் கொள்ளுங்கள்.''

ஈரத்தை உறிஞ்சும் துவாலையை நீட்டு கிறாள் கங்கா. அன்றொரு நாள் மழையில் நனைந்து திரும்பி வந்தபோது – அன்று அவன் புறமாக நீண்டதும் இந்தக் கரங்கள்தாம். அவன் பார்வை நிமிர்ந்தது.

கையில் பூஜைத் தட்டு, மறு கையில் மலர்க் கொத்து. பதியக் கட்டிய புனித உணர்ச்சிகளைத் தூண்டும் புடவைக் கட்டு. நெற்றியில் ஒளிரும் குங்குமம். மஞ்சள் மெரு கேறிய கன்னங்கள். அதே கங்காதான்.

''என்ன யோசனை?''


அவன் பார்வை ஒரு பரிவினால் இளகிற்று.


அந்தக் குரலில் தெரிந்த கனிவு. அதற்குள் கனிந்து நின்ற அன்பு; மாவுள் பதித்த வெல் லம் போல. அதற்கு ஏது மாறுதல்?

''ஒன்றுமில்லை கங்கா. நதிகளுக்கு ஏன் பெண்ணைப் பெயரிட்டு அழைக் கிறார்கள் என்று இப்போதுதான் புரிந்து கொண்டேன்.''

''என்ன சொல்கிறீர்கள்? உங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லை.'' நிமிர்ந்த முகத்தில் மூக்குத்தியின் நட்சத்திரச் சுடர் தெறித்தது. அவன் மேல் அவளுக்கு ஒரு தனிப் பரிவு எழுந்தது.

''உனக்குப் புரிய வேண்டாம், கங்கா.''





இந்தப் பக்கம்

	பெயர்	வயது	டெஸ்ட் அனுபவம்
1.	டோனி லூயிஸ் (காப்டன்)	34	0
2.	ஜி. ஜி. ஆர்னல்ட்	27	6
3.	ஸி. எம். ஓல்ட்	23	0
4.	எம். எச். டென்னெஸ் (உதவி காப்டன்)	31	1
5.	நார்மன் கிஃப்போர்டு	32	9

எதிர்ப் பக்கம்

6.	பி. உட்	29	1
7.	டி. எல். அண்டர்வுட்	27	27
8.	டோனி கிரெய்க்	25	5
9.	ஜே. டி. பிர்கென்ஷா	31	0
10.	ஆலன் நாட்	26	36




இந்தியாவுக்கு வரவிருக்கும் இங்கிலாந்து எம். ஸி. ஸி. கிரிக்கெட் கோஷ்டிக்கு வரவேற்புக் கூறுகிறோம். வருகிற விளையாட்டு வீரர்களில் அனுபவஸ்தர்களும் உண்டு; டெஸ்ட் அறிமுகங்களும் உண்டு. டெஸ்ட் அறிமுகமே இல்லாத ஒருவரை காப்டனாகவும் ஒரே ஒரு டெஸ்ட் அனுபவம் உள்ளவரை உதவிக் காப்டனாகவும் போட்டிருப்பது துணிச்சலைக் காட்டவில்லையா? அனைவருக்கும் நமது வாழ்த்துக்கள்.





இங்கிலாந்து கோஷ்டியின் இந்திய விஜயம்








ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
1
ஒரு சர்க்கார் காரியாலயம். நமது ஹீரோ ஜகந்நாதன் என்ற ஜக்கு டிஸ்பாட்ச் கிளார்க்.
கொர் ர் ர்... கொர் ர் ர் ...
ஜக்கு அருகே உயர் அதிகாரி பாராங்குசம்.
கண் விழிச்சுக்கிட்டு இருக்கிறதா வேஷம் போட இதை மாட்டிக்கிட்டாலும் குறட்டை உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டதே!
குறட்டையா? குறட்டை என்னை விடறதே இல்லை ஸார்!
சரியான குளறுவாய்! ... நீ குறட்டை விடறதும் விடாததும் உனக்கு எப்படி தெரியும்? பக்கத்தில் இருக்கிறவங்களுக்கு தானே தெரியும்?
திருஷ்டி பட்டிருக்குமோ ஸார்? வீட்டுக்குப் போனதும் அம்மாவைக் கழிச்சுப் போடச் சொல்றேன்.
அதிகப் பிரசங்கி! நாலு நாள் கடிதாசுகளை டிஸ்பாட்ச் பண்ணாமே அப்படி அப்படியே டிராயர்களுக்குள்ளே அடைச்சு வைச்சிருக்கியே, அமைச்சரிடம் இதனால் எனக்கு எவ்வளவு கெட்ட பெயர் தெரியுமா?
அமைச்சருக்கு உங்களிடம் உள்ள கெட்ட பெயரை விடவா ஸார்?
ஜக்கு! இது பெரிய இடத்து விவகாரம் பி ஸீரியஸ்! அமைச்சரின் சிபாரிசின் பேரில் அப்பண்ணு அண்டு சுப்பண்ணு கம்பெனிக்கு பத்து லட்சம் காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறோம். ஒரு வாரமாச்சு இன்னும் டிஸ்பாட்ச் ஆகாமே இங்கேயே தூங்கிக்கிட்டிருக்கு, உன்னோடு சேர்ந்து ....
தாமதத்துக்கு அமைச்சர் காரணம் கேட்கிறார். ஆக்ஷன் எடுக்கச் சொல்கிறார்! அதனால் உன்னை ஸஸ்பெண்ட் பண்ணி உத்தரவு போடப் போறேன்!
ஸார் ஸார்! நான் புள்ளை குட்டிக்காரன் ஸார்!
அடப்பாவி! கல்யாணமே ஆகலை அதற்குள் புள்ளை குட்டிகளா?
ஸாரி ஸார்! அடிக்கடி வாய் குளறுது. எனக்கு வேலை போயிடுச்சுன்னு அம்மியையே நம்பியிருக்கிற என்னை யார் காப்பாத்துவாங்க?


ஜக்குவின் கண்டத்திலிருந்து ஜிம்மி என்ற சொல் புறப்பட்டதுமே...
ஐயோ பிசாசு!
குட்டி சாத்தான்!
ஜிம்மி! ஜிம்மி! கொயட்! சமத்தா இருக்கணும்
ஆபீஸில் நாயா? அதையும் ஒளிச்சு வெச்சியா? உன்னெ ஸஸ்பெண்ட் பண்ணக் கூடாது டிஸ்மிஸ் செய்யணும்!
ரிங் ரிங்! ரிங் ரிங்!
ஹல்லோ! பாராங்குசம் ஹியர்! யார் அமைச்சரா? யெஸ் ஸார்! ஆகட்டுங்க, ஆமாங்க, சரிங்க, நல்லதுங்க, அப்படியே...
தலையாட்டி பொம்மை தோத்து போச்சு போ!
ஜக்கு! உனக்கு இன்று பாதாம் அல்வா ட்ரீட்! அப்பண்ணா அண்டு தப்பண்ணா கம்பெனி திவாலாகும் நிலையில் இருக்கதாம். இந்த காண்ட்ராக்டைத் தான் நம்பியிருந்தார்களாம். அமைச்சர் தகுதியற்ற கம்பெனிக்கு சிபாரிசு செய்திருக்கிறார் என்று எதிர்க்கட்சி நபர் சட்ட மன்றத்தில் சாடியிருக்கிறார்...
... அந்த கம்பெனிக்குக் காண்ட்ராக்டே தரப்படவில்லை என்று சொல்லி அமைச்சர் தப்பிச்சுக்கிட்டார் இப்போது. எல்லாம் உன் சொம்பயினால் விளைந்த நற்பயன்! உன் தாக்கம் வாழ்க, வளர்க!
அதோடு லஞ்ச ஊழலும் வாழ்க!
ஆனால் ஜக்குவைப் பழி வாங்க அப்பண்ணாவும் தப்பண்ணாவும் தீர்மானித்து விட்டனர்.
எத்தனை பேருக்கு எத்தனை லஞ்சம் கொடுத்தோம், எல்லாம் தூங்கு மூஞ்சி ஒருவனால் கெட்டது!
ஹல்லோ! பிச்சுவாகத்தி பிச்சுமணியா? உன் உதவி தேவை! ஜக்குங்கிற ஒருத்தனைத் தீர்த்துக் கட்டணும்...

தொடரும்

பரந்த முகம், அகலமான நெற்றி. அதை அலங்கரிக்கும் திரு நீறு. தலையில் கட்டுக் குடுமி வயது ஐம்பதைத் தாண்டினாலும் சற்றும் தளராத தோற்றம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இம்மூன்றையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மீறாத திட மனம், உழைப்பால் உயர வேண்டும் என்ற ஒரே குறிக்கோள், இவை அனைத்தும் ஒருங்கே அமைந்த மனித தெய்வத்தைப் பார்க்க வேண்டுமா? அவர் தான் அந்தப் பள்ளிக் கணக்கு வாத்தியாரையா, ராமநாதன். அந்தத் தெய்வத்தின் அறையில் கையைக் கட்டியபடி நின்று கொண்டிருக்கிறான் ராஜா. அவன் மனத்தில் தெய்வ சந்நிதானத்தில் நிற்பது போன்ற உணர்ச்சிதான் நிரம்பி நின்றது. அவன் அவருடைய மாணவன், பத்து வருடங்கள் அவரைப் பிரிந்து, அயல்நாட்டுப் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பிய அவன் அவரைக் காணும் ஆவலில் நின்று கொண்டிருக்கிறான். அவர் கடமையே கண்ணாக எதையோ எழுதிக் கொண்டிருக்க, அச்சமயத்தில் தொந்தரவு செய்ய அவன் விரும்பவில்லை, அவரும் அதை விரும்ப மாட்டார்.

அவர் மெல்லத் தலையை நிமிர்ந்து அவனைப் பார்த்தார். அந்தப் பார்வை நிஷ்டை கலைந்த பெரும் முனிவர் பார்ப்பது போல் இருந்தது.. அவன் கண்களில் நீர் தேங்க, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீ என் ஸ்டூடண்ட் ராஜா இல்லே?'' தட்டுத் தடுமாறியது அவர் குரல்.

''ஆமாம் ஐயா! நான் உங்க ராஜா தான்.''

''அட முரட்டுப் பயலே! எப்படா சீமையிலிருந்து வந்தே?'' என மகிழ்ச்சி பொங்கக் கூறி அவனை அப்படியே கட்டி அணைத்து உச்சி முகந்தார். தாயின் அணைப்பில் ஏற்படும் உணர்ச்சி அவன் உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

''இன்றுதான் ஐயா வந்தேன்.''

''டேய் ராஜா உட்காரு. ஆளே மாறிட்டயே, என் கண்ணே பட்டுவிடும்போல இருக்கே'' எனக் கூறி அவனைக் கண்ட மகிழ்ச்சியில் செய்வது அறியாது தடுமாறிக் கொண்டிருந்தார்.

''அப்படிக் கூறுகிறீர்கள் ஐயா! நீங்கள் எனக்கு அளித்த பிச்சையில்தான் நான் இன்று 'யேல்' யூனிவர்ஸிடியிலேயே முதல் மாணவனாக டாக்டர் பரீட்சையில் தேறி இப்பொழுது உங்கள் முன் நிற்கிறேன்.'' அவன் நீர் மல்கக் கூற அவரிடமிருந்து வார்த்தைகளே வெளி வரவில்லை. அவர் கைகள் அவனைத் தழுவியபடியே இருந்தன, அவர் கண்கள் பனித்திரையிட்டுக் கொண்டிருந்தன.

''ஐ ஆம் ரியலி ப்ரவுட் ஆஃப் யூ மை சன்! என்னை மன்னிச்சிரு ராஜா இந்தச் சந்தோஷச் சமாசாரத்தைக் கேட்டு அசடு மாதிரி அழுறேன் இல்லே!'' எனக் கூறித் தம் மேல் துண்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டு, அவன் கண்களில் படர்ந்த நீர்த் திவலைகளையும் தாமே துடைத்து விட்டார்.



தங்கப் பதக்கம்

பிரியதரிசினி



''நான் உங்களுடையவன்; உங்களால் உருவாக்கப்பட்டவன். தாங்கள் எனக்கு அளித்த பொன்மொழிகளையே மனத்தில் கொண்டு என் வாழ்க்கைப் படகை அமைத்தவன், உங்களுக்காக நான் எதையும் செய்யக் காத்திருக்கிறேன்'' என உணர்ச்சியின் கொந்தளிப்பில் அவனிடமிருந்து வார்த்தைகள் பீறிட்டுக் கொண்டு வந்தன.

''அசட்டுப் பயலே! மெல்ல இதையெல்லாம் சொல்லித் தப்பிக்கப் பார்க்காதே! நீ சீமைக்குப் போகும்போது நான் என்ன சொன்னேன்? மறந்து விட்டாயா? நன்னு ஞாபகப்படுத்திப் பார். என்னையே திக்குமுக்காடச் செய்யற மாதிரி சீமையிலிருந்து நிறைய வாங்கிண்டு வரணும்னு சொன்னேனே, எனக்கு என்ன வாங்கிண்டு வந்திருக்கே?'' எனக் கூறித் தம் இரும்புக் கரங்களை அவன் முன் நீட்டினார். ராஜா தான் கொண்டு வந்திருந்த 'ப்ரீப் கேஸை' அவர் கையில் திணித்தான். அதைத் திறந்து பார்த்த அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. அதனுள் அவனுக்குக் கிடைத்த தங்கப் பதக்கங்களும் நற்சான்றிதழ்களும் நிரம்பி வழிந்தன. அவர் அவனை அப்படியே வாரி அணைத்தார்.


''டேய், ராஜா...! நான் எதை மனசுலே வைச்சுண்டு எப்படிச் சொன்னேனோ அதைப் போலவே வாங்கிண்டு வந்துட்டயே. இதைவிடப் பெரிசா 'குருதட்சிணை'யை எவன் எனக்குக் கொடுக்கப் போறான்?'' என அவர் அவனைத் தழுவியபடியே கூறினார்.

''ஐயா! இந்தப் பதக்கம், 'யூனிவர்ஸிட்டியிலேயே தலைசிறந்த மாணவன்' என்பதற்காக அளிக்கப்பட்டது..... இந்தப் பதக்கம் எனது ஒழுக்கத்துக்காக அளிக்கப்பட்டது.... இது...''

''டேய் அப்பா! இந்தக் கனம் கனக்கிறதே, இதை எதுக்காக வாங்கினே?''

''ஐயா, இது ஒரு கட்டுரைப் போட்டியில் அளிக்கப்பட்ட பதக்கம், நீங்க எப்பவும் சொல்வீர்களே 'உழைச்சுச் சம்பாதிடா, அந்தச் சம்பாத்தியம்தான் ரத்தத்தோடு கலக்கும். வண்டி இழுத்து, நெற்றி வியர்வை சிந்திச் சம்பாதிக்கிறவனே அவனுக்கு இருக்கிற மன நிம்மதியும் திருப்தியும் வாழ்க்கையிலே இருக்கிற ஒரு பிடிப்பும் மாட மாளிகையிலே இருக்கிறவனுக்குச் சத்தியமாக் கிடையாதுடா'ன்னு அடிக்கச் சொல்வீர்களே, அதை மனத்தில் வைத்துக் கொண்டு நான் எழுதிய ஒரு கட்டுரைக்குக் கிடைத்த பதக்கம் ஐயா இது!'' என நாத் தழுதழுக்க அவன் கூறினான். அவர் பெட்டியிலிருந்த அத்தனை பதக்கங்களையும் எடுத்து அவன் சட்டையில் குத்தி, அவனைப் பார்த்துச் சிரித்து ரசித்தார். ''ராஜா! நான் என் பிறவிப் பயனை அடைஞ்சுட்டேன், செத்தே இரு'' எனக் கூறிக் கண்களில் படர்ந்திருந்த பனியைத் துடைத்துக்கொண்டே தம் மனைவியை அழைத்து ''என்னடி காமு இப்படிப் பார்க்கிறே? 'என்னடா இவன் உடம்பெல்லாம் மெட





லாக் குத்தி வைச்சிருக்கே, இவன் என்ன மாஜிக்குக்காரனோ, சர்க்கஸ்காரனோன்னு பார்க்கிறியா? இவன் என் ஸ்டூடண்டுமா! எப்படி இருக்கான், பார்த்தியா! அத்தனையும் அவனுக்குக் கிடைத்த பதக்கங்களாக்கும்.''

''ஏய் உமா! ஏன் வெட்கப்பட்டுண்டு ஒதுங்கி நிக்கறே, பெண்கள் வெட்கப்படறது இந்தக் காலத்திலே 'டிஸ்குவாலிபிகேஷ'னுக்கும். இங்கே வா. உங்கிட்ட அடிக்கடி சொல்லுவேனே ராஜா ராஜான்னு அவன்தானம்மா இவன்'' என அவர் தம் மகள் உமாவிடம் கூற, ராஜா பழ ரசத்தைப் பருகியபடி நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''டேய் ராஜா! இவதாண்டா என்னோட ஒரே பெண் உமா. இவள் கல்யாணத்தை முடிச்சுட்டா நானும் ராஜாதான்.''

''உங்க நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடி நடக்கும் ஐயா.'' ராஜா விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

''அவளைக் கண்டு மெய்மறந்து நின்றது போதும், கொஞ்சம் முழிச்சுண்டு நம்ப காரியத்துக்கு வாங்கோ. நம்ம உமாவுக்குப் பத்து பதினைந்து வரன் பார்த்தோம், அத்தனையும் தட்டிப் போச்சு. பார்த்தவனெல்லாம் பிடிக்கலேன்னு சொல்லிவிட்டுப் போயிட்டான். அது ஊரிலே பரவி இப்ப ஒருத்தனும் அவளைக் கல்யாணம் செஞ்சுக்கத் தயாராக இல்லே. இப்படியே தள்ளிண்டு போனால் அவள் கதி என்ன ஆகிறது. இதுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமா?''

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்லறே? நம்ப கதையை நீ எடுத்துச் சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா?''

''உங்களுக்குத் தெரிஞ்ச லட்சணம்தான் நன்னாத் தெரியறதே? ஏன், இவன்தான் உங்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்யறேன்னு சொல்றானே.''

''அது உன் காதிலேயும் விழுந்துடுத்தா?''

''ஆமாம். உங்களுக்கு எதுவுமே தெரியாது. அவன் பேச்சைக் கேட்டு நின்னுண்டிருப்பேன். 'ஏண்டா, என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறியாடா'ன்னு கேளுங்கோ, அதுக்கு 'உங்க மாணவன் உங்க மாணவன்'னு மார் தட்டறேளே, அவன் என்ன பதில் சொல்றான்னு பார்க்கலாம்!''

''.........''

''ஏன்னா, வாய் இழிஞ்சு விடே அதிரும்படியா சித்தே மின்னாடிக் குதிச்சேளே, இப்ப ஏன் பேயறைஞ்ச மாதிரி உட்கார்ந்திருக்கேள்? என்னை முழிச்சுப் பார்த்தது போதும், நாளைக்கு அந்தப் பிள்ளையாண்டான் உங்களைப் பார்க்க வரேன்னு சொல்லியிருக்கான். வந்தவுடன் பட்டுன்னு கேட்டுவிடுங்கோ, உங்களாலேதானே இன்னிக்கு இந்த நிலையிலே இருக்கேன்னு சொல்றான். உங்களுக்காக உமாவைப் பண்ணிண்டா என்னவாம்? என்னைப் போல் கொஞ்சம் நிறம் கம்மி அவள், அவ்வளவுதானே? வாயைத் திறந்து பேச மாட்டேளா?''

''சரி, சரி. போடி பார்க்கலாம்'' என்று கூறித் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பினர் ராமநாதன்.

மறு நாள் ராஜா தன் காரைத் தெரு ஓரமாக நிறுத்திவிட்டு வாத்தியார் ஐயா வீட்டில் நுழைந்தான்.

''வாடா ராஜா, உட்கார். எதுக்கப்பா இந்தப் பழமெல்லாம்?''

''ஐயா! உங்களுக்கு எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.''

''நீ இப்படி ஏதாவது அசட்டுத்தனமா உளறிட்டுப் போயிடறே. என் நிலைமை தர்ம சங்கடமா ஆகிவிடுகிறது. முக்கியமா உங்கிட்டே ஒரு விஷயம் மனம் விட்டுப் பேசணும். உன்னோட ஏழை வாத்தியாருக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை. அதை உன்னாலே நிறைவேற்ற முடியுமா?'' தம் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தபடியே அவர் கூற, ''தயங்காமல் சொல்லுங்க ஐயா'' என்றான் ராஜா.

''டேய், ராஜா! இந்தத் தெருக் கோடியிலே ஜெயந்தின்னு ஒரு பொண்ணு இருக்கா. அவளும் என் மாணவிதான். லட்சணமா இருப்பா. நல்ல குழந்தை. படிப்பிலேயும் மரியாதையிலேயும் உன்மாதிரிதான். இவ்வளவையும் அவளுக்குக் கொடுத்த ஆண்டவன் அவளை ஏழையாகப் பிறப்பிச்சுட்டான். அவளை நான் என் பொண்ணு மாதிரித்தான் நினைச்சுண்டிருக்கேன். கல்யாணம் செய்யக்கூட வழியில்லாமல் பாவம் அவா தவிக்கிறா. எனக்கு உன் மாதிரி ஒரு பிள்ளை இருந்தால் நிச்சயம் ஒரு வித்தியாசமும் பார்க்காமல், அவளை என் மருமகளா ஏத்துண்டிருப்பேன். இந்த ஊரில் அவளுக்குச் சரியானவனா உன்னைத் தவிர வேறு யாரும் எனக்குப் படல்லே. என்னடாது வாத்தியார் ஐயா மெல்ல உரிமை கொண்டாடறேனேன்னு பார்க்கிறியா? நீ ஏழை பணக்காரன்கிற பாகுபாடெல்லாம் பார்க்க மாட்டேங்கிற தைரியத்திலேதான் கேட்கிறேன்'' எனக் கூறி வாசலில் பார்வையைச் செலுத்தினார். ''ஏய் உமா, ஜெயந்தி போறா. கொஞ்சம் அவளை உள்ளே கூப்பிடு'' என்று வெளியில் கோலம் போட்டுக்கொண்டிருந்த உமாவுக்குக் கட்டளையிட்டார். உமா அப்படியே அதை விட்டுவிட்டு அவளை அழைக்க ஓடினாள். காமு மனத்திலேயே பொருமிக்கொண்டு நின்று கொண்டிருக்க உமா ஜெயந்தியை உள்ளே அழைத்துக் கொண்டு வந்தாள்.

''குழந்தே, இவன் என்னோட 'மாணவன்'. சீமையிலே போய்ப் படிச்சுட்டு வந்திருக்கான்; வேலை தேடிண்டு இருந்தயே என்னம்மா ஆச்சு? வீட்டிலே எல்லாரும் சௌக்கியமா? நாளைக்கு வரேன்னு சொல்லும்மா'' என அவர் கூறி உமாவைப் பார்த்து, ''வெள்ளிக்கிழமையா இருக்கு. ஜெயந்திக்கு வெற்றிலை பாக்கு கொடும்மா'' என்றார். ஜெயந்தி நாணிக் கோணிக் கொண்டு அவர்களிடம் விடை பெற்றுச் சென்றாள்.

''என்ன ராஜா, பேசாமல் உட்கார்ந்திருக்கே? அதுக்குள்ளே வெட்கமா, அவளை பிடிச்சிருக்கா இல்லையான்னு பட்டுன்னு சொல்லு..... கல்யாண விஷயத்திலே போய் அவசரப்படுத்தறேனேன்னு பார்க்கிறியா? அப்ப யோசிச்சே சொல்லு.'' ராஜா அவரை

நாகரீகத்தின் வரலாறு



ஆதி மனிதன், குகைகளில் வசித்து வந்தான்; அங்கு, தான் வாழ்ந்ததை உலகுக்குப் புலப்படுத்த, ஓவியங்களை தன் போக்கில் கிறுக்கிவைத்தான். பின்னர், கட்டிடம் கட்டக் கற்றுக்கொண்ட அவன், சாலச் சிறந்த கட்டிடப் பொருளைத் தேடிக் கண்டறியும் ஆராய்ச்சியில் இறங்கினான்; நூற்றாண்டு காலமாய், களிமண், வைக்கோல், கல், மூங்கில் போன்றவற்றைப் பயன்படுத்தினான்; இன்னமும் மேலான பொருள்களையே தேடி ஆராய்ந்து, இறுதியில் அதைக் கண்டறியவும் செய்தான். நிரந்தரமாக நீடித்திடத் திருக்கும், உறுதி வாய்ந்த ராக்ஃபோர்ட் பிராண்ட் டால்மியா சிமெண்டைப் பயன்படுத்தி, இன்று அவன் கட்டிடம் எழுப்புகிறான்.

ராக்ஃபோர்ட்
பிராண்ட்
டால்மியா சிமெண்ட்

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்.,
பதிவு அலுவலகம் மற்றும் தொழிற்சாலை:
டால்மியாபுரம், தமிழ்நாடு.
தலைமையகம் 4, சிந்தியா ஹவுஸ், புதுதில்லி-1

GOVAN

நிமிர்ந்து பார்த்து, ''நாளைக் காலை உங்களைப் பள்ளியில் சந்தித்து என் முடிவைச் சொல்லுகிறேன், ஐயா!'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

'' இப்ப உங்களுக்குப் பரம திருப்தி தானே ! எக்கேடு கெட்டுப் போங்கோ, வீட்டிலே குதிராட்டம் ஒருபெண்ணை வைச்சுண்டு, இன்னொருத்திக்கு வரன் தேடறாராம், உங்க மூளையைக் கொண்டு மியூஸியத்திலேதான் வைக்கணும்!''

''ஏய் காமு வாயை அடக்கி மரியாதையாப் பேசு, நீ சொன்ன மாதிரி நான் நடந்திருந்தேன்னு, என் மானம், மரியாதை எல்லாம் என்ன ஆகிறது, ஊர் உலகம் சிரிக்கும்டீ.... அவன் எனக்கு எதுக்காகடீ கடமைப் படணும்? நான் என்ன அவனுக்குப் பெரிசா கிழிச்சுட்டேன் ! நான் என் கடமையைச் செய்தேன். அவன் படிச்சான், முன்னுக்கு வந்திருக்கான். பாவம் அவாளும் ஒரியாட்டம் குழந்தையை வைச்சுண்டு சிரமப்படறா. போதாக் குறைக்கு வரிசையா ஆறு பெண்களை வேறே பெத்துத் தொலைச்சிருக்கார், அந்த மனுஷன். எப்பவுமே சுயநலத்தோடு, இருக்கிறதை மறந்தேன்னு உன்னைத் தேடிண்டு அம்பாள் தானே வருவா, அவள் கடாட்சமும் உனக்குக் கிடைக்கும்.''

மறுநாள் ராஜா அவரைக் காணப் பள்ளிக்குச் சென்றான். அவர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவன் அவருடைய அறையில் அமர்ந்து அங்கிருந்த பகவத் கீதையில் தன்னுடைய மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

''ராஜா, எப்ப வந்தே ? நான் சொன்ன விஷயம் கவனிச்சயா? அவளுக்குப் பதில் சொல்லணுமே !''

''மன்னிச்சுடுங்க, எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் முடிச்சுப் போடலிலே ஐயா !''

''எனக்குத் தெரியும். ஏதோ வாத்தியார் ஐயா சொல்றானேன்னு மதிப்பு வச்சிருக்கயோன்னு பார்க்கலாம்னு கேட்டேன். என் கணக்குத் தப்பாப்போச்சு ! ராஜா ஆமாம், பின்னே நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்க இருக்கேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா !'' தட்டு தடுமாறியது அவர் குரல். கைகளில் ஒரு சிறு நடுக்கம். தம் தலையைக் குனிந்து கொண்டே பார்வையை அவன் மேல் செலுத்திக் கொண்டிருந்தார்.

''உங்களுக்குச் சம்மதம்னு உங்க மகள் உமாவையே கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைக்கிறேன். என் வீட்டார் சம்மதத்தோடேதான் இப்போ நான் இங்கே வந்திருக்கேன்'' எனத் தலையைக் குனிந்தபடி பேசினான். அவர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் தயங்கினான். அவன் அளித்த பதிலைக் கேட்ட அவர் எதுவும் கூறாமல் பிரமித்துச் செய்வதறியாது நின்றார். சிறிது நேரம் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தான் ராஜா:


''என்ன ஐயா, யோசிக்கிறீர்கள்? ஊரெல்லாம் அவள் அழகில்லாதவள், அதிர்ஷ்டம் இல்லாதவள்னு பேசிக்கிறாளே, அவ எனக்கு ஏற்றவதான்னு பார்க்கிறேளா... அதுக்காகவேதான் நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். அதுவும் இல்லாம நமக்கெதிரே உங்கள் வீட்டில் நேற்று நடந்த ஒரு சம்பவத்தையும் இப்ப உங்களுக்கு ஞாபகப்படுத்த நான் விரும்பறேன். ரொம்ப நாளா கல்யாணமாகாமல் உங்க மகள் இருக்கிறபோது, நீங்க அவளை விட்டு இன்னொரு பெண்ணை எனக்காகக் கூப்பிடச் சொன்னேள். அப்போ உங்க பெண் மனசிலே துளிக்கூட கல்மிஷமில்லாமே உடனே ஓடிப் போய் அவளைக் கூப்பிட்டு வந்தது இன்னும் என் மனசிலேயே நிக்கறதையா! அப்பவே எனக்கேற்றவள் அவள்தான்னு முடிவு செஞ்சுட்டேன். உங்க 'மாணவன்' என்ற உரிமையிலேதான் சம்மதம் கேட்க இப்ப நான் வந்திருக்கேன், என் ஆசையை நிராசையா ஆக்கிடாதிங்க ஐயா.''

'' ராஜா! நன்னு யோசிச்சு முடிவுக்கு வாப்பா.... கல்யாணங்கறது ஆயிரம் காலத்துப் பயிராக்கும்..... எனக்காகவோ, அவளுடைய வாழ்க்கைக்காகவோ இப்படி ஓர் அவசர முடிவுக்கு வரவேண்டாம்.....'' எனத் தட்டுத் தடுமாறி கூறினார் அவர் .

ராஜாவின் திடமனசு அவருக்கு ஆறுதல் அளித்தது. ''வரன்கள் தட்டிப்போன போதுகூட அவள் தன் நம்பிக்கையை விடாம அம்பாள்கிட்டே நோம்பு இருந்தது. சரியாத்தான் போச்சு. உன்னை அவள் கணவனு அடையப் போறது அவள் மட்டும் செஞ்ச புண்ணியம் இல்லே ராஜா, நான் செஞ்ச புண்ணியமும்தான் ! ' தெய்வசங்கல்பம் ' அப்படி இருக்கிறப்போ யார் என்ன செய்ய முடியும் ?'' எனக் கண்களில் நீர் மல்க அவனை அணைத்தபடி கூறவும் பள்ளி மணி கணகணவென்று அடித்தது.



மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
OOB
BLUE
BEST ULTRAMARINE
MADE IN INDIA BY
ULTRAMARINE & PIGMENTS LTD.
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும் கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே சீராக பால்போல் பளிச்சிடுகின்றன. உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டுகள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள் திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத் தயாரிப்பு. இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன் தொழிற்சாலையில் உருவானது.
தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
UPL/6546



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

பதினொன்காவது அத்தியாயம்

அந்தக் கிராமத்தில் மாணவர்களின் நடமாட்டம் இரகசிய போலீஸாரால் கூர்ந்து கவனிக்கப்பட்டது. வந்த முதல் நாள் மாணவர்களால் எதுவுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. மேரி தங்கத்தின் பெற்றோர்களைப் பற்றி முனைந்து விசாரித்தபின் அவர்கள் இரண்டு நாட்களுக்குமுன் அங்கிருந்து போலீஸ் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு போகப்பட்ட விவரத்தை மட்டுமே சிரமப்பட்டுத் தெரிந்து கொள்ள முடிந்தது. மேரி தங்கத்தின் பெற்றோர் வீட்டில் மட்டுமின்றி அவர்களுடைய நெருங்கிய உறவினர் வீடுகள் இருந்த தெருக்களிலும் இரகசிய போலீஸார் குவிக்கப்பட்டிருந்தார்கள். உண்மையின் சிறியதொரு கீற்றும் தெரிந்து விடாமல் மறைக்கப்பட்டிருந்தது அங்கே. மாணவர்களும் நம்பிக்கை இழந்துவிட வில்லை. பூட்டப்பட்டிருந்த வீட்டுக்கு எதிர்த்த வீட்டுத் திண்ணையிலேயே கூட்டமாக அமர்ந்து கண்காணிக்கத் தொடங்கினார்கள் அவர்கள். எதற்கும் அஞ்சாதவர்களும், உடல் வலிமையும், மன வலிமையும் மிக்கவர்களுமாகிய பதினைந்து பேர் ஒரு குழுவாக வந்திருந்ததால் அந்த மாணவர்கள் சிறிதுகூட அயர்ந்துவிடவில்லை. அந்தப் பதினைந்து மாணவர்களுக்கும் கதிரேசன் என்ற மாணவனைத் தலைவனாக நியமித்து அனுப்பி யிருந்தார்கள் பாண்டியனும் மோகன்தாஸும். உணவு சிற்றுண்டி வேளைகளுக்கு ஆறு ஏழு பேர்களாகக் கடைவீதியிலுள்ள ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து அந்த எதிர்வீட்டுத் திண்ணையிலேயே முகாம் இட்டிருந்தார்கள் அவர்கள். இரவைக்கூட அந்தத் திண்ணையிலேயேதான் கழிக்க நேர்ந்தது. படுக்க விரிப்போ, தலையணையோ கிடையாது. வந்திருக்கும் காரியத்தைப் பெரிதாக நினைத்த காரணத்தால் மாணவர்களில் எவருமே வசதிக் குறைவுகளைப் பற்றிக் கவலைப்படவுமில்லை, பொருட்படுத்தவுமில்லை. விடிந்ததும் வயல் வரப்புக்களில் நடந்து போய் இறவைக் கிணறுகளில் பல் விளக்கி, நீராடிப் பழைய உடைகளையே மீண்டும் உடுத்திக் கொண்டு ஊருக்குள் வந்து அங்கே தெரிய வேண்டிய உண்மைகளுக்காகத் தவம் கிடந்தார்கள் கதிரேசன் முதலிய மாணவர்கள்.

இரண்டாம் நாள் விடிந்ததும் அவர்கள் எந்த வீட்டுத் திண்ணையில் தங்கியிருந்தார்களோ அந்த வீட்டுக்காரர் கருப்பசாமி சேர்வை அவர்களைக் கூப்பிட்டு, ''தம்பி! என்னைத் தப்பா நினைக்கப்பிடாது. பஞ்சாயத்து பிரசிடெண்டும் போலீசும் என்னைக் கூப்பிட்டுத் தொந்தரவு பண்ணுறாங்க. 'நீங்க பதினைஞ்சு பேரும் அத்து மீறி 'டிரஸ் பாஸா' என் வீட்டுத் திண்ணையை ஆக்கிரமிச்சுக்கிட்டிருக்கீங்க'ன்னு நான் போலீஸ்லே 'கம்ப்ளெயிண்டு' எழுதிக் குடுக்கணுமாம். குடுத்தா உடனே உங்களைப் பிடிச்சு உள்ளே தள்ளிடலாமாம். எனக்கு அவங்க சொல்ற தொண்ணூறும் பிடிக்கலே. அதே சமயத்திலே அவங்களை விரோதிச்சுக்கவும் முடியலே. கொஞ்சம் தயவுசெஞ்சி நீங்க ஒரு காரியம் பண்ணணும். ரெண்டு வீடு தள்ளி 'படேல் தேசிய வாசக சாலை'ன்னு ஒரு வாசக சாலை இருக்கு. அந்த இடத்திலே இருந்துக்கிட்டும் நீங்க கவனிக்க வேண்டியதைக் கவனிக்கலாம். நானே அங்கே சொல்லி ஏற்பாடு பண்ணிடறேன். நீங்க அங்கே தங்கிக்கிடலாம்'' என்றார். கதிரேசன் அவர் கூறியதை அப்படியே ஒப்புக் கொண்டான். காதும் காதும் வைத்தாற்போல் போலீஸாம், பஞ்சாயத்துத் தலைவரும் சொல்லிக் கொடுத்தபடி புகார் செய்து தங்களை மாட்டி வைக்காமல் அந்த வீட்டுக்காரர் நல்லபடியாக நடந்து கொண்டதால் கதிரேசனுக்கு அவர் மேல் ஓரளவு மதிப்பு உண்டாகியிருந்தது. அதிகாரிகளும், பதவிகளில் இருக்கும் படித்தவர்களும் எப்படி எப்படி எந்தெந்தத் தவறுகளை யார் யாருக்குத் திட்டமிட்டுச் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் காலத்தில் ஒரு சாதாரணத் தவற்றைக்கூடச் செய்ய யோசித்துத் தயங்கும் கருப்பசாமி சேர்வை மிகவும் பெரிய மனிதராகத் தோன்றினார்.

கருப்பசாமி சேர்வை சொன்ன யோசனைப்படி அந்த வாசக சாலையில் போய்த் தங்கிக் கொண்டார்கள் மாணவர்கள். அந்த வாசகசாலை முகப்பிலிருந்தும் மேரி தங்கத்தின் பெற்றோர் வீட்டை நன்றாகக் கவனித்துக் கண்காணிக்க

முடிந்தது. வாசக சாலைக்குச் சென்றதனால் சில புதிய நன்மைகளும் உண்டாயின. அங்கே படிக்க வருகிறவர்களிடம் பேச்சுக் கொடுத்துச் சில விவரங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

மல்லிகைப் பந்தல் நிலவரத்தைப் பற்றியும் பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொண்டார்கள் அவர்கள். பல்கலைக்கழகத்தை உடனே திறக்கக் கோரியும், மேரி தங்கத்தின் மரணத்தைப் பற்றிய பொது விசாரணையை வேண்டியும் பாண்டியன் முதலியவர்கள் தொடங்கியிருக்கும் உண்ணாவிரதம் மல்லிகைப் பந்தல் நகர மக்களின் ஆதரவையும் கவனத்தையும் கவர்ந்திருப்பதாகவும், தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களுக்கு மாலை சூட்டியதாகவும் ஆளும் கட்சியைத் தவிர நகரின் மற்ற எல்லாக் கட்சிப் பிரமுகர்களும் உண்ணாவிரதத்துக்கும், கோரிக்கைகளுக்கும் தங்கள் ஆதரவுகளைத் தெரிவித்து அறிக்கைகள் விட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. கதிரேசனும் மற்ற மாணவ நண்பர்களும் அவற்றையெல்லாம் படித்து மகிழ்ந்தார்கள். நியாயங்களுக்காகத் தாங்கள் போராடும் போராட்டம் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று. அந்தக் கிராமத்துக்கு வந்த இரண்டாம் நாள் மாலையில் அவர்கள் முயற்சி பலனளித்தது. மேரி தங்கத்தின் பெற்றோர் வேலை பார்த்த அதே பஞ்சாயத்து யூனியன் நடுத்தரப் பள்ளியில் டிரில் மாஸ்டராக வேலை பார்க்கும் பிச்சைமுத்து என்பவர் வாசக சாலைக்குப் படிக்க வந்தார். தற்செயலாகக் கதிரேசனும் மற்ற மாணவர்களும் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவராகவே அவர்களிடம் வந்து பேச்சுக் கொடுத்தார். எடுத்த எடுப்பிலேயே அவர் மேல் ஒரு நம்பிக்கை ஏற்பட்டு விட்ட காரணத்தால் மாணவர்கள் தாங்கள் வந்த காரியத்தை அவரிடம் சொன்னார்கள். அவர் உதவியையும் நாடினார்கள்.

''யாரு? சற்குணத்தையும் அவருடைய மனைவியையுமா பார்க்க வந்தீர்கள்?.... அவர்களிடமிருந்து நீங்கள் பெரிதாக எதைத் தெரிந்து கொண்டு விடப் போகிறீர்கள்? எனக்குத் தெரிந்த வரை அவரும் அவர் மனைவியும் ரொம்பவும் பயந்த சுபாவம் உள்ளவர்கள்... இல்லா விட்டால் விட்டைப் பூட்டிப் போட்டு விட்டுப் போலீசார் சொன்னார்கள்



என்று வாழைத் தோட்டத்தில் போய் உட்காருவார்களா?''

''என்னது? வாழைத் தோட்டத்திலா ?''

''ஆமாம் ! பஞ்சாயத்துத் தலைவரின் வாழைத் தோட்டத்தில் கிணற்றிலிருந்து பம்ப் செட் மூலம் நீர் இறைப்பதற்காக 'மோட்டர் ரூம்' என்று கிணற்றை ஒட்டி ஒரு சிறிய அறை இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களாகச் சற்குணமும் அவர் மனைவியும் அங்கேதான் ஏறக்குறைய சிறையிடப்பட்டதுபோல் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது எனக்குத் தெரியும், மிஸ்டர் கதிரேசன் ! எவ்வளவு கேவலமான நிலை பாருங்கள் ! படித்தவர்களிடமும் அறிவாளிகளிடமும் பயமும் கோழைத்தனமும் இருக்கிற வரை இந்தச் சமூகத்தில் உண்மைகளையும், நியாயங்களையும் யாரும் கௌரவிக்கமாட்டார்கள். சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட அச்சமும், பொதுநலத்திலிருந்து விலகி நிற்கும் தன்மையுமே இன்றுள்ள சமூகத்தின் சாபக்கேடுகள். சொந்த மகளைப் பறி கொடுத்துவிட்டு அதற்காக வாய்விட்டு அழவும் முடியாமல் அடங்கிப் போய்விட்ட சற்குணம் தம்பதிகளிடம் நீங்கள் என்ன தெரிந்து கொண்டுவிட முடியும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை ? உங்களைப் போன்ற மாணவர்களின் நியாய உணர்வையும், போராட்ட மனப்பான்மையையும் நான் வரவேற்கிறேன். ஆனால் இப்படி மனப்பான்மைகளில்கூட நமக்கும், முந்தைய தலைமுறைக்கும் நடுவே ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. அவர்கள் 'சத்தியம் வெல்லும்' என்று சொல்லிவிட்டுச் சத்தியம் எப்படியும் தானாகவே வென்று கொள்ளும் என்ற நம்பிக்கையோடு திண்ணையில் உட்கார்ந்து விடுகிறார்கள். 'சத்தியம் தானாக வெல்லாது, அதற்காகவும் போராட வேண்டும். அதற்காகவும் பாடுபட வேண்டும்' என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். நாம் மட்டும்தான் இதைப் புரிந்து கொண்டிருக்கிறோம்.''

இந்த டிரில் மாஸ்டர் பிச்சைமுத்து புரட்சிகரமான சிந்தனைகளை உடையவராக இருந்தார். அந்தக் கிராமத்தில் மற்றவர்களிடம் இருந்த பயம் அவரிடம் இல்லை. இளைஞராயிருந்தாலும் அவருடைய சிந்தனையில் முதிர்ச்சி இருந்தது. கதிரேசன் அவரைக் கேட்டான் :

''சார்! நீங்கள்தான் எங்களுக்கு உதவ வேண்டும். இந்தக் கிராமத்தில் யாரைக் கேட்டாலும் மிஸ்டர் சற்குணம் விஷயமாகப் பேசுவ



தற்கே பயப்படுகிறார்கள். நீங்கள் தயவு செய்து எங்களை அந்த வாழைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றால் மிகவும் உபயோகமாயிருக்கும்.''

''வாழைத் தோட்டத்தைச் சுற்றிப் பலத்த காவல் இருந்தாலும் இருக்கலாம். எதற்கும் முயன்று பார்ப்போம். உங்களை மட்டும் இன்றிரவு என்னோடு அங்கே அழைத்துப் போகிறேன். ஊரிலிருந்து நாலைந்து மைல் போக வேண்டும். உங்களுக்குச் சைக்கிள் விடத் தெரியுமா ?''

''ஓ ! தெரியும் சார்.... எத்தனை மணிக்கு நாம் புறப்பட வேண்டியிருக்கும் ?''

''இரவு பத்தரை மணிக்குப் புறப்படலாம். ஆனால் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து இங்கிருந்து புறப்படக்கூடாது. ஊர்க் கோடியிலுள்ள ஆலமரத்தடியில் நான் இரண்டு சைக்கிள்களோடு காத்திருப்பேன். நீங்கள் யாரும் சந்தேகப்படாதபடி எங்கோ சுபாவமாகப் புறப்பட்டு வருவது போல் அந்த ஆலமரத்தடிக்கு வர வேண்டும். புறப்படுமுன் யாரும் உங்களைப் பின்தொடரவில்லை என்பதையும் நீங்களே உறுதி செய்து கொள்ள வேண்டும்.''

கதிரேசன், பிச்சைமுத்து சார் கூறிய யோசனைக்குச் சம்மதித்து ஒப்புக் கொண்டான்.

''நீங்கள் வற்புறுத்துகிறீர்களே என்பதற்காகத்தான் உங்களை நான் மிஸ்டர் சற்குணத்திடம் அழைத்துக் கொண்டு போகிறேன். எனக்கு அவரைச் சந்திப்பதில் இனிமேல் நம்பிக்கை எதுவும் கிடையாது. நம் முயற்சி காலங் கடந்து விட்டது. மகளைக் கற்பழித்த இளம் விரிவுரையாளரின் உறவினரான மந்திரியின் சார்பில் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் மூலம் ரூபாய் இருபத்தையாயிரம் சற்குணத்தின் கைக்கு மாறிவிட்டது. 'என் மகளுக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி உண்டு. அவள் தவறித் தண்ணீரில் விழுந்து மரணமடைந்திருப்பதை ஒப்புக் கொள்கிறேன்' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பதற்கு விலையாக இந்தத் தொகையைப் பேரம் பேசி அவரிடம் கொடுத்துவிட்டார்கள்.''

''ஒரு தந்தை தன் மகளின்மேல் உள்ள பாசத்தை இருபத்தையாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட முடியுமா சார்?''

''முடியுமா, முடியாதா என்பது எனக்குத் தெரியாவிட்டாலும் மிஸ்டர் சற்குணத்தால் அது முடிந்திருக்கிறது என்பதை நான் பிரத்தியட்சமாகக் காண்கிறேன். மல்லிகைப் பந்தலுக்குப் போய்ப் பெண்ணை அடக்கம் செய்த இடத்தில் ஒரு தடவை ஓ ஐயோ முறையோ என்று கதறி அழுதுவிட்டு, அப்படி அழுத இடத்திலேயே பெற்ற பாசத்தையும் சேர்த்துப் புதைத்து விட்டு வந்திருக்கிறார் அவர்.''

''மாணவர்களாகிய நாங்கள் உண்மையை எப்படியும் வெளிப்படுத்தியே தீருவோம். விசாரணை கோரியும், பல்கலைக் கழகத்தை உடனே திறக்க வேண்டியும், எங்கள் பிரதிநிதிகள் மல்லிகைப் பந்தலில் உண்ணாவிரதம் தொடங்கியிருக்கிறார்கள் சார்!''

''உண்ணாவிரதத்தை எல்லாம் மிகவும் சுலபமாகச் சமாளித்துவிடுவார்கள் அவர்கள். ஒழுக்கமும், நேர்மையும், மற்றவர்கள் மனச்சாட்சியை மதிக்கும் நல்லெண்ணமும் உள்ளவர்கள் கையில் அதிகாரம் இருந்தால்தான் உண்ணாவிரதம் போன்ற சாத்வீகப் போர் முறைகள் பயன்படும். குறுகிய நோக்கம் உள்ளவர்கள் உண்ணாவிரதத்தைக் கூட அவமானப் படுத்திவிட முடியும். ஐ.பி.ஸி. செக்ஷன் த்ரீ நாட் நயன் (309)படி தற்கொலை முயற்சி என்று உண்ணாவிரதத்தைத் தடுத்து மாணவர்களை உள்ளே தள்ளப் போகிறார்கள், பாருங்கள். நான் சொல்கிறபடி நடக்கா விட்டால் அப்புறம் என்னை ஏனென்று கேளுங்கள்!''

வாசக சாலையில் சந்தித்த சிறிது நேரத்திலேயே டிரில் மாஸ்டர் பிச்சைமுத்து கதிரேசனோடும் மற்ற மாணவர்களோடும் மனம் விட்டுப் பழகத் தொடங்கியிருந்தார். அவரிடமிருந்து பல செய்திகள் தெரிந்தன.

''நேற்றைக்கு முன்தினம் குளத்தில் விழுந்து இறந்த மேரி தங்கத்தின் புகைப்படம் ஏதாவது கிடைக்குமா என்று தேடி மதுரையிலிருந்து பத்திரிகைக்காரர்கள் ரெண்டு பேர் வந்திருந்தார்கள். எங்கே அவர்களுக்குப் படம் கிடைத்து விடுமோ என்ற பயத்தில் மிஸ்டர் சற்குணத்தின் வீட்டிலிருந்த அவர் மகள் சம்பந்தப்பட்ட எல்லாப் படங்களையும் போலீஸார் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். சற்குணத்தின் சொந்தக்காரர்கள் வீடுகளுக்கெல்லாம் சென்று 'உங்ககிட்டே மேரி தங்கத்தின் போட்டோ ஏதாவது இருந்தாலும் கூட அதை யாருக்கும் கொடுக்கக் கூடாது' என்று கண்டிப்பாக மிரட்டிப் பயமுறுத்தியிருக்கிறார்கள் போலீஸார்.''

''போட்டோ வேணும்னு நாங்க தர முடியும் சார் ! எங்க யூனிவர்சிடி மெடிகல் காலேஜ் 'குரூப்' போட்டோ எதிலேயாவது மேரி தங்கத்தின் படம் கிடைக்கும்'' என்றான் கதிரேசன்.

''போட்டோ ஒன்று உடனே எனக்கு வேண்டும் என்பதற்காக மட்டும் இதை

நான் உங்களிடம் சொல்லவில்லை. அதிகாரத்தின் கிளைகளால் நிஜத்தின் எல்லா ஊற்றுக் கண்களையும் எப்படி உடனுக்குடன் அடைத்துவிட முடிகிறது பாருங்கள் என்பதற்காகவே இதைச் சொன்னேன்'' என்றார் பிச்சைமுத்து.

அன்றிரவு திட்டமிட்டபடி ஊர்க் கோடியிலிருந்த ஆல மரத்தடிக்குச் சென்று அங்கிருந்து நாலு மைல் தொலைவில் உள்ள பஞ்சாயத்துத் தலைவரின் வாழைத் தோட்டத்துக்குச் சைக்கிளில் போனார்கள் பிச்சை முத்துவும் கதிரேசனும். வாழைத் தோட்டம் ஒரு சிறு குன்றின் சரிவில் இருந்தது. தோட்டத்தின் முகப்பில் ஆட்கள் காவல் இருந்தார்கள். சைக்கிள்களை ஒரு சோளக் காட்டில் கழுத்தளவு வளர்ந்து கதிர் வாங்கியிருந்த சோளப் பயிருக்கு நடுவே மறைத்து வைத்துவிட்டு முகப்பு வழியாக வாழைத் தோட்டத்தில் நுழையாமல் கதிரேசனும் பிச்சைமுத்துவும் ஒரு பர்லாங் தொலைவுக்கு மேல் சுற்றிப் போய்க் காடாரம்பமான ஒரு புதரிலிருந்து தோட்டத்துக்குள் பிரவேசித்தார்கள்.

அன்று மாலையில்தான் தண்ணீர் பாய்ச்சியிருந்ததால் வாழைத் தோட்டம் சேறும் சகதியுமாக வேகமாய் நடந்து போக முடியாதபடி இருந்தது. நரிகள் வேறு குறுக்கே ஓடின. ரேடியம் உருண்டைகள் போல் இருளில் மின்னும் நரிகளின் கண்கள் கதிரேசனுக்கு ஓரளவுக்குப் பயம் ஊட்டின.

''பயப்படாமல் வரலாம் மிஸ்டர் கதிரேசன்! காட்டு நரிகளை யெல்லாம் விடத் தந்திரமான குள்ளநரிகள் — மிகவும் அபாயகரமான நரிகள் இன்று நாட்டில்தான் இருக்கின்றன. அந்த நாட்டு நரிகளுக்குப் பயப்படுவதை விட அதிகமாக நீங்கள் இந்தக் காட்டு நரிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை'' என்று பிச்சைமுத்து சொன்னார்.

அவர்கள் இருவரும் வாழைத் தோட்டத்தின் கிணற்றடியை அடைந்தபோது வானில் மேகங்களிலிருந்து விலகி விடுபட்ட நிலா உச்சிக்கு வந்திருந்தது. பிச்சைமுத்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கிணற்றின் அருகே இருந்த 'மோட்டார் ரூம்' கதவை மெல்லத் தட்டினார். உள்ளேயிருந்து திருமதி சற்குணத்தின் அழுகுரல் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த அழுகுரலிலிருந்து அத்தனை அகாலத்திலும் சற்குணம் தம்பதிகள் தூங்கவில்லை என்று தெரிந்தது. கதவைத் திறந்த சற்குணம் பிச்சைமுத்துவை உடனே அடையாளம் புரிந்து கொண்டு,

''யாரு? பிச்சைமுத்துவா? எப்படி வந்தே இங்கே?.... என் மகனைக் கொன்னுட்டாங்கப்பா... பாவிப் பயல்கள்'' என்று குரல் தழுதழுக்க ஆரம்பித்தவர் பக்கத்தில் இன்னும் யாரோ நிற்பதைப் பார்த்துப் பேச்சை உடனே நிறுத்திக் கொண்டு விட்டார்.

''இது யாரு உன் கூட...?''

''எல்லாம் நமக்கு வேண்டியவர் தான்...உள்ளே போய்ப் பேசலாம்'' — என்று கதிரேசனையும் உள்ளே அழைத்துக் கொண்டு தாமே கதவை உட்புறமாகத் தாழிட்டார் பிச்சைமுத்து.

தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டாரும், கிரீஸ், மண்ணெண்ணெய் வாடையுமாக அந்த அறை தூசிமயமாய் இருந்தது. அறையின் ஒரு மூலையிலே திருமதி சற்குணம் தலைவிரி

சத்திய வெள்ளம்

படித்தவர்களிடமும், அறிவாளிகளிடமும் பயமும் கோழைத்தனமும் இருக்கிறவரை இந்தச் சமூகத்தில் உண்மைகளையும், நியாயங்களையும் யாரும் கௌரவிக்க மாட்டார்கள். சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட அச்சமும் பொதுநலத்திலிருந்து விலகி நிற்கும் தன்மையுமே இன்றுள்ள சமூகத்தின் சாபக்கேடுகள்.

கோலமாக விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தாள். ''டிரில் மாஸ்டர் வந்திருக்காரு'' என்று அவளருகே போய்க் குரல் கொடுத்தார் சற்குணம். ஒரு கணம் நிமிர்ந்து நோக்கிய அந்த அம்மாளின் முகத்தைப் பார்த்ததுமே மேரி தங்கத்தின் இலட்சணமான முகம் நினைவு வந்தது கதிரேசனுக்கு. ''சர்ச்சுக்குப் போகக்கூட விட மாட்டேங்கிறாங்க.... இங்கே கொண்டாந்து தனிக் கழுத்தறுக்கிறாங்கப்பா...'' என்று சற்குணம் தொடங்கியவுடனே,

''உங்க மேலேயும் தப்பிருக்கு மிஸ்டர் சற்குணம்!'' என்று ஆரம்பித்தார் பிச்சைமுத்து. ''நீங்க இவ்வளவு பயந்து போய்த் 'தூக்கத்திலே நடக்கறப்பத் தவறி விழுந்து மரணம்'னு எழுதிக் கொடுத்துப்பிட்டு வந்திருக்கக்கூடாது. இதோ இந்தத் தம்பி கதிரேசன் யுனிவர்ஸிடியிலே இருந்துதான் வந்திருக்

காரு. இவரும் மற்ற மாணவர்களும் உங்க பெண்ணைப் பற்றி விசாரணை வேணும்னு அங்கே யுனிவர்ஸிடி வாசலிலே உண்ணாவிரதம் தொடங்கியிருக்காங்க... நீங்க என்னடான்னா.....?'' மேலே சொல்ல இருந்ததைச் சொல்லாமலே பாதியில் பேச்சை முடித்துவிட்டார் பிச்சைமுத்து. கதிரேசன், தானும் மற்ற மாணவர்களும் அங்கே வந்த விவரத்தைச் சற்குணத்திடம் சொல்லி அவரிடம் சில கேள்விகள் கேட்டான். பிச்சைமுத்து புறப்படும் முன்பே சொல்லியது சரியாக இருந்தது. சற்குணம் எதற்கும் பிடி கொடுக்கவில்லை.

''என்னை எதுவும் கேட்காதீங்கப்பா! நான் ஏற்கனவே ரொம்ப மனசு நொந்து போயிருக்கேன். மல்லிகைப் பந்தலுக்குக் கூட்டிக்கிட்டுப் போய்த் திருப்பிக் கொண்டாந்து என் வீட்டுக்குக் கூடப் போக விடாமே ஜெயில்லே வச்ச மாதிரி இங்ஙனே கொண்டாந்து வச்சுப்பிட்டாங்க... எனக்கு ஒரு மகளே பிறந்திருக்க வேண்டாம்... அதுனாலே நான் இப்படிச் சீரழியவும் வேண்டாம்'' என்று நழுவினாற் போலத்தான் பதில் சொன்னார் அவர். ஆனால் பிச்சைமுத்து அவரை விடவில்லை.

''நீங்க ஏன் சீரழியப் போறீங்க? மகள் போனதினாலே உங்களுக்கு வேறே புதிய சௌகரியங்கள் கிடைச்சிருக்கலாம்.... உங்க துக்கத்தைக்கூட பஞ்சாயத்து சேர்மன் விலை பேசி வாங்கியிருப்பாரு.''

''நீ என்னசொல்றே பிச்சைமுத்து?'' என்று பதறினார் சற்குணம்.

''சொல்றேன் சோத்துக்கு உப்பில்லேன்னு... உங்க மனசைத் தொட்டுப் பார்த்துக்குங்க. என்னன்னு உங்களுக்கே புரியும்.''

''மிஸ்டர் சற்குணம்! இப்போதுகூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. 'மல்லிகைப்பந்தலிலே என்னைப் பயமுறுத்தி வற்புறுத்தல் செய்து எழுதி வாங்கினாங்க. நான் எழுதித் தந்தது உண்மையில்லேன்னு' நீங்க சாட்சி சொன்னால் போதும்... அதுக்கு நீங்க இணங்கினால் மாணவர்கள் எல்லாரும் உங்களுக்கு நன்றியுடையவர்களாயிருப்போம்'' என்று கதிரேசன் மீண்டும் வேண்டினான். சற்குணம் பதிலே சொல்லவில்லை.

''உங்கள் முயற்சி பயனளிக்காது மிஸ்டர் கதிரேசன்! எனக்குத் தெரியும். நான் அப்போதே உங்களிடம் சொன்னேனே...அப்படி நடந்திருந்தால் நீங்கள் இவரிடம் எவ்வளவு கெஞ்சினாலும் பயன்படாது'' என்றார் பிச்சைமுத்து.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது 'மோட்டார் ரூமின்' கதவு வெளிப்புறம் பலமாகத் தட்டப்பட்டது. உடன் உள்ளே பேச்சுக்குரல்கள் எல்லாம் நின்றன. (தொடரும்)

படித்துப் பாருங்கள்

போராட்டங்கள்

அரசியல் சூழ்நிலையைப் புறப்படலமாக வைத்து நவீனம் புனைவது சிரமம்.

போராட்டங்கள் என்ற இந்த நவீனத்தில் இந்தச் சிரமசாத்தியமான காரியத்தை திரு ர. சு. நல்லபெருமாள் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். இதைப் படித்து முடித்ததும், மனத்தில் மேலோங்கி நிற்பது முரளி என்ற பாத்திரம்தான். மக்களின் உயர்ந்த பண்புகளைக் காப்பாற்ற, லட்சியப் பத்திரிகை நடத்த முரளி எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கு எத்தனை எத்தனை தடங்கல்கள், இடையூறுகள்! அவையெல்லாம் தத்ரூபமாக இன்று நடப்பன போலவே இருக்கின்றன. மக்களின் ருசி நாளுக்கு நாள் தாழ்ந்து வருவதைக் கண்ணுற்று அந்த லட்சிய புருஷன் அங்கலாய்க்கும் போது, நாமும் இன்றைய நிலையை நினைத்து அங்கலாய்க்கவே செய்கிறோம்.

சிவராமன் என்ற அந்த உணர்ச்சிமிக்க இளைஞன் - கல்லூரி நாட்களில் தர்மத்துக்கும் நீதிக்கும் தன்னந் தனியாகப் போராடி வெற்றி கண்ட இளைஞன் - எப்படி அராஜகக் கும்பலின்வசம் - ஒரு தேசத்துரோகக் கும்பலின் வசம் தானே வலியச் சென்று மாட்டிக் கொள்கிறான் என்பதையும் மிக நேர்த்தியாகக் கலைத் திறமையோடு புனைந்திருக்கிறார் ஆசிரியர். சாரதா என்ற பேராசிரியர் கமலசாமியின் மகள் விதிவசத்தால் புரட்சிக் கும்பலில் சிக்கித் தவிக்கும் கட்டங்களும் அவள் தந்தை, தம்மிடம் உள்ள ஒரு குறையின் காரணமாகத் தம் மகளிடம் நேரில் நின்று பேசவும் முடியாமல் திணறும் சம்பவங்களும் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளன.

சாமிநாதன் என்ற இளம் பத்திரிகை நிருபர் பாத்திரத்தை மிகச் சுவைபடப் புனைந்திருக்கிறார். நகைச்சுவையையும் ஆழ்ந்த கருத்துக்களையும் இந்தப் பாத்திரத்தில் காணலாம். இதோ உதாரணம்: பத்திரிகை ஆசிரியர் முரளி, ''ஒரு பத்திரிகையால் மக்களின் தரத்தைத் தாழ்த்த முடிகிறபோது, இன்னொரு பத்திரிகையால் உயர்த்த முடியாதா என்ன?'' என்று கேட்கிறார்.

அதற்குச் சாமிநாதன், ''உயிரோடு இருக்கிறவனைப் பிணமாக்க முடிகிறபோது, பிணத்தை உயிர்ப்பிக்க முடியாதா என்று கேட்டால் எப்படி சார்? எனக்கு அதில் நம்பிக்கை இல்லை'' என்று கூறுகிறான்.

இப்படி எத்தனையோ நறுக்குத் தெறித்தாற்போல் சிந்தனையைத் தூண்டும் வாக்கியங்களை இந்த நவீனத்தில் காணலாம்.

பிரசுரம்: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், தபால் பெட்டி எண்: 501, பார்க் டவுன், சென்னை — 3; விலை: ரூ. 14-00.



சேலம் கிச்சிப்பாளையம்
மாமி லலிதா

ஜனனம் : மசூலிப்பட்டினம் 6-3-1926
விவாஹம் : சேலம் ... 9-7-1943
திருப்பதி சேவை : 30-5-72 to 9-6-72
மோக்ஷம் : சேலம் ... 20-6-1972

ஏங்கி நிற்கும் கணவர் :
A. V. நாகராஜய்யர்
1. B. வேணு தெரு
நாராயண நகர், சேலம் - 1

ஒரு மணிக் கூண்டு...;

டி.எஸ். கோதண்டராமன்

கல்லூரி அலுவல்கள் தொடங்குவதற்கு இன்னும் பதினைந்து இருபது நிமிடங்கள் இருந்தன. ஜயேந்திரா கல்லூரியின் சுற்றுச் சுவருக்குள் சுறுசுறுப்பின் முழுத்தன்மையும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. கல்லூரிக்குள் நுழையும் இடத்திலிருந்து மையக் கட்டிடம்வரை நீண்டுகிடந்த பாதையில் நூற்றுக் கணக்கான பாதங்கள் நடந்து கொண்டிருந்தன.

''ஏண்டா கனகராஜ், ஆகாயத்தில் சந்திரனைக் காணுமே? ஏன்? அந்தச் சந்திரன் என்னவாயிற்று? எங்கே போயிற்று?'' என்று அட்டகாசமாகக் கேட்டான் பிரேம்குமார்.

''ஏய், அவனைப் போய் ஏன் கேட்கிறாய்? மனசைப் பறிகொடுத்துவிட்டு, சுய நினைவில்லாமல் நடக்கிறான்!... உன் சந்தேகங்களையெல்லாம் என்னிடம் கேளேன்!'' என்றான் பழனியப்பன்— பொருளாதாரம், மூன்றும் ஆண்டு மாணவன்.

''அவன் கேட்காவிட்டால் என்னடா? நீயாகத்தான் சொல்லேன்'' என்று முடுக்கி விட்டான் ராமதாஸ் — இலக்கியப் புலமை காணப் பயிலும் மாணவன்.

''அந்தச் சந்திரன் இப்போது ஆகாயத்தில் இல்லை!... சேலை கட்டிக் கொண்டு பிடிப்பான ப்ளௌஸ் போட்டுக் கொண்டு, ஜயேந்திரா கல்லூரிப் பாதையில் நடை பயில்கிறதடா!...'' பழனியப்பன் இப்படிச் சொன்னதும், அவனை ஒட்டினாற்போல் நடந்துகொண்டிருந்த அந்தத் தனித்த சிறு கும்பல் 'ஹோ ஹோ, ஹோ' என்று ஆர்ப்பரித்தது.

பொருள் பொதிந்த இந்த உரையாடலுக்கு இலக்கான சந்திரா — பி.எஸ்ஸி. இறுதி ஆண்டு மாணவி — சர்ப்பம்போல் போய்க் கொண்டிருந்தாளே தவிர, ஒருமுறைகூடத் திரும்பிப் பார்க்கவில்லை.



ஆயிரம் மாணவர்கள்..!

கல்லூரி முதல்வர் பேராசிரியர் கங்காதரவிடம் சொல்லியாகிவிட்டது. 'கவனிக்கிறேன்' என்றார். ஆனால் அவராலும் கவனிக்க முடியாது என்பது வெட்டவெளிச்சம். பழனியப்பன், கல்லூரி நிர்வாகக் குழு அங்கத்தினர் தீர்த்தப்பனின் மகன். கனகராஜின் சகோதரர் ஒரு பிரபல சினிமா டைரக்டர். பிரேம்குமாரின் தந்தை ஒரு தொழிலதிபர். ராமதாஸ்தான் இந்தக் குழுவில் இளைத்தவன். அவன் தந்தை, பாவம், ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி.

அத்துடன் திருந்துகிற மாதிரி மன நிலை இல்லை, அவர்களுக்கு. கல்லூரியில் படித்துக் கொண்டு ஏழெட்டு மாணவிகளுடனுலாவுது சினிமா, நாடகம், கடற்கரை அது—இது என்று உல்லாசமாகப் பொழுதைக் கழிக்காவிட்டால் அது என்னய்யா படிப்பு வேண்டிக் கிடக்கிறது? புத்தகங்களும் கல்லூரிகளும் நிரந்தரமான பொருள்கள். இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் தோள்மேல் நிற்காமல் சரிந்து சரிந்து விழுகிற சேலையும், முதுகின் முக்கால் பாகத்தை இயற்கை வண்ணத்துடன் காட்டும் ரவிக்கை என்ற சிறு மறைப்பும், ஒசிந்து ஒல்கி நடக்கும் நடையழகும், இளமைப் பருவமும்...

''மிஸ் சந்திரா, எக்ஸ்கியூஸ்மி...'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தான் ராமதாஸ்.

சந்திராவுக்குத் திக்கென்றது.

''இன்றைக்கு டிபன் கொண்டுவரவில்லை போலிருக்கிறதே?... வாருங்களேன், தமாஷாய் இப்படி... காண்டீன்வரை போய் வரலாம்...''

''ஸாரி. எனக்கு மாலை வகுப்புக்கள் இல்லை. வீட்டுக்குப் போய் விடுவேன்....''

''அடேடே!... நோ இனாலஸ் ஃபார் மீ ஆல்ஸோ!... அப்படியானால் பீச்சுக்குப் போவோமே?...''

''தாங்க் யூ... எனக்கு வேறே வேலை இருக்கிறது.''

அதற்கு மேலும் பேச்சுத் தொடர இடம் கொடாமல் அவள் நகர்ந்து போய்விட்டாள்.

* * *

சந்திராவின் தந்தை பஞ்சாபகேசனுக்கு ஒரு கம்பெனியில் அலுவல். சுமாரான சம்பளம். சந்திரா படிப்பை முடித்து வேலையில் அமர்ந்தால்தான்



சற்று மூச்சுவிட முடியும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார்.

சந்திராவைப் பிரமாதமான அழகி என்று சொல்ல முடியாது. மிக உயர்ந்த பளபளப்பான உடைகளை அணிவது அவளுக்குச் சாத்தியமில்லை. அதிதீவிர நாகரிக நங்கையுமல்ல, அவள். அப்படியானால் அவளிடமிருந்த கவர்ச்சிதான் என்ன? கதுப்புக் கன்னங்களோடு கூடிய உருண்டையான முகத்தில் தவழ்ந்த குடும்பப் பாங்கான தன்மையும் கரிய கண்களின் இமைப் படபடப்பில் சிலிர்த்தெழுந்த மின் பாய்ச்சலும்தான்.

பேராசிரியர்களோடு உரையாடும்போது பணிவாகப் பேசுவாள். தோழிகளோடு அளவளாவும்போது நட்புறவோடு பேசுவாள். மேடையில் பேசும்போது கருத்துத் தெளிவுடனும் சொல்லழகும் மின்னலிடும். படிப்பிலோ முதல் அல்லது இரண்டாவது இடம். மாலினிகளையும் ரோஸிகளையும் ஒதுக்கிவிட்டுச் சந்திராவிடம் பார்வை ஓடுவதற்குக் காரணம் இதுதான்.

'சந்திராவைக் காணாத நாளெல்லாம் பிறவா நாளே!' என்று எண்ணியிருக்கும் சில மாணவர்களுக்கு மூன்று நாட்கள் சேர்ந்தாற் போல் அவளைக் காணாதது அதிர்ச்சியாயிருந்தது.

பிரேம்குமாருக்குப் பைத்தியமே பிடித்து விடும்போலிருந்தது.

''மிஸ் அம்புஜம்...'' என்று அழைத்தான், இடைவேளையின்போது.

ஒரு மாணவன் தன்னைப் பெயர் சொல்லி அழைத்துப் பேசுவதை ரொம்பவும் ரசிப்பவள் அம்புஜம். மாபெரும் தொழிலதிபரின் அருமைச் செல்வன் பிரேம்குமார் அழைத்ததும் அவளுக்கு ஆகாயத்தில் மிதக்கிறாற் போலிருந்தது. ''யெஸ்... மிஸ்டர் பிரேம்குமார்!... என்ன வேணும்?''

''ஒன்றுமில்லை... ஒரு சின்ன உதவி...''

''ஓ!...கட்டாயம் செய்கிறேன். சொல்லுங்கள்.''

''மிஸ் அம்புஜம்!... நீங்கள் எப்படியும் உதவுவீர்கள் என்ற என் நம்பிக்கை வீண் போகவில்லை. உங்களுக்குத் தங்கமான மனம்!...''

அம்புஜம் நாணினாள். அப்படி உடலை வளைத்து நாணினாற்போல் நடிப்பதுதான், பிரேம்குமாரின் பாராட்டுக்கு உகந்த பதில் என்று எண்ணினாள் போலும்!

''உங்கள் சிநேகிதி, மிஸ் சந்திராவைக் காணோமே — இரண்டு மூன்று நாட்களாய்?''

''ஓ!... உங்களுக்குத் தெரியாதா? அவள் தந்தை இறந்து விட்டார்!''

''தந்தை இறந்து விட்டாரா? த்ஸோ, த்ஸோ...''

''யெஸ். நாங்களெல்லாம் கூட நேற்று மாலை அவள் வீட்டுக்குப் போயிருந்தோம்... இடிந்து போயிருக்கிறாள். பாவம், ஷி ஷெட்டியர்ஸ்...''

''வெரி ஸாரி... துக்ககரமான செய்தியைக் கேட்க நேர்ந்ததற்காக வருந்துகிறேன்''

பிரேம்குமார் போய்விட்டான்.

பஞ்சாபகேசனின் மறைவினால், குடும்பம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அவருடைய சேமிப்பு, அவர் வாங்கியிருந்த கடன்களை அடைக்கச் சரியாக இருந்தது. 'இன்னும் ஏழெட்டு மாதங்களை ஓட்டினால்தான் சந்திராவின் பெயருடன் பி.எஸ்ஸி. என்ற பட்டம் ஒட்டிக்கொள்ளும்.

'இருநூறு நாட்களைக் கடத்தியாக வேண்டுமே?' என்ற கவலைப் பெருமூச்சுடன் நாற்பது நாட்கள் கழிந்தன. கண்களில் பெருகிய கண்ணீர்கூட இன்னும் உலரவில்லை.

'மார்பில் வலிக்கிறதடி...' என்று சுவரில் சாய்ந்து கொண்ட அம்மா அப்புறம் எழுந்திருக்கவில்லை.

மோகனுக்கும் பத்மாவுக்கும் கேசவனுக்கும் இதுவரை அக்காவாக இருந்த சந்திரா, இப்போது அம்மாவாகவும் ஆனாள்.

அன்பு மனோபலத்தைத் தருமே தவிர, வயிற்றுப் பசியைப் போக்காது.

சந்திரா தீர்மானித்து விட்டாள், தன் படிப்பை நிறுத்திவிடுவதென்று. நாளைய தினம் கல்லூரிக்குப் போய், முதல்வரிடமும் தோழிகளிடமும் விடைபெற்றுக் கொண்டு வந்துவிட வேண்டியதுதான்.

* * *

''என்னைப் பார்க்கணும்னு சொன்னீங்களாமே?'' என்று கேட்டுக் கொண்டே தன் தந்தை எதிரில் வந்து நின்றான் பிரேம்குமார்.

''ஆமான்டா, பிரேம்'' என்ற ஜெயகோபாலன், ''உட்காரேன்'' என்றார்.

பிரேம் உட்கார்ந்தான்.

''உங்க கல்லூரியிலே, சந்திரான்னு ஒரு பொண்ணு — பி.எஸ்ஸி. படிக்கிறவள்—உனக்குத் தெரியுமா?''

பிரேம்குமார் விக்கித்துப் போய்விட்டான். சந்திராவைப் பற்றி அப்பாவுக்கு எப்படித் தெரிய வந்தது என்றே அவனுக்குப் புரியவில்லை. இந்த ராமதாஸ்தான் வத்தி வைத்திருப்பான். சந்திராவைக் கல்லூரியில் காணாமல் இவன் தவித்தபோது, அந்தப் பயல் சொன்னான்: 'இருடா. உங்கப்பாவிடம் சொல்லி, உன்னை என்ன செய்கிறேன், பார்!' தொலைபேசியில் அழைத்துச் சொன்னானா, நேரில் வந்து சொன்னானா?...

''என்னடா, பதில் பேசாமலிருக்கே?''

பிரேம் உணர்வு பெற்றான்.

''ஆமாம்ப்பா... வந்து... சந்திரா...அப்படீன்னு ஒரு மாணவி... பார்த்திருக்கேன்.''

''பரபரக்காமல் பதில் சொல்லு. பெண் எப்படி?''

அவன் உஷாராகி விட்டான்.

''எதற்காகக் கேட்கிறீங்க?''

''அட, சொல்லுடான்னா...''

அவன் சொல்லவில்லை.

''நானே சொல்றேன். சந்திரா நல்ல பெண். நல்லாப் படிக்கும். புத்திசாலி. அடக்கம்; அழகு... இப்போ நிராதரவான நிலை. அதாவது சாப்பாட்டுக்கே தாளம்!...''

பிரேம் பிரமித்து விட்டான்.

''காலேஜுக்கு அவளாலே பெருமை. கல்லூரிகளுக்கான பேச்சுப் போட்டியில் ஜயேந்திராவுக்கு வெற்றியைத் தேடித் தந்தவள் சந்திரா....''



இந்த தீபாவளிக்கு 10% விசேட தள்ளுபடி

வண்ணத்துப் பூச்சியின் பிரத்தியேகமான கவர்ச்சி உங்களுக்கு புத்தொளியும், புதுப்பொலிவும் தரும். புத்தம் புதிய கைவிருப்பு- நவீன நாகரிக டிசைன்கள், புரட்சிகரமான மாதிரிகள், ஒவ்வொரு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

புகழ் பெற்ற காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுகள், பரவசம் தரும் பருத்தி ஆடைகள், கிளாசிக் ரெடிமேட் கைத்தறி ஷர்ட்டுகள், மற்றும் பட்டு டைகள் கிடைக்கும்.

வண்ணத்துப்பூச்சி உங்கள் நல்வரவுக்காக நாடெங்கிலுமுள்ள முன்னூற்று ஐம்பது விற்பனை நிலையங்களில் காத்திருக்கிறது.

வண்ணத்துப்பூச்சி 10% விசேட தள்ளுபடியில் தருகிறது. (தள்ளுபடியை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது) தமிழக அரசு ஊழியர்களுக்கு கடன் வசதித் திட்டம் வழக்கம் போல் வழங்கப்படும்.

விசேட தள்ளுபடி 1—10—'72 முதல் 9—11—'72 வரையில்.

கோ-ஆப்டெக்ஸ் **கைத்தறிஆடைகள்**

Criterion CO 2779TMB

பம்பாய் நகர மக்களுக்கு ஒரு நற்செய்தி! தமிழ்ச் சங்க கட்டிடத்தில் நடைபெறும் (1-10-72 முதல் 15-10-72 வரை) கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி பட்டுக்களின் கண்காட்சிக்கு விஜயம் செய்யுங்கள்.


உங்கள் கேசம் உதிரத் தொடங்கினால் அல்லது பொடுகு விழுந்தால்

அதை உடனே நிறுத்துங்கள்!

உற்ற தருணத்தில் கவனித்தால், கேசம் உதிர்வதையும் பொடுகு விழுவதையும் தடுக்கலாம் என்று ஆழ்ந்த பரிசோதனைகள் நிரூபித்துள்ளன

கேசம் உதிரக் காரணம்

கேசத்தின் ஆரோக்கியம் அதன் வேர்களை— மயிர்க்கால்களைப் பொறுத்துள்ளது. வேர்களுக்கு அருகிலுள்ள பாகங்கள் உயிரற்றுப் போனாலும், ரத்தஓட்டம் நின்றாலும் வேர்களுக்கு அவசியமான ஊட்டம் கிடைப்பதில்லை.



அடிக்கடி கேசத்தை சீவினாலும், சோப் போட்டுக் கழுவினாலும், கேசம் பெருமளவில் உதிருகின்றது. கேசம் உதிர்வதற்கு இதுவே அறிகுறி.

ஆபத்தான பொடுகு விழாமல் காத்துக் கொள்ளுங்கள்:

பொடுகு விழுவதைப் புறக்கணிப்பதால்தான் கேசம் உதிரத் தொடங்குகிறது.




கேசம் உதிர்வதையும் பொடுகு விழுவதையும் தடுக்கப்பயனுள்ள வழி



20 ஆண்டுகளுக்கும் மேலாக எஃப். ஹாப்மன்லா ஆய்வுக்கூடத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் நடத்தி, பாந்தினால் என்னும் ஓர் அற்புதமான ஊட்டப் பொருள் கண்டுபிடித்துள்ளார்கள். அந்த ஊட்டப் பொருள் உயிரற்ற செல்களுக்குப் புத்துயிரூட்டுகிறது. இந்த பாந்தினால் கொண்ட பான்டீன் விரைவிலேயே மேலை நாடுகளில் உச்ச விற்பனையுள்ள கேச டானிக்காக விளங்கி விட்டது.

பாந்தினால் கொண்ட பான்டீன் அவசியமான எல்லா மூன்று பாகங்களிலும் செயல் புரிகிறது. (அ) வேர்களின் அருகிலுள்ள பாகத்துக்குப் புத்துயிரூட்டி, போஷாக்கு அளிக்கிறது. இதனால் கேசம் உதிர்வது நின்று விடுகிறது. (ஆ) மண்டைத் தோலை சுத்தம் செய்கிறது; நோய்க் கிருமிகளைக் கொல்லுகிறது; கேசம் உதிர்வதைத் தடுக்கிறது. (இ) மயிர்க்கால்களுக்குப் புத்துயிரளித்து, கேசத்திற்குப் பளபளப்பூட்டுகிறது.



பான்டீனின் வெற்றியின் இரகசியம்- நாள்தோறும் உபயோகியுங்கள்

பான்டீன், மற்ற சாதாரண டானிக்குகளைப் போலன்றி, இலேசாகவும் பிசுக்கற்றும் உள்ளது. இது மண்டைத் தோலுக்கு அடியில் இறங்கி செயலாற்றுகிறது. இதனால் மயிர்க்கால்களுக்கு ஊட்டம் கிடைக்கிறது.

கேசம் உதிர்வதையும் பொடுகு விழுவதையும் தடுக்க சிறந்த வழி, நாள்தோறும் பான்டீன் உபயோகிப்பது.

பான்டீன்—கேசத்திற்கு அவசியமான டானிக், உன்னத அலங்கார சாதனம்

பான்டீன் ஒன்றுதான் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட கேச டானிக். இது கேசத்திற்கு ஊட்டமளிப்பதோடு, உலகின் பிரபல கேச அலங்கார சாதனங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. பான்டீன் உபயோகியுங்கள்; கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்.



பான்டீன்

கேசத்திற்கு ஸ்விட்ஜர்லாந்தின் வைட்டமின் ஃபார்முலா-இந்தியாவில் கிடைக்கிறது.

பிசுக்கற்ற 'எண்ணை கொண்ட ஃபார்முலா

பிரேம் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''நேற்று சாயங்காலம் உங்க பிரின்ஸிபால் வந்திருந்தார், ஆபீசுக்கு. சந்திராவுக்கு வேலை போட்டுக் கொடுக்கணுமாம். அதான் விசாரிச்சேன்.''

பிரேமுக்கு வியர்த்துக் கொட்டியது. அவன் எதையோ நினைத்துக் கொண்டு தவித்துக் கொண்டிருக்கையில் விஷயம் இப்படி ஒன்றுமில்லாமல் பிசுபிசுத்து விட்டதே!

ஆனால், சந்திரா?

அவள் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு வேலையை நாடிப் போகிறாள். இன்னும் ஐந்தே மாதங்கள் படித்தால், பட்டம் பெற்று விடலாம். ஆனால் அவளால் படிப்பைத் தொடர முடியாத நிலை. தங்கை, தம்பிகளுக்கு உணவளித்து, உடையளித்து, பள்ளிக்கு அனுப்பி வைத்து, இவளும் கல்லூரிக்குப் போவதென்பது இயலாத காரியம்.

ஒரு நல்ல மாணவியின் வாழ்க்கை இப்படிப் பாழாக வேண்டியதுதானா?

பிரேம்குமாரின் இதயத்தில் ஓர் ஒளி பளிரிட்டது.

''அப்பா!...''

''என்னடா?''

''சந்திராவுக்கு வேலை கொடுத்துத்தான் உதவ வேண்டும் என்பதில்லை. அவள் தொடர்ந்து படிக்க வசதி செய்வது வருவது கூடப் பேருதவிதான்.''

''நீ என்ன சொல்றே?''

''ஐந்து மாதங்கள் படித்தால் மிஸ் சந்திரா பி.எஸ்ஸி.யாகி விடுவாள். மாதம் நூறு ரூபாய் நமக்குப் பாரமில்லை. கனகராஜ், பழனியப்பன் ஆளுக்கு ஐம்பது ரூபாய் கொடுப்பார்கள். யார் யார் உதவுகிறார்கள் என்பதைக் கூடத் தெரிவிக்காமல், பிரின்ஸிபால் மூலமே சந்திராவுக்குப் பொருளுதவி செய்யலாம். ஐந்தே மாதங்கள், அப்பா...',

ஜெயகோபாலன் இடது கை விரல்களால் முகவாயைத் தடவினார். ''இப்பத்தான்டா நீ எனக்குப் புள்ளே!...''

''தாங்க்யூ, டாடி...''

''ஜமாய்டா, ராஜா!... போய் மேலே ஆகவேண்டியதைப் பாரு. இந்தா, நூறு ரூபாய்.''

ரூபாயைப் பெற்றுக் கொண்ட பிரேம்குமார் 'ஆக வேண்டியதை'ப் பார்க்கச் சென்றான்.

* * *

அகில பாரத அனைத்துக் கல்லூரி பூப்பந்தாட்டப் போட்டியில் ஜயேந்திரா கல்லூரியிலிருந்து சார்லஸ் தலைமையில் சென்றிருந்த அணி மகத்தான வெற்றி பெற்றது. முதல் பரிசும், கழுதும் கோப்பையும் சார்லஸின் அணிக்குக் கிடைத்தன. இதனால் கல்லூரிக்குச் சிறப்பான பெருமை கிடைத்தது. வெற்றி பெற்ற அணியினரின் புகைப்படமும் சார்லஸின் பேட்டியும் பல பத்திரிகைகளில் இடம் பெற்றன.

சார்லஸின் அணியினரை, ஜயேந்திரா கல்லூரி மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்க வேண்டாமா?

கல்லூரி முதல்வர், பாராட்டு விழா பற்றிக் கேள்வியுற்றதும் எரிந்து விழுந்தார். அதற்குக் காரணம் இருந்தது.



''ஜெயில் கைதிகளுக்காக, அலிபாபாவும் 40 திருடர்களும், திருடாதே, மலைக்கள்ளன், 007 ஜேம்ஸ்பாண்ட் சினிமா காட்டப்போறாங்களாம்! வா, அண்ணே! நாமும் போய்ப் பார்க்கலாம்!''

சென்ற வாரத்தில் ஜெயேந்திரா கல்லூரி மாணவர் கோஷ்டி ஒன்று சுற்றுலா சென்றது. வடார்க்காடு மாவட்டத்தில் பூங்காக்கள் நிறைந்த ஓர் அணைக்கட்டில், ஒரு மாலைப் பொழுதைக் கழிப்பதாகத் திட்டம். அங்கேதான் அவமானகரமான அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் கல்லூரி மாணவிகளும் அங்கே வந்திருந்தனர். மாணவர்களில் சிலருக்குப் பித்தம் தலைக்கேறி விட்டது. பெண்களில் சிலரை வம்புக்கிழுத்து, பலாத்காரமாக...

சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் பெயர்கள் வெளியிடப்படவில்லையே தவிர, செய்தி மட்டும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்துவிட்டது.

தன் குடும்பத்தில் ஏற்பட்ட களங்கம்போல் குன்றிப்போனார் கங்காதரன்.

அந்த நிகழ்ச்சி நினைவுகள் இன்னும் மறையவில்லை; அதற்குள் மாணவர்களுக்குப் பாராட்டாம்! கல்லூரி முதல்வர் கலந்துகொள்ள வேண்டுமாம்! வெட்கமில்லை, இவர்களுக்கு?

விளையாட்டு மைதானத்தில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கல்லூரி மாணவ, மாணவிகள் அனைவரும் வந்திருந்தார்கள். கங்காதரனும் வந்தார் — கோபம் தணியாமலேதான்.

கல்லூரி பூப்பந்தாட்டக் குழுவினரைப் பாராட்டி ஐந்து நிமிஷங்களுக்குப் பேசிய பின் கங்காதரனின் குரலில் திடீரென்று கடுமையும் விரக்தியும் புகுந்து கொண்டன. அவர் பேசினார்: ''இந்தக் கல்லூரிக்கும் எனக்கும் இருபது ஆண்டுகளாகத் தொடர்புண்டு. ஆனால் போன வாரம் வரை நான் தலை குனியும்படியான சம்பவம் நிகழ்ந்ததில்லை. எல்லா மாணவிகளையும் உடன் பிறவாச் சகோதரிகளாகக் கருதி நடந்து கொள்ள வேண்டிய மாணவர்கள்...என் நா கூசுகிறது... மனிதப் பண்பிழந்து நடந்து கொண்டதை என்னால் மன்னிக்கவே முடியவில்லை. சமுதாயத்துக்கு நல்ல மக்களை உருவாக்கித் தருவதாகப் பெருமையும் செருக்கும் கொண்டிருந்த நான், தோற்றுப் போய்விட்டதாக உணர்கிறேன். பதவியைத் துறந்து, கழுவாய் தேடிக்கொள்ளலாமா என்றுகூடச் சிற்சில சமயங்களில் எண்ணுகிறேன்...''

மாணவர் கூட்டம் வாயடைத்துப்போய் உட்கார்ந்திருந்தது. வேறு சிலரும் பேசிய பின் சந்திரா பேச முன்வந்தாள்.

"மாணவர்களிடம் அவநம்பிக்கை கொள்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை. அண்மைக் கட்டுச் சம்பவம் குறித்து நம் கல்லூரி முதல்வர் மிகவும் விசாரப்படுகிறார். இந்தச் சம்பவத்துக்காக நாம் மிக மிக வருந்துகிறோம். இரண்டொரு புல்லர்களின் தன்மையை மாணவ சமுதாயத்தின் பொதுப் பண்பாக ஏற்கலாகாது. மாறாக, மாணவர்கள் நல்லவர்கள் என்பதற்கு அழிக்க முடியாத சான்று..." என்று, பத்து விநாடிகள் நிறுத்தி விட்டு, "...நான்!" என்று மார்தட்டினாள் சந்திரா. அவள் குரல் சற்று உயர்ந்து கணீரென்று ஒலித்தது.

"இறைவனைப் பற்றிப் பாடும்போது, 'விறகில் தீயினன், பாலில் படு நெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்' என்றார் அப்பர் பெருமான். மாணவ மனமும் அப்படிப்பட்டது. மேலே சற்றுக் கலங்கலாக இருக்கலாம். அடியில் அத்தனையும் முத்து; பவழம்!

"மூன்று மாதங்களுக்கு முன்பு என்னைப் பார்த்து ஆயிரம் விதமாகச் சீண்டினார்கள் இந்த மாணவர்கள். ஆனால் பெற்றோரை இழந்து, தம்பி, தங்கைகளுடன் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலையில்...என்னைக் காப்பாற்றுபவர்கள், அதே மாணவர்கள்தான்! யார் யார் எப்படி எப்படி உதவுகிறார்கள் என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனால், இன்று நான் உண்ணும் உணவு என் எதிரேயுள்ள உங்களில் யாரோ சிலர் இடும் பிச்சை! உடன் பிறந்த சகோதரன் கூட இவ்வளவு பரிவுடன், அனுதாபத்துடன், அன்புடன் நடந்து கொள்ள மாட்டானே!...

"என்னைமட்டுமல்லாமல் எல்லா மாணவிகளையுமே சகோதரிகளாக மதித்து நடக்கும்படியாக மாணவச் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு நல்ல இதயம் இருக்கிறது; பண்பு இருக்கிறது. ஆனால், ஒரு வித விளையாட்டுப் போக்கு நல்லியல்புகளைத் திரையிட்டிருக்கிறது...."

சந்திராவின் குரலில் ஒரு கம்பீரம் தோன்றியது.

"மாணவச் சகோதரர்களே! உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்: தந்தையை இழந்து, தாயையும் இழந்து, வீட்டுக்காரர் வாடகை பாக்கி கேட்க, மளிகைக் கடைக்காரர் கடன் பட்டியலை நீட்ட, தம்பி, தங்கைகள் 'அக்கா, அக்கா' என்று முந்தானையைப் பிடித்திழுக்க, கையில் திருவோடு ஏந்தி, நடுத்தெருவுக்கு வந்து, 'அம்மா, பிச்சை!' என்று கெஞ்சினால்தான்... எங்களை யெல்லாம் சகோதரிகளாக ஏற்றுக் கொள்வீர்களா? ஒவ்வொரு மாணவிக்கும் இந்த நிலை வந்தால்தான் உங்கள் பால் மனத்தில் நெய்யைக் காண முடியுமா?.. சிந்தித்துப் பாருங்கள், சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள்..."

சட்டென்று பேச்சை முடித்துக் கொண்டு மேடையிலிருந்து இறங்கி விட்டாள் சந்திரா. ஐந்து நிமிஷங்களுக்கு அங்கே பேச்சில்லை. மூச்சில்லை. பேச்சு முடிந்ததும் எழவேண்டிய கரவொலி எழவில்லை. அத்தனை பேர்களுடைய இதயங்களிலும் ஏதோ ஓர் அற்புத சக்தி, தன் முழு ஆற்றலையும் பிரயோகித்துக் கொண்டிருந்தது.

* * *

மறு நாள். காலை ஒன்பதே முக்கால்மணி. கல்லூரியில் தன் அறையில் அமர்ந்திருந்தார், கங்காதரன். மூன்று மாணவர்கள் அவரைக் காண வந்திருப்பதாக அறிவித்தார் உதவியாளர்.

மாணவர்கள்? இப்போது ஏன்? பிற்பகலில் தானே அவரைச் சந்திக்க வேண்டும்? அது தானே நடைமுறை? மாலையில் வந்து பார்க்கச் சொல்லிவிட்டால்...?

"சொன்னேன். முக்கியமான, அவசரமான விஷயம் என்கிறார்கள்; கெஞ்சிக் கேட்கிறார்கள்."

"அப்படியானால் வரட்டும்."

வந்தார்கள்.

அவர்களேதான்! அணைக்கட்டுச் சம்பவத்தின் நாயகர்கள்.

அவர் நினைத்தது சரியாகி விட்டதா? இவர்கள் வருகையே சந்திராவின் தோற்றைய சாட்டையடியின் விளைவுதானா?

"வாட் இஸ் தி மேட்டர்?"

"இந்தக் காகிதத்தைக் கல்லூரி அறிவிப்புப் பலகையில் ஒட்டுவதற்குத் தங்கள் அனுமதியைக் கோரி வந்திருக்கிறோம்..."

"என்ன பேப்பர் அது, என்ன சேதி?"

காகிதம் கைமாறியது. கங்காதரன் அதில் எழுதியிருந்ததைப் படிக்கத் தொடங்கினார். வெறுப்போடு படிக்கத் தொடங்கிய அவர், போகப் போகச் சுறுசுறுப்புப் பெற்றார்; நிமிர்ந்து உட்கார்ந்தார்; புன்னகை பூத்தார்.

"இதெல்லாம் என்னப்பா? நான்... நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவேயில்லை."

"நாங்களும்தான். ஆனால் நாங்கள் உறுதிபூண்டு விட்டோம்..."

"வெரி குட், மை பாய்ஸ். ஐயாம் ஹாப்பி. நீங்கள் போங்கள். அறிவிப்புப் பலகையில் இதை ஒட்டுவதற்கு நானே ஏற்பாடு செய்கிறேன்."

"நன்றி, ஸார்."

அவர்கள் நகர்ந்ததும் உவகை மீதூரச் சுழல் நாற்காலியில் ஒரு ரவுண்டு அடித்தார், கங்காதரன். அவர்கள் தாங்களாகவே தவற்றை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரி எழுதியிருந்தார்கள். எதிர்காலத்தில் எல்லா மாணவிகளையும் சகோதரிகளாகப் பாவிப்பதாய் உறுதி கூறியிருந்தார்கள்.

இடப் பக்கத்து ஜன்னலைத் தாண்டிக் கங்காதரனின் பார்வை ஓடியது. சற்றுத் தொலைவில் கல்லூரியின் உயரமான மணிக்கூண்டு தெரிந்தது. ஆமாம், உயரமானதுதான், அந்த மணிக்கூண்டு.

'மணிக்கூண்டு மட்டும்தானா?... இந்தக் கல்வி நிறுவனம், இதன் மாணவ — மாணவிகள்,... நான்! — எல்லாருமே உயர்ந்து விட்டோம்!..." என்று இறுமாப்புடன் கூறிக் கொண்டார், கங்காதரன்.

மணிக்கூண்டிலிருந்து டிங்...டிங் என்ற ஒலி எழுந்தது.


எழில் கொஞ்சும் எடுப்பான உருவம்
எந்த உழைப்பும் ஆற்றலின் வடிவம்!
2-பாண்டு பிலெட்டினா
புதிய பிலெட்டினா
2-பாண்டுகள், ரூ. 177/-
இளமை ததும்பும் புதுமைப் படைப்பு
பிலிப்ஸ்
CHPA-313-163 Tam

ராஜாஜியின் ஜெயில் டைரி


1921, டிசம்பர் 29உ

மருந்து சாப்பிட்ட போதிலும் ஆஸ்த்மாக் கஷ்டம் என்னைத் தூங்க விடவில்லை. மாலையில் உணவு உண்டதே காரணம் என்று எண்ணுகிறேன். வார்டர்களுக்குள் பெரும் சண்டை ஏற்



பட்டது. நேற்று இரவு பஞ்சம ஜாதியாரான ஒரு வார்டர் என் நண்பர் கௌஸ் சாகேப் பிரார்த்தனை செய்ததைக் கேலி செய்தாராம். அதனால் மகமதியரான மற்றொரு வார்டருக்குக் கோபம் உண்டாகி விட்டது. ஆயினும் அவர் அடக்கி வைத்திருந்த அந்தக் கோபம் காலையில் ஆவேசமாக வீச ஆரம்பித்து விட்டது. பஞ்சமருடைய ஜாதியைக் குறித்து இழிவாகப் பேசினார். அந்தப் பஞ்சம வார்டரோ தாம் சிறுபான்மையோராக இருப்பதால், ஏன் தான் இந்தத் தவற்றைச் செய்தோம் என்று வருத்தப்படுபவர் போல் காணப்பட்டார். ஆனால் முஸல்மானுடைய கோபமோ அடங்குவதா யில்லை. நான் இருவருக்கும் அவர்களுடைய பிழையை விளக்கிச் சொன்னேன். அதன் பிறகு கௌஸ் சாகேப்பின் பிரார்த்தனை விஷயத்தில் யாரும் எந்த விதத்திலும் தலையிடவே யில்லை.

சிறைக்கு உடல் செல்வதால் மட்டும் நன்மை உண்டாகி விட மாட்டாது. சிறைக்குச் செல்வதை நன்மை 'என்று இருதயம் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். கையைக் குலுக்கினாலும், கட்டி அணைத்தாலும் அன்பு அதிகப்படுவது உண்மைதான். அப்படி அதிகப்படுவது இதயத்தால் அன்பு செய்தால்தான். மனத்தில் அன்பில்லாமல் கட்டியணைப்பது வெறும் சடங்கு மாத்திரமேயாகும். அதுபோல் சிறைக்குச் செல்வது தேசபக்தர்கள் செய்யும் காரியம் என்று எண்ணி மட்டும் சிறைக்குச் செல்வதால் நன்மை உண்டாகாது. அடிமை நாட்டில் சிறைக்கு வெளியே இருப்பதனால் உண்டாகும் மன வேதனையின் காரணமாகச் சிறைக்குச் சென்றால்தான் சிறை வாசம் மூலம் சுதந்திரத்தைப் பெற முடியும். அநியாயத்தோடு ஒத்துழைப்பதையும், அடிமைத்தனத்தால் ஏற்படும் மானபங்கத்தையும் இனி மேல் பொறுக்க முடியாது. இதை விடச் சிறை வாழ்வே இன்பமானது. அங்கு சென்றால் அநியாயத்துடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இல்லை. அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாவத்தைச் செய்வதை விடச் சிறையில் ஏற்படும் துன்பங்களை அனுபவிப்பதே மேலானது என்று ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் எண்ணுவார்களானால், அதுதான் உண்மையான தியாகம். அது பலனளிக்காமல் போகாது. அது பலனளிக்க வேண்டுமென்பதே ஆண்டவன் ஆணை. அதனால் உடனடியாக எந்த விதமான நன்மையும் தேசத்துக்கு உண்டாகா விட்டாலும் தேசத்தை அடிமையாக வைத்திருக்கும் அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாவத்தைச் செய்யவில்லை என்ற பரம திருப்தி ஒவ்வொருவருக்கும் உண்



டாகும். அஹிம்ஸா தத்துவத்திடமும் துன்பத்தை ஏற்பதன் மூலம் அநியாயத்தை நீக்க முடியும் என்ற கொள்கையிடமும் நமக்கு நம்பிக்கை இருக்குமானால் நாம் வெற்றியடைந்தே தீருவோம். அநியாயத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாகவே சிறை செல்கின்றோம். சிறையில் எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டப்படுகின்றோமோ, எவ்வளவுக்கெவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகின்றோமோ, எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக நமக்கு வெளியுலகத் தொடர்பு அறுபடுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் அழிக்க விரும்பும் அநியாயத்துடன் தொடர்பு கொள்வதினின்றும் விலகுகிறோம்; அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய தியாகம் நமது லட்சியத்தை அடைவதற்குப் பயன்படும். மேனாட்டில் அநேக தியாகிகள் சுதந்திரத்துக்காகவும் மதத்துக்காகவும் சிறை சென்றிருக்கின்றனர். இருட்டறையில் அடைபட்டிருக்கிறார்கள். சொல்லொணாச் சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்கள். நான் கூறிய தத்துவம்தான் அவர்களுக்கு இத்தகைய காரியங்களை மேற்கொள்வதற்கு வேண்டிய ஆற்றலையும் மன உறுதியையும் அளித்தது. நம்முடைய தேச மக்களும் அவ்விதமே நடப்பார்கள் என்றுதான் தோன்றுகிறது. ஆயினும் அந்தப் பெரியோர்களிடம் காணப்பட்ட மன உறுதியிலும் தியாக புத்தியிலும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இன்னும் நம்மிடம் காணப்படவில்லை. நம்முடைய வெற்றி சிறைக்கு வருபவருடைய எண்ணிக்கையைப் பொறுத்ததன்று. அநியாயத்துடன் ஒத்துழைக்க மாட்டோம் என்று தெளிவாக உணர்ந்து சிறைக்கு வருவதையே பொறுத்திருக்கின்றது. ஏதோ ஒரு பலனை உத்தேசித்துச் சிறையை நிரப்புவதால் எவ்வித பலனும் உண்டாகாது. இந்த அடிமை நிலைமையை என்னால் பொறுக்க முடியாது என்று மனமார உணர்ந்து சிறை செல்வதே அந்த நிலைமையை மாற்றும். இப்பொழுது சிறைக்கு வந்துள்ளவர்களில் எத்தனை பேர் அரசாங்கத்தைத் திணறச் செய்தால் சுதந்திரம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையின் மீது சிறைக்கு வராமல் அடிமை வாழ்வைச் சகிக்க முடியாது என்று மன வெறுப்புக் கொண்டு சிறைக்கு வந்திருக்கிறார்களோ?




பள்ளிகளில் கேள்வித் தாள்களைப் பிரசாரக் கருவிகளாகப் பயன்படுத்தியவர்கள் இப்போது மின்சார வாரியத்திலும் காலடி வைத்திருக்கிறார்கள். அண்மையில் மின்சார வாரியத்தினால் இளநிலை உதவியாளர்களுக்கான நேர்காணல் தேர்வில் விரும்பத் தகாத கேள்விகள் பல கேட்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகளில் சில: ''இரு கருணாநிதியின் மனைவியின் பெயர், அவரது மகன்கள் மகள்கள் ஆகியோரின் பெயர், மு. க. முத்து நடித்த முதல் சினிமாப் படம், அவரோடு கதாநாயகியாக நடித்தவரின் பெயர், சமீபத்தில் பாரத் பட்டம் பெற்ற நடிகர், அவரது நூறாவது படம், திருவாரூரில் உள்ள தொழிற்சாலையின் பெயர்'' — இன்னும் இவை போன்ற எண்ணற்ற கேள்விகள் கேட்கப் பட்டுள்ளன. அரசின் போக்கையும், அரசின் நிர்ப்பந்தத்துக்குப் பணியும் மின்சார வாரியத்தின் அதிகாரிகளின் போக்கையும் விழித்திருக்கும் மக்கள் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் பரிதாபத்துடன் நோக்குகிறேன்.

இராசிபுரம்
22–9–72 இரா. கிருஷ்ணமூர்த்தி

சென்ற வாரம் எங்கள் ஊரில் ஒரு புதிய மதுக் (ஒயின்) கடை ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப விழாவில் உள்ளூர் கழகப் பிரமுகர் ஒருவர் பின்வருமாறு பேசினார்: ''மேல்நாடுகளில் குளிர் அதிகம். அதனால் அங்குள்ள அனைவரும் மது குடிப்பார்கள். அப்படிக் குடிப்பதனால்தான் அங்குள்ள எல்லாரும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தச் சிறந்த பானத்தைக் குடித்தால் அவர்கள் மட்டுமல்ல, நாமும் சந்திர மண்டலத்துக்குப் போகலாம். அது மட்டுமல்ல, அதற்கு மேலும் போகலாம். எனவே, குடிமக்களே! குடியுங்கள் மதுவை!'' என்று அதிபுத்திசாலித்தனமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

மதுவிலக்குப் பிரசாரம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்த கழகம் இன்று மது ஆதரவுப் பிரசாரத்துக்கே இறங்கிவிட்டதே. இனி மேலாவது கழகத் தலைமை தமது கட்சிப் பிரமுகர்களை இப்படிப்பட்ட மது ஆதரவுப் பிரசாரத்தில் ஈடுபடாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளக் கூடாதா?

திருமங்கலம்
23–9–72 ஆர். கே. சர்மா



உண்மைக்கும் ஒத்தாசை தேவை

வி.ஜீ.ஸ்நேகா

இடைகழியில் விட்டிருந்த செருப்பைக் காலில் திணித்துக் கொண்டிருந்தார் பார்த்தசாரதி. அப்பொழுது வெளி வராந்தாவில் அப்பா யாருடனோ பேசிக் கொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது.

"ஐயா உள்ளேதான் இருக்கிறார். என்ன சமாசாரம்?"

"அவசியம் பார்க்கணுமுங்களே!"

"இதோ இப்பவே வரச் சொல்றேன். விஷயத்தைச் சொல்லு."

"வேறொண்ணுமில்லீங்க. மஞ்சக் குப்பம் பக்கத்திலே நான் ஒருத்தர்கிட்டே நோட்டெழுதிக் கொடுத்துப் பணம் வாங்கியிருந்தேனுங்க. இப்போ அவர் நோட்டீஸ் விட்டிருக்காரு!"

"இதில் ஒன்றும் தப்பு இல்லையே. கொடுத்தவன் திருப்பிக் கேட்கிறான். கொடுக்க வேண்டியதுதானே நியாயம்?"

பார்த்தசாரதிக்குப் பரம திருப்தியாக இருந்தது. பரவாயில்லை. அப்பாவுக்குக்கூட உண்மையின் பேரில் அக்கறை வந்திருக்கிறதே, எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு! எதிராளியை அப்பா நியாயமாக மடக்குவது இதுவே முதல் தடவை.

அப்பொழுது வந்திருந்த கட்சிக்காரர் அப்பாவுக்கு விளக்கம் சொன்னார். "கொடுத்துவிட வேண்டியதுதானுங்க. ஆனாலும் செத்துப் போனவனுக்கு ஜாதகம் எழுதி என்னங்க பிரயோசனம்?"

"நீ என்னப்பா சொல்றே?"

"அது காலாவதியான நோட்டுங்க. இப்போ அதற்குக் கண் திறந்து கொள்ள நியாயம் இல்லீங்களேன்னு சொல்ல வந்தேன்."

உலர்ந்து போன சுண்ணாம்பு, ஓட்டு வேலைக்குப் பிரயோஜனப்படுவதில்லைதான். ஊரான் வீட்டுப் பணத்துக்கு ஜனங்கள் எப்படிப் பேயாய்ப் பறக்கிறார்கள்? அடுத்தவன் விழித்துக் கொண்டு விட்டபோது, எதிராளிக்கு ஏன் இவ்வளவு எரிச்சல்?

உண்மை ஜெயிக்கவே கூடாதா?

பார்த்தசாரதிக்கு மனசு பதைத்தது.

"அப்போ, உன் பக்கத்திலேயும் பாயிண்டு இருக்கு." மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. அப்பா கேட்டார்: "எங்கே, அந்த நோட்டை இப்படிக் கொடு, பார்ப்போம்."

நோட்டீஸை வாங்கிப் பார்த்தார். அப்பாவுக்கு முகம் மலர்ந்தது. தொகையும் முழுமையாக ஆயிரம் ரூபாய். அந்த ஓலையை விட்டிருந்த அட்வகேட்டும், ஒரு சமயம் தம் பையன் பார்த்தசாரதியிடம் ஜூனியராய் பிராக்டீஸ் பண்ணிக் கொண்டிருந்தவன் தான். ஏதோ ஒரு வகையில் சமாளிக்க இடமிருப்பதாக அப்பாவுக்கு ஒரு மகிழ்ச்சி.

''விஷயமில்லாம ஒண்ணும் வாதாட வேணுங்க. நீங்க ஜெயிக்கக் கொடுத்துடறேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க, இந்த நிமிஷமே நாலிலே ஒரு பங்கு பணத்தை உங்ககிட்ட சமர்ப்பித்துவிடுகிறேன்.''

பணம் என்று சொன்னவுடன் அப்பாவுக்கு ஆனந்தமாகப் போய்விட்டது. உடனேயே பையனை அழைக்க ஈஸிசேரிலிருந்து எழுந்தார். அதற்குள் —

''உள்ளே இருந்து நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் ஒன்று உன்னைக் கேட்கட்டுமா ?'' என்றார் பார்த்தசாரதி.

'' தாராளமாய்க் கேளுங்க, சாமி !''

''இப்போ உனக்கு நோட்டீசு விட்டிருக்கிறாரே, அந்த வாதியிடம் நீர் நோட்டெழுதிக் கொடுத்துப் பணம் வாங்கியது வாஸ்தவம்தானே.''

'' வாஸ்தவம்தானுங்க.''

''உண்மை இப்படி வெளிப்படையாக உன் மனசுக்கே தெரியும்போது, மனச்சாட்சிக்கு விரோதமாய்ப் பல பொய்களைச் சொல்லிக் கோர்ட்டுக்குப் போறது நியாயமில்லேப்பா.''

''உனக்காக வேண்டுமானால் ஒன்று செய்வோம். உன்னுடைய வாதிக்காக வக்காலத்து எடுத்து உனக்கு நோட்டீஸ் விட்டிருக்கிற வக்கீலைப் போய்ப் பார்ப்போம். கொஞ்ச நேரத்துக்கு முன்னடி, நான் இந்தக் கேஸை ஜெயித்துத் தந்தால் நீ எனக்குக் கொடுப்பதாகச் சொன்னாயே நாலில் ஒரு பங்கு, அதோடு இன்னும் ஒரு பங்கும் சேர்த்து வாதியிடம் கொடுத்து, நீயும் அந்த வாதியும் ராஜியாகப் போகும்படியான ஏற்பாட்டை நான் கிட்டே இருந்து செய்து வைக்கிறேன். வாழ்க்கையில் ஒருத்தருக்கொருத்தர் விரோதமில்லாது சமரசமாகப் போவதுதான் உத்தமம். வம்பு இழுத்துக் கொண்டு போவது அவ்வளவு நல்லதில்லை.''

''என்ன சாமி, இப்படிச் சொல்றீங்க ! நீங்களே எனக்கு எதிரா.....'' என்று இழுத்தார் கட்சிக்காரர். ''சரி. முடிவா சொல்லுங்க, இந்த நோட்டீசுக்கு ஆட்சேபம் தெரிவிச்சு எதிர் நோட்டீஸ் விடுவீங்களா, மாட்டீங்களா ?''

''அதற்கு நான் தயார் இல்லை.''

பார்த்தசாரதி அமைதியாக முகத்தைத் திருப்பிக் கொண்டார். கட்சிக்காரர் கடகடவென்று நடந்து வெளி வாசல் கவரைக் கடந்து கொண்டிருந்தார். இத்தனை நேரமும் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அப்பாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. மகனின் அறிவுத் திறனையும், நேர்மையையும் நினைத்துப் பாராட்டும் நிலையில் அவர் இல்லை. பார்த்தசாரதியின் கன்னம் பழுத்துக் குலுங்கும்படி எழுந்து நாலு அறை 'பளார் பளார்' என்று விட வேண்டும் போலிருந்தது.

'' அடேய், ஸாரதி.''

இந்த வருஷத்தோடு சரியாய் நாற்பத்திரண்டு வயது முடிந்துவிட்ட தம் பிள்ளை பார்த்தசாரதியை இப்படியே விளித்தார்.

''எத்தனையோ நாட்களுக்குப் பிறகு நம் வாசல் தேடி வந்த ஒரு கட்சிக்காரனை நான் எவ்வளவு லாகவமாய் மடக்கி வைத்திருந்தேன் ? அவ்வளவும் பாழாய்ப் போகும்படி, ஒரே விநாடியில் உன்னுடைய முரட்டுத்தனத்தையும் பிடிவாதத்தையும் வெளிப்படுத்தி அவனை விரட்டிவிட்டாயே !''

'' நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். இந்தப் பொய்க்கும் புரட்டுக்கும் ஒத்துப் பாட நான் தயாராக இல்லை. உண்மையான விஷயமானால் என் உழைப்பு முழுவதையும் அதற்காக இறைமாய்ச் செலவிடறேன்.''

''சுத்த பைத்தியக்காரப் பிள்ளையாய் இருக்கிறியே. இப்படி உண்மை, சத்தியம்னு விதண்டாவாதம் பண்ணிக்கிட்டு, வருகிற கட்சிக்காரனையெல்லாம் விரட்டிக்கிட்டிருந்தா, பார்க்கிற நாலு பேர் என்ன நினைப்பா ?''

அப்பாவின் உபதேசத்தைக் கேட்க அப்புறம் பார்த்தசாரதி அங்கே நிற்கவில்லை.

* * *

''மாமாவுக்கு உடம்பு சுகமில்லை என்று நேற்று கோர்ட்டிலே சிலபேர் பேசிக்கொண்டார்கள். அதுதான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன் !'' என்று கூறிக் கொண்டே சங்கரராமன் உள்ளே நுழைந்தான்.

''வியாதி என்று ஒன்றுமில்லை. இவருடைய அப்பா கோபத்தில் இவரிடம் சொல்லிக் கொள்ளாமல் பெரிய பிள்ளையிடம் போய் விட்டார்.. அந்த ஆதங்கம்தான்....''

''இது எல்லோருக்கும் உள்ளதுதான் மாமி. அது சரி, மாமாவுக்கு வெளியில் ஏகப்பட்ட கடன்களாமே வாஸ்தவம்தானா?''

''இப்பொழுதெல்லாம் இவரைத் தேடி ஒரு ஈ எறும்புகூட வருவதில்லை. பின்னே இருக்காதா?''

''அப்படியானால் உண்மைக்கும் சத்தியத்துக்கும் உயிர் இல்லை என்கிறீர்களா, மாமி?''

''அதென்னவோ இங்கு யாரு கண்டா. கடைசியில் பார்க்கப் போனா அந்த இரண்டையும் சொல்லித்தான் வந்த கட்சிக்காரனையெல்லாம் விரட்டியடிச்சுட்டு இப்படி விழுந்து கிடக்கிறார்.''

''சரி மாமி. எனக்குக் கோர்ட்டுக்கு நேரமாச்சு. இந்தப் பழங்களை மாமாகிட்டே கொடுங்க. நான் மறுபடியும் சாயங்காலம் வந்து பார்க்கிறேன்.''

வீடு தேடி வந்தவன் அறைக்குள் வந்து தன்னைப் பார்த்துப் பேசவில்லையே என்று பார்த்தசாரதி துளிக்கூட அவன் பேரில் வருத்தப்படவே யில்லை. தன் குணமறிந்து, தன் நிலைமை தெரிந்து கடைசியில் உள்ளது உள்ளபடியே ஒரு வார்த்தை சொன்னானே, 'அப்படியானால் உண்மைக்கும் சத்தியத்துக்கும் உயிர் இல்லை என்கிறீர்களா மாமி?' என்று. அந்த

ஸ்ரீ காமாக்ஷி லட்சார்ச்சனை

சக்தி பீடங்களில் தலைசிறந்ததான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ காமாக்ஷி அன்னைக்கு நவராத்திரியை முன்னிட்டு அக்டோபர் 7ம் தேதியிலிருந்து 17ந் தேதி முடிய லட்சார்ச்சனை நடக்கிறது. அன்பர்கள் ''ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம்'' என்ற விலாசத்துக்கு ரூ. 10-00 அனுப்பி வைத்து, தங்களது பெயர், நக்ஷத்திரம், கோத்திரம், அர்ச்சனை செய்யவேண்டிய தினம் ஆகியவற்றைக் குறிப்பிட்டால், அவ்விதமே அர்ச்சனை செய்து அவர்களுக்கு அம்மன் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

ஒரு வரியே அவர் நெஞ்சில் நிறைவையும் நிம்மதியையும் நீடித்துக் குடிவைத்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வாசலில் தபால்காரரின் குரல் கேட்டது. ராஜம் மாமிதான் போய் வாங்கி வந்தாள். பார்த்தசாரதியின் பெயருக்கு ஒரு கவர் இருந்தது. அவசரத்தையோடு அதை வாங்கிப் பிரித்த பார்த்தசாரதிக்குக் கண நேரம் கண்கள் ஆடவே இல்லை. தம் பெயரோடு 'கனம்' ஒட்டிக் கொள்ளும் என்று அவன் கனவிலாவது நினைத்திருந்தால் தானே?

*

நாலு நாட்கள் கழித்து கனம் பார்த்தசாரதி ஒரு புது மெருகோடு, பழைய தன் னடக்கத்தோடு பத்து மணி சுமாருக்கு கோர்ட்டுக்குப் புறப்பட்டார். ராஜம் மாமி வாசல்வரை வந்து வழியனுப்பினாள்.

அன்று அவர் வராந்தாவில் நடந்து செல்லும்போது, கோர்ட்டில் ''சைலன்ஸ் சைலன்ஸ்'' என்று டவாலியின் குரல் கேட்டது. கனம் பார்த்தசாரதி நீதிபதியின் ஆசனத்தை நோக்கி நடக்கும்போது உள்ளே ஒரே நிசப்தம்.

அன்றைய தேதி குறிப்பிட்ட வழக்குகளை அவருடைய பார்வைக்கு வைத்தார் குமாஸ்தா. வாதிப் பிரதிவாதியின் வக்கீல் கூண்டில் ஏற்றிக் குறுக்கு விசாரணை நடத்தினார். அந்தக் கேஸிற்கான ஆதாரம் கனம் பார்த்தசாரதியின் முன்னால் வெறும் நமூனாவாகக் கிடந்தது.

''எமது கட்சிக்காரர் உம்மிடம் பணம் வாங்கிச் சுமார் எவ்வளவு நாள் இருக்கும்?'' வக்கீலின் கேள்வி இது.

''சுமாராய்...'' வாதி வாலின் கூரையை அண்ணாந்து வெறித்தார்.

''பரவாயில்லை. வருஷம் மாதம் தேதி நினைவிருக்கா?''

''நல்லா ஞாபகம் இருக்குங்க. 1966வது வருஷம் ஜனவரி மாதம் ஐந்தாம் தேதிங்க.''

''இல்லை. உம்மிடம் அவர் பணம் வாங்கியது 1965ம் வருஷத்தில்தான். 66ல் அவர் வாங்கவில்லை என்கிறேன்.''

''இல்லீங்க. 66ல்தான் வாங்கினார். அவர் வாங்கின பணத்துக்கு நோட்டுக்கூட எழுதிக் கொடுத்திருக்கிறாங்களே.''

''அதுதான் இல்லை என்கிறேன். நீர் அவரிடம் பணம் கொடுத்து நோட்டெழுதி வாங்கியது 1965ல்தான். கால கிரமத்தில், அதாவது உமக்கு இருந்த வரவு செலவு மிகுதியில் நீர் அவரிடம் கொடுத்த பணத்தைக் கேட்க மறந்து போனதினால், கெடு தவறிப் போய்விட்ட பிராமிஸரி நோட்டிற்கு உயிரூட்டுவதற்காக வருஷத்தை நோட்டில் பக்குவமாய்த் திருத்தியிருக்கிறீர்கள் என்று சொல்லுகிறேன்.''

நியாயம் வழங்கும் ஸ்தானத்தில் இருந்த கனம் பார்த்தசாரதிக்கு வழக்கில் கவனம் அழுத்திற்று. ஏற்கனவே இது தமக்கு மனத்தில் பதிந்த கேஸ்தான்.

அறுபத்தைந்திலோ அறுபத்தாறிலோ ஏதோ ஒரு வருஷம் கொடுத்தது உண்மை தானே? வாங்கினவன் அதை ஒப்புக்கொள்ளுகிறபோது இதில் வழக்கென்ன வேண்டிக் கிடக்கிறது? கெடு முடிந்தாலும் முடியாமல் போனாலும் கொடுக்க வேண்டியது கொடுக்க வேண்டியதுதானே? கொடுத்தவன் செத்துப் போக மாட்டானா என்று வாங்கினவன் ஏங்குவதில் அர்த்தமே இல்லை. உண்மை பிழைக்கக் கூடாதென்று இந்த உளுத்துப் போன மனிதர்கள் எப்படியெல்லாம் பிரயாசைப்படுகிறார்கள்?

அப்பொழுது பிரதிவாதியின் வக்கீல் கேட்டுக்கொண்டார். ''கனம் நீதிபதி அவர்கள் பிரதிவாதியாகிய எமது கட்சிக்காரர் வாதிக்கு எழுதிக் கொடுத்த நோட்டில் வருஷம் அடித்துத் திருத்தப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்வையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

பிராமிஸரி நோட்டு நீதிபதியின் பார்வைக்கு வந்தது. கனம் பார்த்தசாரதி கண்ணாடியை நன்றாய் நாசியில் நெரித்துக் கொண்டு பார்த்தார். பிரதிவாதியின் வக்கீல் சொன்ன மாதிரி வருஷ லக்கத்தில் கடைசியாக நின்ற ஐந்து என்ற எண்ணைப் பென்சில் இரேஸராலோ, இல்லை, பிளேடு முனையாலோ லேசாய்ச் சுரண்டி எடுத்துவிட்டு அந்த இடத்தில் ஆறு என்று இலக்கமிட்டிருப்பது தெளிவாய்த் தெரிந்தது.

என்ன இருந்தாலும் காலம் கடந்து போன பிராமிஸரி நோட்டை வருஷத்தைத் திருத்திப் போட்டு கோர்ட்டில் வசூல் செய்ய முன்வந்திருப்பது தப்புத்தான்.

''யெஸ் புரொஸீட்...'' நீதிபதி உத்தரவிட்டார்.

''இப்பொழுதாவது சொல்லுங்கள். நீர் அந்த நோட்டில் வருஷத்தைத் திருத்தியது உண்மைதானே?''

பாவம், உண்மை படும் அவஸ்தையை நீதிபதியால் சகிக்க முடியவில்லை.

வக்கீல் பிடிவாதமாக விரட்டியபோது வாதி நிதானமாகப் பேச ஆரம்பித்தார்.

''ஐயா தவறு நினைக்கிற மாதிரி எல்லாம் நான் தப்புத்தண்டாவான பேர்வழி இல்லீங்க. உண்மையிலேயே சொல்றேங்க. நோட்டெழுதுகிறபோது என்னையும் அறியாம

பெண்மை.
மதிமயக்கும்,
மலைப்பூட்டும்,
மனம் வாட்டும்,
மகிழ்வூட்டும்
பெண்மையின்
பத்துவித
சித்தங்களைப்
படித்தறிந்த
படைப்பு
'மெஃப்ரின்'



மெஃப்ரின்

'மெஃப்ரின்' சேலை அணிபவள்
. மங்கையர்க்கரசியாவாள், உண்மையிலே அது முழு
நிலவாய்த் தழுவும் மோகன கனவே. மென்மையிலே
தென்றல் இழைநெய்த துகிலே, விண்முகிலே.

'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலைகள்,
பாலியெஸ்டர் இழை கலந்த காட்டன் சேலைகள்;
பாலியெஸ்டர் இழை கலந்த உடுப்புத் துணிகள்—
இலேசான லான்கள், கோடை நிழல் படரும்
கேம்ப்ரிக்குகள், கோலாகல நகை மிளிரும்
பாப்ளின்கள்.

மபத்லால் க்ரூப்

AIYARS-M. 287 TM



Interpub/GSC/5/72R Tam

லேயே ஏதோ ஒரு சின்னத் தவறு நடந்து போச்சு. அதையே குறியா வச்சு இப்படி இல்லாத ஒன்றைச் சாதிக்கிறபோது நான் என்னங்க சொல்ல முடியும்?''

''அப்படியானால் நீர் திருத்தியது உண்மை தானே?''


''திருத்தினேன்னு, எப்படித் திருத்தின தாக நினைக்கிறீங்க? உதாரணத்துக்கு வேண்டு மானால் ஒரு விஷயம் சொல்றேன் கேளுங்க. நம்ம வீட்டிலிருந்த தலைப்பெண்ணை இன்னொரு இடத்திலே பிடிச்சுக் கொடுத்திட் டோம்னு வையுங்க. அப்போ, சமய சந்தர்ப் பத்திலே நம்முடைய சில எடுபிடி வேலைக்கு வழக்கம் போல் புருஷன் வீட்டுக்குப் போன பெண்ணின் பெயரைச் சொல்லிக் கூப்பிடற தில்லீங்களா? நாம வேணுமின்னு அப்படிக் கூப்பிடறோம்? அடிக்கடி கூப்பிட்டுக் கூப் பிட்டுப் பழகியதாலே அந்தப் பழக்க தோஷம் அது நம்ம வீட்டிலேயே இருக்கிறதா ஒரு நினைப்பு.

''இதே மாதிரி முந்நூத்திச் சொச்சநாள் புழங்கிக் கையாண்ட வருஷத்தை அவ்வளவு இடும்னு மறந்திட முடியாதில்லீங்களா? நினைப்பு நமக்கு நெஞ்சிலே இருந்தாலும் சட்டென்று கைக்கு வருவது சிரமமில்லீங் களா? அதிலும் நான் அவருக்கிட்ட நோட் டெழுதி வாங்கினது வருஷ ஆரம்பம். புது வருஷம் பிறந்து ஐந்து நாள்தானுங்க ஆகி யிருந்தது. வருஷம் பூராவும் எழுதி வந்த பழக்க தோஷத்திலே புது வருஷம் பிறந்தது கூட நினைவில்லாம ஆறு போடுவதற்கு ஐந்து போட்டுவிட்டேன். அதுதான் நான் தவறிச் செய்தது. அதையும் அவருடைய அனுமதி யோட லேசா ரப்பராலே அழிச்சி ஆறாக்கித் திருத்திட்டேன். இதையெல்லாம் சாதக மாக்கிப் பிற்காலத்திலே இப்படிக் கோர்ட் டிலே சொல்லுவார்னு தெரிஞ்சிருந்தா, அதைக் கிழிச்சு எறிஞ்சிட்டு அப்போதைக்குப் புதுசாகவே நோட்டெழுதி இருப்பேனுங்க.'' வாதி மனம் வருந்தச் சொல்லிக்கொண்டார்.

பேஷ். பரவாயில்லே. உண்மைக்கும் ஓரளவு வலு இருக்கத்தான் செய்கிறது. அது வளைத் துப் பிடித்த அயர்ச்சியில் நிலைகுலைந்து போன வக்கீல், பளிச்சென்று வாதியின் முன் னால் பாய்ந்து, ''இப்போ நான் சொன்ன தெல்லாம் உண்மைதான்னு சத்தியமாச் சொல்லுங்க'' என்று தம் கடைசி அஸ்தி ரத்தையும் விட்டு வாதியைக் கலக்கப் பார்த் தார். வாதி எதற்கும் அஞ்சாமல் ''சத்திய மாய்ச் சொல்றேனுங்க'' என்று விருட்டென மொழிந்தார்.

அப்பொழுதே கனம் பார்த்தசாரதி விழித் தெழுந்துகொண்டு விட்ட உண்மையின் பக் கம் தீர்ப்பெழுதி விட்டார். அந்த இடை நேரத்தில் கோர்ட்டில் இலேசாய்ச் சலசலப்பு கேட்டது. அடுத்ததாக டவாலி போட்ட சைலன்ஸில் அதுவும் மடிந்து போயிற்று.

அடுத்த கேஸ் ஆரம்பமாகப் போகின்ற சமயம். வெளிப்புறத்தில் தம் ஜூனியர் சங்கரராமனின் பழக்கப்பட்ட குரல் கேட்டு, அவன் வெளியிட்ட வார்த்தைகளைக் கேட்டு—தன்னடக்கமான அந்தச் சொற்களைக் கேட்டு விநாடி நேரம் அப்படியே செயலற்றுப்போனார் பார்த்தசாரதி.



''இதோ பாருங்கோ.... வாழ்க்கைங்கறது சைக்கிள் மாதிரி. பெடல் பண்றவன் கணவன். பெடல்தான் மனைவி. காரியர்தான் குழந்தைகள். முன் சக்கர மும் பின் சக்கரமும்தான் சுகங்கறதும் துக்கங்கறதும். எது ரொம்ப போரடிக்கிறேனா?''

''அத்தி....சீக்கிரம் 'பிரேக்'கைப் போடுங்கோ!''



ஒரு ரஷ்யப் பேராசிரியர் தம் நாட்டுப் பெருமை களைப் பற்றித் தம் மாணவர்களிடம் 'அளந்து' கொண்டிருந்தார்.

''ஏற்கனவே இரண்டு செயற்கைச் சந்திரன்கள் அனுப்பி விட்டோம். இன்னும் சில நாட்களிலே நாம் சந்திரனில் குடியேறினால்கூட ஆச்சரியப்படுவ தற்கில்லை. இன்னும் சில வருஷங்களில் செவ்வா யையும் பின்பு வீனஸையும் அடைந்து விடுவோம். பின்பு மற்ற கிரகங்களுக்கும் போய்விடுவோம். ஒரே ஆச்சரியமா இல்லே?''

எல்லோரும் தலையாட்டினர்.

''ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்'' என்றார் பேராசிரியர் பெருந்தன்மையோடு.

ஒரு மாணவன் கைதூக்கினான்.

''ஸார்! அதெல்லாம் இருக்கட்டும். எப்போது நாம் வியன்னா போக முடியும்?'' -புவனராமணி

கேஸை ஜெயித்து நோட்டை டிகிரியாக்கிக் கொடுத்த விஷயத்துக்காகக் கட்சிக்காரர் ஏதோ அவனிடம் சொல்லிக் கொண்டிருந் தார். அப்பொழுது அவன் சொன்னதாவது:

''ரொம்பப் பிரமாதப்படுத்திப் பேசும்படி அப்படி ஒன்றும் உங்களுக்கு நான் பெரிதாய் ஏதும் செய்துவிடவில்லே. பக்கவாதம் வந்த வர்களுக்கு அப்படி இப்படிக் கொஞ்சம் கைத் தாங்கலா உதவ மாட்டோமா, அதுமாதிரி தான். உண்மைக்கு எப்பவுமே சுய தெம்பு கிடையாது. அதற்கு ஒத்தாசையாக நைசா நாலு பொய்களைச் சொல்றதினாலே ஒண்ணும் பாதகமில்லே...''

மேற்கொண்டு சங்கரராமன் சொன்னது எதுவுமே அவர் காதில் விழவில்லை. ஆனால் அவர் எண்ணத்தில் விர்ரென்று சிறகு விரித் துப் பறந்த அந்த நிகழ்ச்சி அவரைப் பூரண மாய்த் திருப்திப்பட வைத்தது. ஓர் சாஸ்வத மான உண்மையின் கிரயம் ஆயிரம் ரூபாய்க் கும் அதிகம் என்பதை உணராமல் பிரதிவாதி யிடமிருந்து யாசகமாய்ப் பாதிப் பணம் வாங் கிக் கொடுக்க நினைத்தேனே. அது எவ்வளவு பெரிய பிசகு என்று புன்னகை செய்து கொண்டார் நீதிபதி பார்த்தசாரதி.

தலையாய கேச ஸ்டைல் கலைஞர்களின் சிபாரிசு:

ட்ரூ-டோன்

ஹேர் டைய்

ஆண் பெண்களுக்கென, உலகில் உன்னத விற்பனை உடைய கேசச் சாயத்தைத் தயாரிப்போரின் படைப்பு.



"எத்தனையோ கேசச் சாய முறைகளை கண்ணோட்டம் பார்த்து விட்டோம். கேசத்திற்கு இயற்கை மெருகும் பளபளப்பும் அளித்து எளிதில் இளமைக் களையினை மீட்பது ட்ரூ-டோன். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் சிபாரிசு செய்வது ட்ரூ-டோன் அன்றி வேறில்லை. இத்தகைய அருமையான தயாரிப்பு ஒன்று உருவாக்கிய உங்களுக்கு நன்றி."

(அல்பி)
லேகல் ஹேர் ஸ்டைலிஸ்ட்,
123 மவுண்டு ரோடு, சென்னை-6.

ட்ரூ-டோன் உங்கள் கேசத்திற்கு உயிர்த் துடிப்புள்ள இளமைப் பொலிவூட்டுகிறது ☐ ஒருசீராகப் பரவியமைகிறது. உடனடியாகச் செயல்படுகிறது ☐ இயற்கை மெருகும் பளபளப்பும் அளிக்கிறது ☐ அடிக்கடி கழுவினாலும் மங்கவோ நிறம் மாறவோ செய்யாது



தயாரிப்போர்:
ஜே.கே.ஹெலன் கர்ட்டிஸ் லிட்,
பம்பாய்-1

ஹெலன் கர்ட்டிஸ்
லண்டன் * பாரிஸ் * நியூயார்க்

தவிரவும் கிடைப்பவை: ஹேர் டைய் உபயோகிப்போருக்கென, தனித்திறமுடன் தயாரிக்கப்பட்ட ட்ரூ-டோன் ஸ்டெயின் ரிமூவர், ட்ரூ-டோன் ஷாம்பூ

ARMS-HC 4472 80.D TM



ரோட்டராக்ட் தலைவர் ராகவன், திருநெல்வேலி ஆஸ்பத்திரிக்கு டாக்டர் லக்ஷ்மணனிடம் 'எக்ஸ் சேஞ்ச் டிரான்ஸ்ஃபியூஷன் செட்' வழங்குகிறார்.

இளைஞர் சமுதாயம்

25. மருத்துவ மாணவர்களின் மாசற்ற சேவை

"பாளையங்கோட்டை பெரிய அரசாங்க ஆஸ்பத்திரியிலுள்ள குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பகுதிக்கு ரத்தம் மாற்றும் கருவி ஒன்று வழங்கினோம். அதன் விலை: ரூ. 600. இதற்கு ஆங்கிலத்தில் Exchange Transfusion Set என்று பெயர். இது அயல்நாட்டுக் கருவிகள் பல கொண்டது. சென்னையில் இணைக்கப் பட்டது'' என்றார் என்னுடன் பேசிக்கொண்டிருந்த இளைஞர்.

'' இதன் உபயோகம் என்ன?'' என்று வினவினேன்.

'' இது குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானது. இந்தக் கருவியினால் புதிய ரத்தத்தை உடலுக்குள் செலுத்தும் போதே இன்னொரு நரம்பின் வழியாகப் பழைய ரத்தத்தை வெளியேற்றிவிட முடியும்.''

'' எந்த நோய்க்கு இது இன்றியமையாதது ?''

'' குழந்தைகளுக்கு வரும் மஞ்சள் காமாலை நோய்க்கு இது மிகவும் பயன்படும். இந்நோய் கண்ட குழந்தைகளை முன்பெல்லாம் மதுரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம். இனி அங்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. இந்தக் கருவி இல்லாத காரணத்தால் பல குழந்தைகள் இறந்து போயின. இனி இந்தக் கருவியின் மூலம் பல குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்ற முடியும். ஆகவேதான் இதைக் குறிப்பிடத்தக்க சேவை என்று கூறி சந்தோஷப்பட்டேன்'' என்றார் அவர்.

திருநெல்வேலி ரோட்டராக்ட் கிளப் அங்கத்தினர்களைக் காலை எட்டு மணி அளவில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியின் மாணவர் நூதன விடுதியில் 'வைத்து'ப் பார்ப்பதாக முன்னமே அவர்களுக்குக் கடிதம் எழுதிவிட்டேன். இந்த மாணவர் விடுதி பாளையங்கோட்டையில் மிகவும் அமைதியான சூழலில் அமைந்திருக்கிறது. சங்க அங்கத்தினர்கள் நாற்பத்தைந்துபேர் இருக்கிறார்கள்.

அங்கத்தினர்களின் அறிமுகப் படலம் முடிந்ததும் சங்கத்தின் வருங்காலத் தலைவரான திரு எம். அண்ணாமலை சங்க நடவடிக்கைகளைப் பற்றி விவரமாகக் கூறினார். அவர் நல்ல வாசாலகர். பிறரை ஈர்க்கும் வண்ணம் கவர்ச்சியாகப் பேசும் கலை அவருக்குக் கைவந்த கலை.

திருநெல்வேலி ரோட்டராக்ட் கிளப்பின் அங்கத்தினர்கள் அனைவரும் மருத்துவக் கல்லூரி மாணவர்களாதலால், நோயாளிகளுக்காகச் செய்யும் சேவையே தலையாய சேவையெனக் கருதுகின்றனர். சங்கத் தலைவர் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டுள்ள

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி ரோட்டராக்ட் கழக அங்கத்தினர்களை திரு ஜோமாஸ் அவர்கள் 21-9-72 அன்று பேட்டி கண்டபோது எடுத்த படம்.



நற்பணி பற்றிக் கூறி முடித்ததும் செயலாளர் தொடர்ந்தார்:

"ராஜபாளையத்தில் பல்நோய் சிகிச்சை முகாம் அமைத்து, ரோட்டராக்ட் கிளப்பின் அங்கத்தினர்கள் ஐவர் (எம். அன்னுமலை, டி. டொமினிக், நவரத்தினம், ஏ. பி. ஜயராஜ் டி. சந்திரமோகன்) அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்து அரும்பணியாற்றினர். அதனை நாங்கள் செய்த சேவைகளுக்குள் மிகவும் பயனுள்ளதாகக் கருதுகிறோம்."

"அதற்கு மக்கள் ஆதரவு கிடைத்ததா?"

"ஆகா! கிடைத்தது. அது மிகவும் வெற்றிகரமான பணியாக முடிந்தது."

"இன்னும் ஏதாவது முக்கியமான சேவை செய்கிறீர்களா?"

"செய்கிறோம். அதுதான் முத்தடுப்பு ஊசி போடுதல். கோடிக்கணக்கான குழந்தைகளின் உயிரைக் கொன்னுகொண்ட தொண்டைக் கட்டு அம்மன், (Diptheria) வில்வாய் ஜன்னி (Tetanus) குத்திருமல் அல்லது கக்குவான் ஆகிய நோய்கள் வராமல் தடுக்கப் போடும் ஊசிகள். ஒவ்வொரு மாத இடைவெளியில் மூன்று ஊசிகள் போட வேண்டும். அப்படிப் போட்டு விட்டால், அக்குழந்தைகளின் ஆயுள் முழுவதற்கும் மேற்படி கொடிய நோய்கள் அண்டுவதில்லை. இந்த வைத்திய சிகிச்சைக்கு விஜயராகவ முதலியார் சத்திரம், ஆரோக்கியநாதபுரம் ஆகிய இரண்டு கிராமங்களைத் தேர்ந்தெடுத்தோம்."

"இந்தத் தடுப்பு ஊசிகளைப் போடக் கிராம மக்கள் இலேசில் சம்மதித்திருக்க மாட்டார்களே!"

"ஆமாம். அவர்கள் இலேசில் சம்மதிக்கவில்லைதான். நாங்கள் முன்னதாகவே அவ்வூர்களுக்குச் சென்று மேற்படி நோய்களின் கொடுமையையும், அதைத் தடுக்கும் முறையையும் விளக்கி அதற்காகவே நாங்கள் அங்கு வருவதாக ஒரு நோட்டீஸ் அச்சிட்டு விநியோகித்து அதற்கு மக்களின் ஆதரவைத் திரட்டினோம். பிறகுதான் மேற்படி ஊர்களில் தடுப்பு ஊசி முகாம் அமைத்தோம். மேற்படி நோட்டீசுகளில், "கைம்மாறு கருதாமல், சேவை மனப்பான்மையுடன் சொந்த லாபம் ஏதும் இல்லாமல் வரும் மருத்துவ மாணவர்களுக்கு ஆதரவு தருவீர், பலன் பெறுவீர்" என்று வெளியிட்டிருந்தோம். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. கிராமத்தில் நூற்று அறுபத்துநாலு குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட முடிந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!"

"இன்னும் ஏதாவது...?"

"....இருக்கிறது. ஓர் ஊனமுள்ள குழந்தைக்கு Walking calipers (நடக்கும் சாதனம்) வாங்கித் தந்திருக்கிறோம். அது ஓர் ஏழைக் குழந்தை. இம்மாதிரி எவ்வளவோ சேவை செய்யலாம். எங்கள் படிப்புக்கு இடையே செய்து வருகிறோம். சேவைகளுக்கு ஆகும் செலவை, நாங்களே நடத்தும் நாடகத்தின் மூலம் வசூலித்தோம்."

"உங்கள் சேவைக்கு ஏதாவது பாராட்டு கிடைத்திருக்கிறதா?"

"கிடைத்திருக்கிறது. Rotary International (U. S. A.) சங்கத்திலிருந்து நற்சான்றிதழ் பெற்றிருக்கிறோம். அகிலத்திந்திய ரோட்டராக்ட் கிளப்புகளின் மாநாடு ஹைதராபாத்தில் மிகச் சிறப்பாகச் சென்ற ஆண்டு நடந்தது. அதில் எங்களுக்கு ஒரு நற்சான்றிதழ் கிடைத்தது. இலங்கையில், கொழும்பு நகரத்தில் ரோட்டராக்ட் கான்பரன்ஸ் மிகச் சிறப்பான முறையில் நடந்தது. அதில் பங்கெடுத்துக் கொண்டோம்."

"நீங்கள் இன்னும் செய்ய இருக்கும் தொண்டுகள்?"

"....நிறைய இருக்கின்றன. முக்கியமாகச் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். AMPULE என்று ஓர் ஆங்கில மாதப் பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறோம். ஊனமுற்றோர்களுக்குச் சேவை செய்ய ஒரு திட்டம் வகுக்கப் போகிறோம். கண்ணழுத்த நோய், Galucoma நீரிழிவு ஆகியவற்றைப் பரிசோதித்து அறிந்து சிகிச்சை செய்ய முகாம்கள் அமைக்கப் போகிறோம். பாளையங் கோட்டையில் கல்விக் கூடங்கள் நிறைய இருக்கின்றன. அங்கு படிக்கும் இளைஞர்களை ஒன்று சேர்க்க ஒரு திட்டம் தீட்டியிருக்கிறோம். எல்லா இளைஞர்களும் ஒன்று சேர்ந்து ஓர் இளைஞர் சமுதாயம் அமைத்துவிட்டால் பொதுநலத் தொண்டுகளை அநாயாசமாகச் செய்யலாமே!"

"கடைசியாகக் குறிப்பிட்டுச் சொல்ல ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"இருக்கிறது. இலங்கையிலிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதய நோய் கண்ட வாலிபனின் ஏழைத் தாய் எழுதிய கடிதம். அது ஒரு கண்ணீர்க் காவியம். அந்நோயை மட்டும் எங்கள் சங்கத்தின் முயற்சியால் குணப்படுத்தி விட்டால் அதை ஒரு பெரிய சாதனையாகத்தான் கூற வேண்டும். வேலூரிலாவது, சென்னையிலாவது வைத்துச் சிகிச்சை செய்ய வேண்டும். பெருஞ் செலவாகும். பெரிய டாக்டர்களின் ஆலோசனையைக் கேட்டறிந்து அந்த இலங்கை வாலிபனை இங்கு வரவழைக்க முயற்சி எடுக்க வேண்டும்....."

இலங்கையைச் சேர்ந்த நோயுற்ற மகனின் பெயர் ஜயலத கர்ணரத்ன. அவனது தாயின் கடிதம் வாஸ்தவமாகவே ஒரு கண்ணீர்க் காவியம்.

திருநெல்வேலி ரோட்டராக்ட் கிளப் அங்கத்தினர்களின் உற்சாகமும் துடிப்பும் பாராட்டத்தக்கவை. பலவிதத்திலும் பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களிடம் நிறைய இருக்கிறது.

"மருத்துவத் துறை தவிர வேறு எந்தப் பொதுச் சேவையும் செய்வதில்லையா?" என்று கேட்டேன்.

உடனே சங்கச் செயலாளர், "ஏன் ஸார், நோய்க்குச் சிகிச்சை செய்வதைவிட வேறு என்ன பொதுப் பணி இருக்க முடியும்? நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இல்லையா? வேறு பல பொதுப் பணிகள் செய்ய ஆட்கள் கிடைப்பார்கள். நோய் தீர்க்கும் பணிக்குத்தான் ஆட்கள் கிடைப்பது சிரமம்!" என்று அழுத்தமாகக் கூறினர்.

நானும் அழுத்தமாகவே அதை ஆமோதித்து விட்டு அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன். —ஸோமாஸ்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் ச/ல 45 சதம் (தபால் செலவு தனி)

மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களுக்கு...மொனேகோ!

பிஸ்கட் ஒன்று-ருசித்துச் சாப்பிடும் விதம் இரண்டு



அப்படியே சாப்பிட மிகவும் அருமையானவை
மனதிற்கு உகந்த பொருள்களை
இட்டு சாப்பிடவும் மிகப்பிரமாதமானவை

மொனேகோ—கரகரப்புமிக்க உப்பு பிஸ்கட்
எந்நேரத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும்
சாப்பிடக் கூடியவை. தாமதம் ஏன்,
இப்பொழுதே மொனேகோ வாங்கி,
இன்பமுடன் சாப்பிடுங்களேன்!

பார்லே மொனேகோ

இந்தியாவின் மிக அதிகமாக
விற்பனையாகும் உப்பு பிஸ்கட்டுகள்



everest/257/byPP tam